# சிந்து இலக்கியம்

பதிப்பாசிரியர்
பழ. முத்தப்பன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
டி. டி. டி.ஐ., தரமணி, சென்னை 600113.

# BIBLIOGRAPHICAL DATA


| | |
|---|---|
| Title of the book | Cintu Ilakkiyam |
| Editor | PL. Muthappan<br>Research Scholar, I. I. T. S.<br>Madras-113. |
| Publisher and Copy right | International Institute of Tamil Studies<br>T. T. T. I., Taramani,<br>Madras-600113. |
| Publication Number | 77 |
| Language | Tamil |
| Edition | First |
| Date of Publication | September 1983 |
| Paper used | 16 k. g D / Demy |
| Size of the book | 21 X 18 cms. |
| Printing type used | 10 Point |
| Number of pages | iv + 164 |
| Number of copies | 2200 |
| Price | Rs. 8/- (Eight Rupees) |
| Printers | Sri Gomathy Achagam<br>Chinnappa Rowther street,<br>Triplicane, Madras-5. |
| Binding | Card Board |
| Artist | Amudone |
| Subject | Tamil literary genre |

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்
இயக்குநர்,
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை-113.

# முன்னுரை

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் அச்சில் இதுவரை வெளி வராத பல நூல்களை வெளிக்கொணர்ந்துள்ளது. அந்த வரிசை யில் 'சிந்து இலக்கியம்' பற்றிய இந்நூலும் வெளிவருகிறது. சிந்து இலக்கியம் பற்றி, திரு பழ. முத்தப்பன் அவர்கள் முதன் முதலில் இலக்கியக் கொள்கைக்குத் தன்னுடைய கட்டுரையை அளித்தார். அது, சிந்து இலக்கியத் தொகுதி ஒன்றினை வெளியிடலாம் என்ற நினைவினைத் தோற்றுவித்தது. அந்நினைப்பின் வெளிப்பாடே 'சிந்து இலக்கியம்' என்ற இந்நூல். இதில் ஐந்து சிந்திலக்கிய நூல்கள் பதிப்பிக்கப் பட்டுள்ளன. அவற்றுள் 'சித்தர் ஆருட நொண்டிச்சிந்து' என்ற நூல் மிகச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில் உள்ள பாம்பு வகைகள், அதன் விஷத்தன்மைகள், அவ்விஷத்தைப் போக்குகின்ற முறைகள், பாம்பின் உணவு, அதன் மணம் என இவ்வாறு பல செய்திகளை அந்நூல் தருகிறது. பொதுவாகச் சிந்து இலக்கியவகையுள் ஒன்றான காவடிச்சிந்து,வழிநடையாகப் பாடப்படுகின்ற ஒரு இலக்கியம்என்ற நிலையில்தான் நாம்நினைப் போம். ஆனால், அவ்வாறு இல்லாமல் சிந்து என்ற வகையைப் பயன்படுத்திப் பல செய்திகளை இந்நூல் தருகிறது. இதுவரை இப்பதிப்பில் உள்ள சிந்து இலக்கியம் எதுவும் வெளிவரவில்லை. இவற்றிற்குரிய ஏடுகள் கேரளப் பல்கலைக் கழகத்தில் உள்ள ஏட்டுச் சுவடிகள் நூலகத்தில் உள்ளனவாகும்.

சிந்து இலக்கியம் பற்றிய ஆய்வு முன்னுரையை 38பக்கங்களில் சிறப்பாகத் தந்துள்ளார். கற்ற அறிஞர், பொதுமக்கள் ஆகி யோர் பயன்படுத்தி, வாழ்க்கையில் பயனும் இன்பமும் பெறக் கூடிய நிலையில் இந்நூல் அமைந்துள்ளது.

சிறந்த முறையில் மிக முயன்று உழைத்து இந்நூலைப் பதிப்பித்து, தேவையான இடங்களில் விளக்கங்களும் தந்து எழுதி உள்ள திரு பழ. முத்தப்பன் அவர்களைப் பாராட்டிப் போற்று கிறேன். திறனுடைய ஆய்வாளர் என்பதை இந்நூலே உணர்த்தும். இது போன்ற இன்னும் பல நல்ல நூல்களைத் தமிழ் உலகிற்கு அவர் தரவேண்டும் என்று விரும்புகிறேன்.

நிறுவனப்பணிகள் அனைத்திற்கும் ஊக்கமும் ஆக்கமும் தரு கின்ற மாண்புமிகு கல்வி அமைச்சர் செ. அரங்கநாயகம் அவர் களுக்கு மிக்க நன்றி உடையோம்.

குறுகிய காலத்தில் சிறப்புற அச்சிட்டுத்தந்த ஸ்ரீ கோமதி அச்சக உரிமையாளர் திரு. சரவணக்குமார் அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

18—3—1983 ச. வே. சுப்பிரமணியன்

# என்னுரை

தமிழரின் அரிய ஏட்டுச் சுவடிகளை இருட்டறையிலிருந்து விடுவித்து வெளியுலகிற்கு அறிமுகப் படுத்தும் புனிதமான பணியினை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. அப்பணியில் நானும் பங்கு கொள்ளும் வாய்ப்பளித்த நிறுவன இயக்குநர் அவர்கட்குப் பெரிதும் நன்றியுடையேன். 26—2—'81 அன்று 77ஆவது இலக்கியக் கொள்கைக் கருத்தரங்கில் 'சிந்து இலக்கியம்' பற்றிப் படித்த கட்டுரை இந்நூலுக்கு அடிகோலியது. இது எனது முதல் முயற்சி. ஏடுகளைப் படியெடுத்துதவிய செல்வி நிர்மலா தேவி அவர்கட்கும் இந்நூல் உருவாக்கத்திற்குப் பெரிதும் துணை நின்ற நண்பர் திரு. மு. இ. அகமது மரைக்காயர் அவர்கட்கும் என் நன்றி.

பழ முத்தப்பன்

# உள்ளுறை


முன்னுரை iii

என்னுரை iv

உள்ளுறை iv

சிந்து இலக்கியம் ஓர் ஆய்வு 1—31

சிந்து—நாட்டுப் புறப்பாடலே 32—38

1. பழனியாண்டவர் காவடிச்சிந்து 39—44
2. கந்தன் மணம்புரி சிந்து 45—61
3. சுப்பிரமணியர் பேரில் சிந்து 62—96
4. சித்தராரூட நொண்டிச் சிந்து 97—136
5. எண்ணெய்ச் சிந்து 137—159

பின்இணைப்பு

1. கிடைத்த சிந்து நூற் குறிப்புகள் 150—159
2. பெயரளவில் மட்டும் தெரிந்த நூல்கள் 160—161
3. சொல்லகராதி 162—164

# சிந்து இலக்கியம்-ஓர் ஆய்வு

ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியத்தில் சிந்து என்ற சொல் இடம் பெற்றுள்ளது. 'அளவும் சிந்தும் வெள்ளைக்குரிய'[1] என்பது அச் சொல் இடம்பெற்ற சூத்திரம் ஆகும். அச் சூத்திரத்தில் அச்சொல் சிந்தடியைக் குறிக்க வந்தது ஆகும். சிந்தடி என்பது மூன்று சீர்களைக் கொண்ட அடியாகும். அவ்வடிகளால் எழுதப்பெற்ற பாடலே சிந்துப் பாடலாகும். அத்தகு பாடல்களைக் கொண்ட நூல்களே சிந்து நூல்கள் எனப்பெறும். இக்காலத்தில் சில சிந்துகளில் அவ்விதி மாற்றமும் பெற்றிருக்கிறது.

சிந்து நூல்கள் - காப்பியங்களைப் போலவோ - புராணங்களைப்போலவோ - அல்லது சிற்றிலக்கியங்களைப் போலவோ - விரிந்த - அல்லது விதிக்கு உட்பட்ட இலக்கியங்கள் அல்ல. இன்னும் சொல்லப்போனால் - பாவின் இலக்கணங்களைக் கூறும் பண்டை பாட்டியல் நூல்களிலே இடம் பெறாத பாட்டு சிந்துப் பாட்டு ஆகும். ஆனால் பண்டைத் தமிழ் மக்கள் உள்ளங்களில் அப்பாட்டு இடம் பெறாமல் போகவில்லை. அவ்வாறாயின் சிந்துப் பாடல்களின் தோற்றம் தான் என்ன? இக்கேள்விக்கு விடை காணல் அத்துணை எளிதன்று.

## சிந்து நூலின் தோற்றம்

மொழிஇயலார் மொழியின் தோற்றத்தைப் பற்றிச் சொல்லும்போது - மனிதன் இன்பக் களிப்பால் தம் எண்ணத்தை வெளிப்படுத்தும் போதுதான் - மொழியெனும் கருவியைப் பயன் படுத்தினான் என்பார்கள்[2]. இதன் பொருள்'உணர்ச்சியே மொழியின் தோற்றத்திற்குக் காரணம்' என்பது ஆகும். அந்த உணர்ச்சியின் வளர்ச்சியே தமிழ் மக்களின் நாட்டுப்புறப் பாடல்கள். இக்காலத்தில் அம்மானை, பள்ளு, குறம், சிந்து, ஒப்பாரி, தாலாட்டு போன்ற நூல் வடிவங்களாக நாட்டுப்புறப் பாடல்கள்

1. தொல்—பொருள். சூ. 370.
2. டாக்டர் மு. வ. மொழிவரலாறு 1975. பக் 240.

அமைந்திருக்கின்றன. ஓசையோடு கருத்து வளமும் பெற்று விளங்கும் அப்பாடல்களில் சிந்து - தெய்வ உணர்ச்சியை வெளிப் படுத்த எழுந்தது ஆகும். சிந்துப் பாடலின் தோற்றத்தை நாம் ஆய்ந்து பார்த்தால் 12ஆம் நூற்றாண்டு நம் கண்முன்னே வரும். ஆம் 12ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஆழ்வார்களின் பாசுரங்களில் தான் சிந்துப் பாடலின் தாக்கம் முதன் முதலில் காணப் பெறுகிறது.

> ''நாரணன் எம்மான் - பாரணங்காளன்
> வாரணம் தொலைத்த காரணன் தானே''[3]

என்ற திருவாய் மொழிப் பாசுரத்தை உதாரணமாகக் காட்ட லாம். இவ்வரிகளில் மூன்று சீர் அமைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. அது போலப் பின்னர் எழுந்த நாட்டுப்புற நூல்களாம் அம்மானை, பள்ளு போன்றவற்றில் சிந்து ஓசை சிறப்பிடம் பெற்று விளங்கியது.

> ''கொண்டல் கோபுரம் அண்டையில் - கூடும்
> கொடிகள் வானம்படிதர மூடும்''[4]

என்ற முக்கூடற் பள்ளு வரிகள் அதற்குச் சான்று ஆகும். பிற் காலத்தில் சிந்து ஓசையை வடலூர் வள்ளற் பெருமான் மொத்தம் 734 பாடல்களில் பயன் படுத்தியுள்ளார். அதுபோலப் பாரதியும் சிந்து ஓசையைப் பயன்படுத்தி 'சிந்துக்குத் தந்தை' என்று பாவேந்தரால் பாராட்டப் பெற்றார். இவற்றை எல்லாம் எண்ணிப் பார்க்கும் போது - தொல்காப்பியர் காலத்தில் அடி வகையில் இருந்த சிந்து – பின்னர் சிந்து ஓசையாக வளர்ந்து - ஆழ்வார்கள் பாடல்களில் சிந்துப் பாவாக மலர்ந்து - வள்ளற் பெருமான் - பாரதி போன்றோரின் கவி வண்ணத்தில் மணம் வீசிப் பெருமை பெற்றது எனத் தெரிகிறது. இத்தகு சிந்துப் பா - பின்னர் தனி நூலாக வடிவெடுத்தது அண்ணாமலை ரெட்டி யார் காலம் தான் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஏனெனின் இன்று வரை நமக்குக் கிடைத்திருக்கும் நூல்களில் அவரின் சிந்து நூலே காலத்தால் முற்பட்டது ஆகும். மேலும் அவர்க்குப் பின்னர் வந்த சிந்து நூலாசிரியர்கள் - தங்கள் நூல்களில் 'இது அண்ணா மலை ரெட்டியார் காவடிச் சிந்து மெட்டு' என்று குறிப்பிட்டிருப் பதும் – அதனை வலியுறுத்தும். எனவே சிந்துப் பாடல்கள் 12 ஆம் நூற்றாண்டில் பிறக்க - சிந்து நூல்கள் 19 ஆம் நூற்றாண்டில் வடிவமாக வந்தன எனலாம்.

---

3. திருவாய்மொழி. 10-5.
4. முக்கூடற் பள்ளு. பாடல். 20.

**நாட்டுப்புறப் பாடல்**

இச்சிந்துப் பாடல்கள் நாட்டுப்புறப் பாடல் வகையைச் சேர்ந்தது தான் என்பது எம் கருத்து. கற்றாரைக் காமுறச் செய்து நாகரிகம், பண்பாடு, பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகிய வற்றின் கொள்கலமாய் அமைந்ததுவே நாட்டுப்புற இலக்கியம் என்பார் ச. வே. சுப்பிரமணியன் அவர்கள்.[5] அத்தகு இலக்கணத் திற்கு ஏற்பவும் - நாட்டுப்புறப் பாடல்கள் பற்றி ஆய்ந்த பிற அறிஞர்களின் கருத்துக் கேற்பவும் சிந்துப் பாடல்கள் அமைந் துள்ளன. எனவே தான் அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்தைப் பதிப்பித்த கு. அழகிரி சாமி அவர்களும்.[6] சிந்துப்பாடல் கள் - நாட்டுப் பாடல்களையும், தெம்மாங்குப் பாடல்களையும் அடிப்படையாகக்கொண்டு சிற்சில மாறுதல்களோடு இயற்றப் பெற்று நாட்டுப் புறப் பாடல்களாகவே விளங்குகின்றன என்கிறார். ஆனால் இன்றைய நாட்டுப்புறப் பாடல் ஆய்வாளர் களோ தங்கள் ஆய்வில் சிந்துப் பாடல்களைச் சேர்த்தனர் இல்லை. அதற்குரிய காரணமும் புலனாகவில்லை. சிந்து நூல் களில் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற கர்நாடக இசைப் பாடல் போன்ற அமைப்பு இருப்பதாலோ - அல்லது ஒப்பாரி, தாலாட்டு போல - மக்களிடை நாளும் வழங்காததாலோ அதனை விட்டுவிட்டனர் போலும். எதுவாக இருப்பினும் நாட்டுப்புறப் பாடல்களின் தாக்கம் உறுதியாக சிந்துப்பாடல்களில் உண்டு. அவையும் நாட்டுப் புறப்பாடல்களைச் சார்ந்தவையே என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**சிந்துப்பாடலின் இலக்கணம்**

இத்தகைய சிந்துப் பாடல்கள் ரெட்டியாரின் காலத்திற்குப் பிறகு - தமிழகத்தில் மிகச் சிறப்பாக வளர்ச்சியுற்றது. அந்த வளர்ச்சியில் சிந்து நூல்கள் பல்கிப் பெருகின. நூல்கள் கணக் கற்றவை வெளிவந்துள்ளன எனவே தான், 'இலக்கியம் கண்டு இலக்கணம் இயம்புதல்' என்ற நன்னூலாரின் கொள்கைப்படி - சிந்து நூல்களுக்கும் இலக்கணம் எழுதப்பட்டு விட்டது. ஆம் - திருவாரூர் இயற்றமிழ்ப் பயிற்றகத்தின் மூலமாக த. சரவணத் தமிழன் என்பார் - 'யாப்பு நூல்' என்ற ஒரு இலக்கண நூலை 1981ல் வெளியிட்டுள்ளார். அந்நூலில் சிந்துவிற்கு அவர் இலக்கணம் கூறியுள்ளார். இதோ அவர் வரையறுத்த சூத்திரம்.

---

5. நாட்டுப்புற இயல் ஆய்வு, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம். 1979. முகவுரை,
6. அண்ணாமலைச் செட்டியார் காவடிச் சிந்து, 1950. முன்னுரை. பக். 15.

முதலடிச் சீர்களும் தனிச்சொல் அன்றி
மறியடிச் சீர்களும் எண் ஒத்துஇருப்பின்
சமநிலைச் சிந்தாம்; ஒன்றின் மற்றொன்றுசீர்
மிகுநிலை யாயின் வியனிலைச் சிந்தாம்.

என்பது அவரின் சூத்திரம்.

இச்சூத்திரத்தால் முதலடியிலேயே தனிச்சொல் பெற்று வருவது சிந்து ஆகும். அடுத்து முதலடியும் அடுத்த அடியும் சீரின் எண்ணிக்கையால் ஒத்து இருப்பின் அது சமநிலைச் சிந்து ஆகும். எண்ணிக்கை வேறுபட்டு இருப்பின் வியனிலைச் சிந்து ஆகும் என்பது பெறப்படுகிறது.

சிந்துப் பாடல்கள் வளர்ந்து சிந்து நூலாக வடிவெடுத்து, இலக்கணமும் பெற்றுள்ளது என்பதை நினைக்கும்போது - சிந்துப் பாடல்களின் சிறப்பு நம்மைத் திகைக்க வைக்கிறது என்றே கூற லாம். இத்தகு வளர்ச்சிக்கு இந்நூல்களின் கருப்பொருளே காரணம் எனலாம். 'நெஞ்சில் நிறைந்து - உள்ளடங்காது - கிளர்ந்து பொங்கி வழிந்தோடும் வலிய உணர்வுகளின் தேக்கமே கவிதை என்பார் வேட்ஸ்வர்த். அவரின் எண்ணத்திற்கேற்ப சிந்து இலக்கியங்கள் - உணர்ச்சியின் வடிவாய், சமுதாயத்தின் உயிர்த் துடிப்பாய் - உண்மையின் பிரதி பலிப்பாய் விளங்கு கின்றன. அத்துடன் நில்லாது காப்பியங்களிலும் சிற்றிலக்கியங் களிலும் காணப்படுகின்ற கற்பனை ஊற்றையும் - கவிதை நயத் தையும்,சொற் சித்திரத்தையும்,நகைப்பின்நிறைவையும்,உண்மை உயர்வையும் சிந்து இலக்கியங்கள் பெற்றுள்ளன. அதனால் தான் சிந்து இலக்கியங்கள் ஒரே மாதிரியான கருத்துக்களைத் தம் கருவாகக் கொள்ளாது, பக்திப் பரவசம், வரலாற்றுக்கதை, வழி நடைக் காட்சி, விபத்தின் துன்பயியல் போன்ற பலதிறப்பட்ட கருத்துக்களைப் பாடுபொருளாகப் பெற்றுள்ளன.

## சிந்து இலக்கியப் படைப்பாளிகள்

இத்தகு கருப் பொருள்களைக் கொண்டு சிந்து இலக்கியம் பாடுவோர் நம் கவனத்திற்கு வருகின்றனர். இத்தகைய கருப் பொருள்களைக் கொண்ட சிந்து இலக்கியங்களைப் படைக்கும் படைப்பாளிகள் சங்கமேறிப் புலமை காட்டிய புலமை வித்தகர் அல்லர். சிந்தனை எனும் தேரேறி சந்தமெனும் குதிரை பூட்டிக் கவியுலகில் உலாவரும் சிறப்புடையவர் ஆவர். காரிகை கற்றுக் கவிபாடாது – பெரும் புலவர்பால் சார்ந்து பாடம் கேட்டுக் கவி எழுதாது தங்கள் இயற்கை அறிவால் இறைவனைப் பாடிக் காவடி தூக்கியவர் ஆவர். நொண்டிச் சிந்து பாடித் தண்டமிழ் வளர்த்தவர் ஆவர். வழிநடைக் காட்சியை வருணனை செய்து

வண்டமிழ்ப் புலவர் ஆனவராவர். சமுதாய அவலம் கண்டு சந்தம்பாடிச் சமுதாயப் புரட்சியை ஏற்படுத்தியவர் ஆவர். ஆம் சிந்துப் படைப்பாளிகள் கற்றறிந்த சான்றோரும் அல்லர். கவியனுபவம் இல்லாத கற்பனையாளரும் அல்லர். அண்ணாமலை ரெட்டியார் முதல் அண்மையில் காலமான விழுப்புரம் வட்டம் தென்னமாதேவி தங்கவேலு என்பார் வரை அறிந்திட்ட சிந்துப் படைப்பாளிகளின் படைப்புகளைப் படிக்கும் போது மேற்கூறப் பட்ட கருத்துகள் புலனாகும். அதே நேரத்தில் சிலர் விதிவிலக் காகவும் காணப் பெறுகின்றனர். சிலர் தம் பதிப்பில் இயற் பெயரோடு அவர்களுக்குரிய அடைமொழிகளையும் சேர்த்துக் கொண்டுள்ளனர். அவ்அடை மொழிகளில் அவர்களின் ஆசிரியர் பெயர்களும் இடம் பெற்றுள்ளன. உடுமலை ஸ்ரீமான் சாபகவி மாணவர் ச. சு. சங்கரலிங்க நாடார், மதுரகவி சேதுமாதவம் பிள்ளையவர்களின் மாணவர்களில் ஒருவரான கனக சபாபதிப் பிள்ளை போன்றோரை அப்பட்டியலில் சேர்க்கலாம். அது போலப் பாடியவர்களின் அடைமொழியாக 'வித்துவான்' என்ற புலமைப் பட்டமும் காணப்பெறுகிறது. வித்துவான் ப. து. வி. திருமால் கோன், வித்துவான் வெ. நா. சபாபதிப் பிள்ளை போன்றோர் அவர்களில் ஒரு சிலராவர். வேறுசிலர் தங்களின் அடைமொழிகளில் சிறப்புப் பட்டங்களைக் குறித்துள்ளனர். அஷ்ட்டாவதானம் சபாபதி முதலியார், நாவன்மை நல்லார் அடிமை பெ. சூ. பாலராஜ்பாஸ்கரன், கவிதாமணி செயலட்சுமி அம்மையார் போல்வர் அவ்வகையினராவர். இச் செய்திகளைக் காணும் போது சிந்துப் படைப்பாளிகளில் ஒரு சிலர் ஆசிரியர் பால் புலமைத்திறம் பெற்றுள்ளனர் என்று தெரிகிறது. இவ் வாறு பல திறப்பட்ட நிலையினில் படைப்பாளிகள் காணப் பட்டாலும் அவர்கள் தங்களைப் போன்றவர்களுக்காக நூல் எழு தாமல் நாட்டுப்புற மக்கள் ஏற்குமாறு எளிய வட்டாரச் சொற் களை அதிகமாகப் பயன்படுத்தி - இன்னும் குறிப்பாகச் சொல்லப் போனால் தங்களை நாட்டுப் புற மக்களாக மாற்றிக் கொண்டு பாடியுள்ளனர் என்று தெரிகிறது.

## சிந்து இலக்கிய வகைகள்

கருப்பொருள் பல திறப்பட்டதால் சிந்து இலக்கியங்களின் வகைகளும் பலவாகக் காணப்பெறுகின்றன. சிந்து ஓசை முதன் முதலில் காவடிச் சிந்தாகத் தான் வடிவம் எடுத்தது. எனவே தான் காவடிச் சிந்து நூல்கள் முதன் முதலில் தமிழகத்தில் உலா வரத் தொடங்கின. ஆதலால் தான் யாப்பு நூல் ஆசிரியரும்

'அசை இயை ஒப்பன காவடிச் சிந்தே'[7] எனக் காவடிச் சிந்திற்கு இலக்கணம் வகுத்திருக்கிறார். அதாவது அசைகள் ஒத்து இயைபுத் தொடை பெற்ற அடிகளைக் கொண்டு விளங்குவது காவடிச் சிந்தாகும் என்பது அதன் பொருளாகும்.

மந்த மேதி உள்ளே எட்டும் - சினை
 வராலும் மேலெழுந்து முட்டும் – போது
மடிசுரந்து கன்றுதனை நினைந்து, கண்ட
 மட்டும் பாலைக் கொட்டும்

என்ற அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்து இலக்கணத்திற் கேறப - அசையும் இயைபுத் தொடையும் பெற்றுவிளங்குவதைக் காணலாம். காலம் செல்லச் செல்ல பாடுபொருள் பல்கிப் பெருக – சிந்தின் வகைகளும் பெருகின. வழிநடைச் சிந்து, நொண்டிச் சிந்து, கொலைச் சிந்து, விபத்துச் சிந்து, நீதிச்சிந்து போன்ற சிந்துகள் தோன்றின.

**காவடிச் சிந்து**

இவற்றில் காவடிச் சிந்து என்பது முத்தமிழ்க் கடவுளாம் முருகனுக்கு, நேர்த்திக் கடன் செலுத்த மயிலிறகுகளால் அலங் கரிக்கப் பட்ட காவடியைத் தோளில் சுமந்து செல்லும் போது பாடப் பெறுவதற்கு எழுந்த சிந்து ஆகும். கிடைத்திருக்கும் இவ் வகைச் சிந்துகளில் அண்ணாமலை ரெட்டியார் பாடிய கழுகு மலை முருகன் காவடிச் சிந்து, பெ. சூ. பாலராஜ பாஸ்கரர் என் பார் பாடிய கந்தன் சந்தக் காவடிச் சிந்து, புரிசை அஷ்ட்டா வதானம் சபாபதி முதலியார் பாடிய திருப்போரூர் கந்தன் காவடிச் சிந்து, திரு கிருஷ்ணப்ப செட்டியார் பதிப்பித்த திருப் போரூர் முருகன் காவடிச் சிந்து, சிவகங்கை நாடு செல்லப் பிள்ளை பாடிய தோங்குவா ஸ்ரீசிவசுப்ர மணியர் காவடிச்சிந்து, பி. என். எஸ் சிவஞான பிள்ளை என்பார் பாடிய புரோம்பு நகர் சிவசுப்ரமணியக் கடவுள் காவடிச் சிந்து, ச. சு. சங்கரலிங்க நாடார் பாடிய மயிலம் சிவசுப்பிரமணியர் செந்தமிழ்ச் சிந்து ஆகியவை குறிப்பிடத்தக்கன ஆகும். இச்சிந்து நூல்களில் முருகப் பெருமானின் பெயர்கள், வரலாறுகள், ஆறுபடை வீடுகளின் பெயர்கள், பெருமைகள் குறிக்கப் பெறுகின்றன. இவை தவிர அகப்பொருட் சுவை இச்சிந்துகளில் முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. ரெட்டியாரின் காவடிச் சிந்தில் மொத்தம் 24

---

7. யாப்பு நூல். இயற்றமிழ் பயிற்றகம். திருவாரூர். 1981. சூ. 136.

பாடல்களில் 15 பாடல்கள் அகச்சுவைத் துறைகளைக் கொண்ட பாடல்களாகும்.

"ஆறுமுக வடி வேலவனே - கலி
யாணம் செய்யவில்லை - சிறிதும்
அச்சம்இல் லாமலே கைச்சூசத்துக்கு
அழைக்கிறாய் என்ன தொல்லை
தாட்டிகம் சேர் கழுகாசல மாநகர்
தங்கும் முரு கோனே - இந்திர
சாலத்தினால் என்னை காலைப் பிடித்தாலும்
சம்மதியேன் நானே!

இது தலைவி ஊடல் கொண்டு பாடிய சிந்துப் பாடல். இத்தகைய அகச்சுவைப் பாடல்கள் ரெட்டியார் காவடிச் சிந்தில் சுவையோடு காணப்பெறுகின்றன. அதுபோல திருப்போரூர் கந்தர் சிந்தில் - முருகன் தான் ஞானசம்பந்தராகப் பிறந்தார் என்ற வரலாறும் கூறப் பெற்றுள்ளது.

சிவபாத இருதயருக்கும்—தேவி பகவதிக்கும்
தவமே யுருவமாகக் கந்தன் சார்ந்து குறைகள் தீர்த்தான்.

என்பது அந்தச் சிந்தில் அதனை மெய்ப்பிக்கும் வரிகளாகும். இவை போன்ற சிறப்புச் செய்திகளும் காவடிச் சிந்தில் இடம் பெற்றுள்ளமை படித்துக் கேட்டு இன்புறத் தக்கதாகும்.

**வரலாற்றுச் சிந்து**

காவடிச் சிந்துகள் மக்கள் உள்ளத்தில் ஏற்றம் பெற்ற பெருமை கண்டு ரெட்டியாருக்குப் பின் வந்த கவிஞர் சிலர் நாட்டில் வழங்கிவந்த புராண வரலாறுகளையும், சமயக் குரவர் வரலாறுகளையும், அக்காவடிச் சிந்துச் சந்த அமைப்பில் பாடியுள்ளனர். அத்தகைய சிந்துகளே வரலாற்றுச் சிந்துகள் எனப் படும். ஆனால் அவற்றில் எடுத்துக் கொண்ட வரலாற்றுச் செய்திகள் முழுமையும் கூறப் பெறவில்லை. எப்பகுதி பாடும் போது கேட்பவர் உள்ளத்தே மகிழ்வூட்டுமோ—அப்பகுதிகளை மட்டும் விரிவாகப் பாடியுள்ளார். உதாரணமாக இராமாயணக் காவடிச் சிந்தில் அவ்வாசிரியர் அயோத்தியா காண்டத்திற்கும், சுந்தர காண்டத்திற்கும் மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து விரிவாகப் பாடியுள்ளார். அவ்வாறே சாவித்திரிக் கும்மிச் சிந்தில் சாவித்திரி—எமன் உரையாடல் பகுதிக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார் அவ்வாசிரியர்.

இவ்வகைச் சிந்தில் விரகாலூர் சுப்பையா பிள்ளை பாடிய கோவலன் சரித்திரத் திருப்புகழ் சிந்து, விஜயபுரம் வித்துவான் வெ. நா. சபாபதிப்பிள்ளை பாடிய இராமாயணத் திருப்புகழ் காவடிச் சிந்து, அஷ்டாவதான சி.ஆ. கனகசபைப்பிள்ளை பாடிய வள்ளி சரித்திரக் கந்தச் சிந்து போன்றவை குறிப்பிடத் தக்கதாகும். திருஞானசம்பந்தர் சரித்திரம் பாடிய ஆசிரியர்—அஞ்சலக அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு ஊதியம் வாங்கியிருக்கிறார். எனவே தான் தன்னைக் குறிக்கும்போது பென்சன் போஷ்ட் மாஸ்டர் தேவார தியாகராஜபிள்ளை என்று குறிப்பிட்டிருக்கிறார். இது அவரின் வரலாற்றையும் சுட்டுகிறது. அப்பெரியார்—தன் சிந்தில் பெரிய புராண வரிகளையும், சம்பந்தரின் தேவார வரிகளையும் இடை இடையே சேர்த்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

**வழிநடைச் சிந்து**

தோளில் காவடி தூக்கிப் பாடிடப் பயன் பெற்ற காவடிச் சிந்து காலப்போக்கில் வளர்ந்து காவடி தூக்கிச் செல்லும் வழியையோ—அல்லது காவடியே இல்லாது ஊர்விட்டு ஊர் செல்லும்போது அவ்வழியில் காணும் இயற்கை வளங்களையோ—செயற்கைக் கட்டிடங்களையோ வருணனை செய்து பாடப் பெறும் நிலையைப் பெற்றது. அதனை வழிநடைச் சிந்து என்று குறித்தனர். பாண்டவர் மங்கலம் சங்கரநாராயண பாரதி அவர்கள் பாடிய கண்டலூர் கார்த்திகை மாதக் கடைச் சோமவார வழிநடைச் சிந்து. கடலூர் கிருஷ்ணப்பச் செட்டியார் பதிப்பித்த பீபில்ஸ் பார்க் வழிநடைச் சிந்து, வீரபத்திரர் என்பார் பாடிய தென்னிந்திய ரயில்வே என்னும் கர்நாடகப் புகைவண்டியின் சிந்து அவற்றில் குறிப்பிடத் தக்கன ஆகும். இவ்வகைச் சிந்துகளில் வழியிடைக் காணப் பெறும் காட்சிகள் ஆசிரியப் பெருமக்களால் நன்கு வருணிக்கப் பெற்றிருப்பது படித்துப் படித்துச் சுவைக்கத் தக்கதாகும். சென்னையிலிருந்து தூத்துக்குடிக்கு ரயிலில் செல்லும் வழியைக் கூறுவது கர்நாடகப் புகைவண்டிச் சிந்து ஆகும். இச்சிந்து ஆசிரியர் இடைப்பட்ட ஊர்களைக் குறிக்கும்போது—அதில் பயணம் செய்தே எழுதியிருப்பாரோ என்றஎண்ணத்தை நம்மிடையே ஏற்படுத்துகிறார்.

டிக்கட்டுகள் வாங்கி இக்கட்டில்லாமலே
பக்குவமாகவே தக்கபடி போவோம்

இவ்வரிகள் டிக்கட் இல்லாமல் பயணம் செய்தல் தவறு என்பதைச் சுட்டுவதோடு—அக்காலத்திலும் அக்குற்றம் நிகழ்ந்

திருக்கிறது என்பதையும் நமக்குச் சுட்டுகிறது எனலாம். மேலும் அதில் ஓர் பகுதி,

மாநிலந்தான் புகழும் மயிலம் எனும் தலத்தில்
கானமயில் மீதேறும் கர்த்தன் இருக்கிறார்
கண்டு பணிந்தால் கர்ம வினைகள் போகும்
வண்டு நிகர் விழியாளே மாங்குயில் மொழியாளே!

என்று அமைந்துள்ளது.

இது தன்னுடன் வரும் பெண்ணிடத்து — (அவள்—மனைவியாக இருக்கவேண்டும்) வழியிலுள்ள நகரவகைகளைக் குறிப்பது ஆகும். இதில் அவரின் சமய உணர்ச்சி வெளிப்படுகிறது. இது போல பீபில்ஸ் பார்க்கு வழிநடைச் சிந்து என்பது மயிலாப்பூர் அறுபத்துமூவர் திருவிழாக்காணச்சென்ற ஒருவர் தன்மனைவியை அழைத்துக்கொண்டு சென்னையைச் சுற்றிவந்த 'வழிநடையை'க் கூறுவது ஆகும். இச்சிந்தில் சென்னை நகரம் முழுமையாக வருணனை செய்யப்பெற்றிருக்கிறது. மத்தியச் சிறைச்சாலையை மனைவிக்குக் காட்டும்போது அவர் உள்ளத்திலிருந்து வரும் கவிதை:

"கள்ளைக் குடித்துவிட்டு கன்னங் களவுகளும்
கண்டபடி சண்டை செய்து பண்டை யடிப்பவர்கள்
துண்டகா தனஞ்செய்யும் துன்மார்க்கர் இருக்கிற
மண்ஜெயில் இதுதான் மாங்குயிலே பாராய்"

இதில் பண்டையடிப்பவர்கள் என்ற வழக்குச் சொல்—கலகம் செய்பவர்என்ற பொருளைத் தருவதாகும். இச்சிந்தின் இறுதியில் அறுபத்துமூவரின் பெயர்களும் அடுக்காகச் சொல்லப்பெற்றிருப்பதுஆசிரியரின் சமயப் பற்றை நன்கு காட்டுகிறது.

## நொண்டிச் சிந்து

தமிழிலக்கிய வகைகளில் நொண்டி நாடகம் என்பதும் ஒன்றாகும். அதற்கு ஒத்த நிலையிலே சிந்து இலக்கியங்களில் நொண்டிச் சிந்து என்றொரு வகை காணப்படுகிறது. நொண்டி நாடகத்தில் ஒற்றைக் காலில் நின்று பாடுவதுபோல இச்சிந்தும் பாடப் பெற்றதா என்பது ஐயத்திற்கு உரியதே. பெரும்பாலும் இவ்வகை நூல்கள் அனைத்தும் முருகன் மீது பாடப்பெற்றதாகக் காணப்படுகின்றன. பாரதி பாடல்கள் போன்ற பிற நூல்களில் நொண்டிச் சிந்து பாவகை பயன்படுத்தப் பெற்றது. இவ்வகை நொண்டிச் சிந்து எனப் பெயர் பெற்றமைக்கு யாப்பமைப்பு காரணமாக இருக்கலாம். எவ்வாறெனில் முதலடியில் மூன்று சீரும் தனிச் சொல்லும் இரண்டாம் அடியில் நான்கு சீருமாக

அமைந்துள்ளது. இரண்டாம் அடிக்கு முதலடி ஒருசீர் குறைந்து நொண்டி போலக் காணப்பெறுகிறது. இவ்வகையில் ஒரு சில நூல்களே கிடைத்துள்ளன. அவற்றில் தங்கவேலு பிள்ளை என்பார் பாடிய எட்டிக்குடி சுவாமி பேரில் எழுதிய நொண்டிச் சிந்து என்னும் வேல் பாட்டு, தேவகோட்டை அரு. பழ. லெ. சின்ன லெட்சுமணன் செட்டியார் பாடிய தனவைசியர் சீர்திருத்த நொண்டிச் சிந்து, குன்றக்குடி குமரன் பேரில் நொண்டிச் சிந்து ஆகியவை குறிப்பிடத் தக்கன ஆகும். வேல் பாட்டு என்னும் நொண்டிச் சிந்து 'வேல் வேல்' என்ற அசைகளையும், வா, வா, என்னும் அசைகளையும் பெற்று விளங்குகிறது.

ஆண்டி மகனாண்டி மலையாண்டி வேல்வேல்
ஆண்டி சிலையாண்டி மகனாண்டியே வா—வா
அபிசேக சாமான்கள் எடுத்து வேல் வேல்
ஆடிவரும் காவடிகள் கண்டிடவும் வா வா.

என்ற பகுதி அச்சிந்தில் இடம் பெற்றதாகும். முன் அடியை விட அடுத்த அடி அசையால் நீண்டிருப்பதை இச்சிந்தில் காண முடிகிறது. எனவே அசையோ சீரோ முதலடியை விட அடுத்த அடி நீண்டிருப்பது நொண்டிச் சிந்தாகும் என்பது பெறப் படுகிறது.

**கதைச்சிந்து**

கந்தனைப் பாட எழுந்த காவடிச் சிந்து - காலப்போக்கில் கதைகள் கூறும் சிந்துகளாக வளர்ந்தது. அக்கதைகளும் பொழுது போக்குக் கதைகளாக அமையவில்லை. உண்மை நிகழ்ச்சிகளை - அதிலும் கொலை நிகழ்ச்சிகளைக் கதையாகப் பாடும் வழக்கம் அமைந்தது. செய்தித்தாளில் வரும் கொலை நிகழ்ச்சிகளும், தாங்கள் வாழும் சுற்றுப் புறத்தில் நிகழ்ந்த கொலை நிகழ்ச்சிகளும் அச்சிந்துக் கவிஞர்களுக்குப் பாடுபொரு ளாக அமைந்தன. திருத்தணி முருகன் திருக்குளத்தில் 6 பேர் தற்கொலைச் சிந்து பாடிய ஆசிரியர் நூலின் இறுதியில் 'எப்போது நடந்தது என்போருக்கு 1970ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 17, 18 ஆம் தேதி பத்திரிக்கையில் பார்க்கவும்' என்று குறித்திருப்பது - செய்தித் தாளில் வரும் நிகழ்ச்சிகள் சிந்து நூலின் பாடு பொருளாக அமைந்தமைக்குச் சான்று ஆகும். அதுபோல 'அண்ணி அற்புதமேரி காதலால் அண்ணனைக் கொன்ற கொலைச் சிந்து' - அந்நூலாசிரியர் வாழ்ந்த கள்ளக் குறிச்சி வட்டத்தில் தன் சிந்துக்கதை நிகழ்ச்சி நிகழ்ந்தது

என்பதை அவ் ஆசிரியரே குறித்துள்ளார். இத்தகைய கொலைச் சிந்துகள் தான் பிற்காலத்தில் பெரிதும் மக்களால் போற்றப் பெற்றன. இப்பொழுது கூட மக்கள் கூடுகின்ற சந்தைத் திடலிலோ - பேருந்து நிலையங்களிலோ - இத்தகைய கொலைச் சிந்துகளை 'டேப்' என்னும் கருவியை ஒலித்துச் சில பாடகர்கள் பாடுவதை நாம் காண முடியும். பாடகர் சிலர் தாமே இவற்றை இயற்றிப் பாடுவதுண்டு. பிறரின் கொலைச் சிந்தைச் சிலர் பாடுவதும் உண்டு.

நமக்கு இப்பொழுது கிடைத்திருக்கும் கொலைச் சிந்துகளில் சிறுமணவூர் முனுசாமி சீடன் மாணிக்கம் என்பார் பாடிய சிதம்பரம் கசாய்கடை கோபாலு நாயகர் கொலைச் சிந்து, விழுப்புரம் - தென்னமாதேவி டி. என். தங்கவேலு பாடிய கோவிந்தம்மாளின் சதி மோசச் சிந்து, வேம்பூண்டி சி. விஸ்வ நாதன் பாடிய அற்புதமேரி காதலால் அண்ணனைக் கொன்ற கொலைச் சிந்து ஆகியவை குறிப்பிடத் தக்கன ஆகும்.

இச் சிந்துகளில் வரலாற்று நிகழ்ச்சிகள், கொலைப்பட்ட, கொலை செய்தவர்களின் பெயர்கள். காரணம், இறுதியில் தீர்ப்பு ஆகியவை இடம் பெற்றுள்ளன.

"கள்ளக்குறிச்சி வட்டம் தொனந்தல் என்ற கிராமம் தானே
தொனந்தல் என்ற கிராமத்தில் நடந்தது பார் இந்தக் கொலை
தேவதாஸ் என்ற பேரு அண்ணனைக் கொலை செய்ததைக்
கேளு"[8]

என்ற இந்தப் பகுதியில் ஊர்ப் பெயரும், கொலை பட்டவர் பெயரும் நமக்கு அறிவிக்கு முகத்தான் ஆசிரியர் பாடியிருப்பது வரலாற்றுச் சான்று தருவதாகவே அமைந்துள்ளது அதுபோல கோபால் நாயகர் கொலைச் சிந்து என்ற சிந்தில்,

"சிதம்பரம் தாலுகாவாம், சித்திரக் குளத்தெருவாம்
பதமாக ஆடருக்கும் பாலன் கோபால் செய்ததைப் பார்"

என்ற பகுதி வட்டம், ஊர்ப் பெயரோடு தொழிலும் காட்டப் படுகிறது.

---

8. அற்புதமேரிக் காதலால் அண்ணனைக் கொன்ற கொலைச் சிந்து

அதுபோலக் கொலை செய்தவர்களுக்குரிய தண்டனைகளையும்கொலைச் சிந்து ஆசிரியர்கள் பாடாமல் விட்டாரில்லை. இதோ ஒரு சான்று:

"நீதிபதி அய்யா பி. பாஸ்கரன் என்பவர்
பாபி குற்றங்களைக் கண்டு ஜட்ஜி ஏது சொன்னார்
நீர் செய்த கோரத்தால் உந்தனுக்கல்லவே
ஆயுள் தண்டனை என்றனரே"

இப்பகுதி தேவதாஸ் கொலைச் சிந்தில் இடம் பெற்றதாகும். இப்பகுதியில் நீதிபதியின் பெயர் கூட அறிவிக்கப்பட்டிருப்பது நூலாசிரியரின் ஆர்வத்தையும் வரலாற்று முறைமையையும் எடுத்தியம்புகிறது. அதுபோல கோவிந்தம்மாளின் சதி மோசத்திற்குக் கொடுக்கப் பெற்ற தண்டனையையும் அச்சிந்து எடுத்துக் காட்டுகிறது. தண்டனை என்ன தெரியுமா? இதோ சிந்தே கூறுகிறது.

'மன்னவனைக் கொல்லத் தானிணைத்து நீங்கள் முன்னாள்
சதித்திட்டம் போட்டதினால் - கன்னியே உங்கள்
இருவருக்கும் தூக்குத்தண்டனை என்றுமே தீர்ப்பளித்தார்'

கணவனைக் கொன்ற காரிகைக்கு இதைவிட ஒரு தண்டனை கொடுக்க முடியுமா? இச்சிந்துப் பகுதி வருங்காலத்தில் நீதி மன்றங்களுக்குக் கூடத் துணை புரியலாம்.

**விபத்துச் சிந்து**

கொலைச் சிந்துகளைப் போலவே செய்தித்தாள் நிகழ்ச்சிகளைக் கொண்டும், அறிந்த செய்திகளைக் கொண்டும் எழுதப்பெறும் மற்றொரு வகைச் சிந்து விபத்துச் சிந்து ஆகும். பெரும்பாலும் ரயில் விபத்துக்கள், தீவிபத்துக்கள், லாரி விபத்துக்கள் சிந்துகளாகப் பாடப்பெற்றுள்ளன. செங்கோட்டை ரயில்வே பரிதாபச் சிந்து, காரமடை விபத்துச் சிந்து, அரியலூர் விபத்துச் சிந்து ஆகிய ரயில் விபத்துச் சிந்துகளும் டி. என். தங்கவேலு பாடிய லாரி விபத்துச் சிந்தும், பீபில்ஸ் பார்க்கிரவுண்டு தீப்பற்றிய சிந்து, வீடூர் அணை உடைந்த சிந்து ஆகியவை இவ்வகைகளில் குறிப்பிடத் தக்கன. இச்சிந்துகளில் ஒரு சிறப்புச் செய்தி - விபத்துகள் நடந்த நாள் துல்லியமாகக் குறிக்கப் பெற்றதாகும். வீடூர் அணை உடைந்த நாள் அச்சிந்தில் கீழ்க்கண்டவாறு குறிக்கப் பெறுகிறது.

"ஆயிரத்தி தொளாயிரத்தி அறுபத்து ஆறாம் ஆண்டிலே
நேயர்கள் நடக்குமிந்த ப்ராபவ வருஷத்திலே
நவம்பர் தேதிரண்டு புதன்கிழமை இரவு"

இப்பகுதியில் ஆங்கில ஆண்டும், தமிழ் ஆண்டும் குறிக்கப் பெற்றுள்ளது குறிப்பிடத் தக்கதாகும் இது தவிர அவ் விபத்துக்களில் ஏற்பட்ட நஷ்டங்கள், துன்புற்றோர் நிலை ஆகியவையும் நூலாசிரியரால் பாடப் பெற்றுள்ளன.

**நீதிச்சிந்து**

இறை வழிபாடு செய்வதற்கும், கதை கூறுவதற்கும், செய்திகளைச் செய்யுள்வடிவத்தில் தருவதற்கும் பயன்பட்ட சிந்து இலக்கியங்கள் சமுதாயம் வாழ்வதற்கும் வழிகாட்டின. அவைகளை நீதிச்சிந்து என நாம் அழைக்கலாம். திருக்குறள் நீதிச்சிந்து, கட்குடிச் சிந்து, ஆத்திச்சூடிச்சிந்து, ஆண்பிள்ளை நீதிச்சிந்து, பெண்புத்திச்சிந்து போன்றவை அவற்றில் குறிப் பிடத் தக்கன. தமிழில் காணப்படும் நீதி இலக்கியங்களுக்கும் இவைகளுக்கும் வேறுபாடு உண்டு. இலக்கியங்கள் உயர்ந்த நடையில் அமைய இவை வழக்கு நடையில் அமைந்துள்ளன.

அன்னிய புருஷர் மெத்த அழகாய் இருந்தாலும்
ஆசை வையாள் நல்ல பதிவிரதை-இல்லாமல்
என்ன சாதியாய் இருந்தாலும் புருஷர் மேல்
இச்சை கொண்டு திரிவாள் தடிக்கழுதை.

என்ற பெண்புத்தி மாலைச் சிந்தும்,

"சொல்லும் தருமங்களில் தன்னால் ஈன்றவரையில்
சுகமுறச் செய்பவன் ஆண்பிள்ளை
நல்ல அகம் வார ஈய்ந்தவன் ஆண்பிள்ளை
கல்லும் உருகப் பாடும் அடியார்களுக்கு உதவாக்
கசடன் எவனே அவன் வீண் பிள்ளை"

என்ற ஆண் பிள்ளை வீண் பிள்ளை சிந்துப் பகுதியும் மேற் கூறிய கருத்தை உண்மையாக்கும். ஆனால் அதே நேரத்தில் சொல்லும் நடையில் உயர்வு இல்லெனினும் சொல்லும் கருத்தில் செம்மை காணப்படுகிறது.

"கட்டின மனைவி தன்னைக்
கண்ணீர் சோர வையாதே
காசு பணம் சேர்த்து
கன்னிகைக் கிட்டலையாதே"

என்றும்,

'பாதகத் தொழிலை பார்க்கவும் ஒண்ணாது
பிறர் மனையின் மேல் பிரியம் வைக்க ஒண்ணாது''

என்றும்,

''மைபுனை கண்ணிதம் வலையிற் சிக்கொண்ணாது
மோசமது செய்து காசைமிகச் சேர்க்கொண்ணாது'

என்றும் கூறுகின்ற ஆத்திச்சூடி நீதிச் சிந்து பொருளால் செம்மை காட்டி பண்டைய ஆத்திச்சூடியிலிருந்து புதியதொரு பாணியை அமைத்துத் தருகிறது.

''கணவன் சம்பாதனையைக் கண்டு
சம்சாரத்தில் கருத்தாயிருப்பவள் பதிவிரதை—
இல்லாமல்
கணவனை மதியாமல் கண்டபடி அழித்து
கடன்கார னாக்குவாள் தடிக்கழுதை''
''காலையிலெழுந்து கணவனடி பணிந்து அவன்
கருத்தைப்போல் நடப்பவள் பதிவிரதை—இல்லாமல்
வேலைக்குச் சோம்பலாய் பாயில் படுத்தபடி
வீண்பொழுதைக் கழிப்பாள் தடிக்கழுதை''

என்ற பெண்புத்தி மாலை என்னும் நீதிச் சிந்துப் பகுதியின் சொற்கள் கடுமையாகக் காணப்பட்டாலும், அதில் கூறப்பெறும் கருத்துக்கள் சமுதாய வாழ்வியலுக்கும் இக்காலத்திற்கும் இன்றியமையாதனவாகவே விளங்குகின்றன. கவிஞர் இச்சிந்தினை எழுதும்போது கடுமை காட்டியிருப்பது பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி பெண் விடுதலைக்கு வெற்றி கிட்டாத காலம். எனவேதான் சில அறிவுரைகளைப் பெண்களுக்குச் சொல்லும்பொழுது மனம் நோகச்செய்யும் சொற்கள் சிலவும் அமைந்து விட்டன போலும்.

திருக்குறள் காவடிச்சிந்து என்ற நூலை எழுதிய பொ. முனியப்பன் திருக்குறளின் அறத்துப் பாலையும் பொருட்பாலையும் சுருக்கிச் சிந்தாகப்பாடியுள்ளார். ஒவ்வோர் அதிகாரத்திற்கும் ஒவ்வொரு பாடல் எழுதியிருக்கிறார். பத்துக் குறட்பாவின் பொருளை ஒரு சிந்தில் அமைத்திருப்பது போற்றுதற்குரித்து.

"யாகாவா ராயினும் நாகாக்க—ஐம்
புலனடக்கித் தீமைகளைப் போக்க—தன்
உயர்நிலையில் திரியாமல் அடங்கியவன்
தோற்றம் நனிபெரிது மலை சிறிது'

என்பது 'அடக்கம் உடைமை' என்ற அதிகாரத்தைச் சுருக்கித் தந்ததாகும். பெரும்பாலும் ஆசிரியர் திருக்குறளில் இடம் பெற்ற சொற்களையே கையாண்டு 'சிந்தை' அழகு செய்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கதாகும். இத்தகைய அறக்கருத்துக்கள் மட்டுமல்லாது, கள் குடித்தல் தவறு என்பதை 'கள்ளுக்கடைச் சிந்து' சிறப்பாக்க் கூறுகிறது. இந்நூல் குடிகாரக் கணவனுக்கும், மனைவிக்கும் இடையே கள் பற்றிய உரையாடல் நடைபெறுவது போல் எழுதப்பெற்றுள்ளது.

"கள்ளை மறந்திடடா குடிகாரப் பாவி
காலையில் குடியாதடா சதிகாரப் பாவி
பிள்ளை குட்டி பொத்தாயோடா சண்டாளப் பாவி
யின்னம் புத்தி வல்லையோடா குடிகாரப் பாவி"

என்று மனைவி கணவனிடம் சொல்வதாகக் கூறப்பெற்றிருக்கிறது.

அதுபோலத் தேவடிச்சிந்து என்ற சிந்து பரத்தையர் ஒழுக்கம் வேண்டா என்பதனைச் சுட்டிக் காட்டுகிறது. இந்நூலை எழுதியவர் யார் என்று தெரிந்தில. இந்நூலில் பல சொற்கள் அவையற் கிளவியாகக் காணப்பெறுகின்றன. அவை நூலிற்கு பெருமை சேர்க்கவில்லை. இத்தகு நிலையில் நீதிச் சிந்துகள் அமைந்து சமுதாயத்தைத் திருத்துவதற்கு நாட்டுப்புறப் பாடல்கள் துணை சேர்க்கின்றன என்பதை நிலை நாட்டுகின்றது.

## நூலின் கட்டமைப்பு

இத்தகைய பலவகைகளைக் கொண்ட சிந்து இலக்கியங்களை ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் நூலின் கட்டமைப்பு நமக்கு நன்கு புலனாகும் சிந்து நூல்களில் வேறுபட்ட ஓசைப் பாக்களே மலிந்திருப்பினும் அவை குளகச் செய்யுள்அமைப்பிலேயே காணப் பெறுகின்றன. குளகச் செய்யுள் என்பது பல பாடல்களைக் கொண்டு விளங்கி ஒரு பொருளையே நிலை நாட்டுவனவாகும். ஒவ்வொரு சிந்து நூலிலும் முதலில் கடவுள் வாழ்த்து அமைந்துள்ளது. பெரும்பாலும் அவ்வாழ்த்து வெண்பா யாப்பிலேயே அமைந்துள்ளது. அவ்வெண்பா விநாயகர் வழிபாடாகவே

காணப் பெறுகிறது. இராமாயணச் சிந்தில் மட்டும் முதலில் திருமால் வணக்கம் காணப்பெறுகிறது. அதுபோல் வள்ளிச் சரித்திரச் சிந்தில் தெய்வ வணக்கங்கள் என்ற தலைப்பில் 12 தெய்வங்களுக்கு வணக்கம் முடிந்ததும் நூல் தொடங்குகிறது. நூலின்செய்திகள் சரித்திரச்சிந்துகளிலும்,விபத்துச் சிந்துகளிலும், கொலைச் சிந்துகளிலும் தொடக்க முதல் இறுதி நிகழ்ச்சிவரை பாடல் எண்ணிக்கையில் குறைந்து அதே நேரத்தில் விரிவாகக் கூறப் பெற்றுள்ளன. காவடிச்சிந்து, நொண்டிச் சிந்து போன்ற வற்றில் பல சந்தங்களில் முருகனின் பெருமை, அவனின் திருத் தலங்களின் பெருமை, வழிபாட்டு முறைகள் ஆகியவை கூறப் பெற்றுள்ளன. இறுதியில் நூலின் செய்தி முடிந்ததும் ஆசிரியன் தன்னைப் பற்றிக் கூறிக்கொள்ளும் தொடர் காணப் பெறுகிறது. இது எதிலும் காணப்பெறா ஒன்று.

> "பெருமாளவர் வந்து சாட்சி சொன்ன கதை
> பிரபல்யமாகவே வேணுமென்று
> சிறுமணவூர் முனிசாமி சீடன் சூளை கோவிந்தசாமி
> பாடியே அச்சிட்டான்"[9]

என்ற பகுதி ஆசிரியர்கள் தம்மைப் பற்றிக் கூறிக்கொள்வதற்கு சான்றாகக் காட்டலாம். நூலின் இறுதியில் அமையும் வாழ்த்துப் பகுதியில் கேட்டவர்கள், பதிப்பித்தவர்கள் போன்றவர்களை வாழ்த்தும் இடம் அமைந்திருப்பது ஆசிரியர்களின் நன்றி யுணர்வைக் காட்டுகிறது எனலாம். இத்துணைப் பகுதிகள் சிந்து நூலில் அமைந்திருப்பினும் நூலின் அமைப்பு சில பக்கங் களையே கொண்டு விளங்குகிறது. பெரும்பாலும் 16 பக்கங் களுக்கு மேல் காணப்பெறவில்லை. அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்து, வள்ளி சரித்திரச் சிந்து என்ற இரு நூல்களே அதிக பாடல்களும் அதிக பக்கங்களும் உடையனவாகத் திகழ் கின்றன.

**பிறமொழிக் கலப்பு**

இலக்கியச் செறிவைக் காட்டிலும் கேட்போராகிய நாட்டுப் புற மக்களையோ, பொது மக்களையோ மனதில் கொண்டு யாக்கப் பெற்றவை சிந்து நூல்கள்—ஆதலால் அந்நூல்களில் பிற நூல்களில் காண இயலா பிறமொழிக் கலப்பு அதிகமாகக் காணப்

---

9. திருப்பதி வெங்கடேசப் பெருமாள் சாட்சிச் சிந்து.

பெறுகிறது. தெம்மாங்கு, தாலாட்டு, ஒப்பாரி போன்றவை களில் காணமுடியாத அளவிற்கு ஆங்கிலச் சொல் கலப்பு சிந்து நூல்களில் பெரிதும் காணப்பெறுகிறது. அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்து, வரலாற்றுச் சிந்து போன்ற சில சிந்துகளில் ஆங்கிலச் சொற்களுக்குப் பதிலாக வடசொல் கலப்பு அளவிற்கு மிகுதியாகக் காணப்பெறுகிறது. அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்தின் காலம் மணிப்பிரவாள நடைக் காலமாதலின் அத்தகு நிலை ஏற்பட்டது போலும். மற்ற காவடிச் சிந்துகளில் போலிஸ்டேசன், கோர்ட், பஸ், லாரி, பீரங்கி, சமன், கலெக்டர், ரயில் போன்ற நடைமுறையில் பயின்று வரும் ஆங்கிலச் சொற்கள் மிகுதியும் காணப்பெறுகின்றன. இச்சொற்கள் பெரும்பாலும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் மக்கள் மத்தியில் பயின்று வந்த காரணத்தால் கவிஞர்களும் தத்தம் நூல்களில் கையாண்டனர் போலும்.

**எளியநடை**

சிந்து நூல்கள் பாடும் புலவர் தங்கள் நூல்களை எழுதியதோடு அல்லாது அவற்றை அச்சில் கொண்டு வந்து தாங்களே விற்பனையும் செய்து வந்தனர். அவ்வாறு விற்பனை செய்யும் பொழுது நூலின் பாடல்களைத் தாங்களே பாடிப் பொருது மக்களைத் தம் வசப்படுத்தி நூல்களை விற்றிருக்கின்றனர். எனவே பாடும்போது மக்களின் மனதில் உணர்வு ஏற்பட வைக்க வேண்டும் என்ற நிலையில் சொற்களை 'அகராதிச் சொற்களாக' அலமக்காது வழக்குச்சொற்களாகவே அமைத்துள்ளனர். எனவே சிந்து நடை வழக்குநடை என்றே கூறலாம்.

கலிகாலத்தின் கொடுமையைப் பாடும் சிந்து இதில் முன்னணியில் நிற்கிறது.

"துரைக்குப் பிறந்தவன் போல் டொப்பி சட்டைகளாச்சி
ஜோடும் செருப்பும் போச்சு பூட்ஸு தூக்கலாச்சி
அடுப்பங்கரையில் கூட இங்கிலீஸ் பேசலாச்சி"

இப்பகுதியில் வழக்குச் சொற்களும், ஆங்கிலச் சொற்களுமே இருப்பதைக் காணலாம்.

"கூட்டத்தைப் பார்த்தாலோ கோர்ட்டு பிடிக்கவில்லை
கேசை விசாரிக்க மனமும் எனக்கில்லை
ரோட்டெல்லாம் ஜனமாக சூழ்ந்திட்டார் பலனில்லை
ருசுப் படுத்தயிங்கே சாட்சியும் வரவில்லை"[10]

---

10. திருப்பதி வெங்கடேசப் பெருமாள் சாட்சிச் சிந்து.

என்ற சிந்துப் பகுதி ஆங்கிலச் சொல்லும் வட சொல்லும் கலந்திருப்பதைக் காட்டும் அதே நேரத்தில் எளிய வழக்குச் சொற்கள் கையாளப் பெற்றிருப்பதையும் காட்டும். கோவலன் சரித்திரத் திருப்புகழ்ச் சிந்து என்ற சிந்து மிகவும் எளிமையாகப் பாடப் பெற்றுள்ளது.

கோவலன்:- "கன்னி நீ தரும் காற்சிலம்பை விற்றுக்
காதலன் நான்வரு வேனே—மனம்
பேதலியாதிரு தேனே"

கண்ணகி:- "நங்கை நான் மனம் நொந்து புண்ணாகிட
நாயகனே செலலாமோ என்ன
ஞாயமிதோ சொலப் போமோ"

என்று கோவலன் கண்ணகி உரையாடல் மிக எளிமையாக அமைந்திருப்பதைக் காணலாம். இத்தகு நிலையில் எளிய நடைதனைக் கொண்டு சிந்து நூல்கள் விளங்கி இலக்கிய நயமும் தருகின்றன.

**யாப்பு**

சிந்து இலக்கியங்களில் சிந்தடி காணப்பெற்றாலும் ஒரு குறிப்பிட்ட பா வகையைக் காணமுடியவில்லை. நமக்குக் கிடைத்திருக்கும் சிந்து நூல்கள் அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்தில் சிந்தியல் வெண்பாவோ, பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற கீர்த்தனை அமைப்போ காணப்பெறவில்லை. பெரும்பாலும் கண்ணி அமைப்பே காணப்பெறுகிறது. சிந்தடியும், அளவடியும் ஆகிய அடி அமைப்பில் தான் அக்கண்ணிகளும் அமைந்துள்ளன.

"அருணகிரி நாவில் பழக்கம்—தரும்
அந்தத் திருப்புகழ் முழக்கம் பல
அடியோர் கணம் மொழிபோதினில் அமராவதி
அறையேன் செவி
அடைக்கும் அண்டம் உடைக்கும்[11]"

இது போன்ற அமைப்பில் தான் பாடல்கள் காணப்பெறுகின்றன. பின்னர் எழுந்தசில சிந்து இலக்கியங்களில் பல்லவி, அனுபல்லவி,

11. பாரதியார் பாடல், கலைமகள் வணக்கம்.

சரணங்கள் என்ற கீர்த்தனை அமைப்பு காணப்படுகிறது. ஆயின் அவை கர்நாடக இசையமைப்பிலிருந்து வேறுபட்டிருக்கின்றன. கர்நாடக இசையமைப்பு நீண்ட ஓசையுடையதாக இருக்க, சிந்து ஓசை குறுகிய நிலையிலேயேதான் காணப் பெறுகிறது.

வேறு சில சிந்து நூல்களில் இரண்டு வரிக் கண்ணிகள் மட்டுமே காணப்பெறுகின்றன.

"யாரைத் துறந்திட்டாலும் எதனைத் துறந்திட்டாலும்
தாரணி சமராபுரிக் கந்தன் தன்னை மறப்பேனோ"

என்ற வரிகள் கந்தர் சிந்துவின் வரிகளாகும். இன்னும் வேறு சில சிந்துகளில் வரிகள் அதிகமாகக் காணப்படுகின்றன. இத்தகு வேறுபாடுகள் காணப்படுவதால் எந்த ஒரு யாப்பையும் சிந்து நூலிற்கு உரியது என வரையறுக்க இயலவில்லை. ஆயின் ஒன்று மட்டும் புலனாகிறது. ஓசைக்கு ஏற்ற சந்தச் சொற்களைக் கோவையாக்கிக் கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்ப் பாடுவதே சிந்து யாப்பு எனலாம். நொண்டிச் சிந்துக்கு மட்டும் முதல் வரிக்கு இரண்டாம் வரி ஒரு சீர் அதிகமாகப் பெறவேண்டும் என்ற மரபு இருக்கிறது.

"வாணியைச் சரண் புகுந்தேன்—அருள்
வாக்களிப்பாள் எனத் திடமிருந்தேன்
வேணிய பெருந்தவத் தாள்—நிலம்
பெயரளவும் பெயர் பெயரா தாள்"

என்ற பாரதி பாடலை எடுத்துக் காட்டாகக் கூறலாம். ஆயின் அடியமைப்பில் இத்தகைய வேறுபாடு காணப்பெற்றாலும் தொடையமைப்பில் இயைபுத்தொடை மட்டும் அனைத்துச் சிந்திலும் இடம் பெற்றிருக்கிறது.

"வீதிதொறும் ஆதி மறைவேதம்—சிவ
வேதியர்கள் ஓது சாமவேதம்"[12]

"சென்னை வடபழனித் தேசன்—என
தன்னை வுளமகிழும் நேசன்"[13]

என்பன போல அமைந்து ஓசைக்கு அழகூட்டுவதை நாம் ஒவ்வொரு சிந்திலும் காணலாம். எனவே சிந்து இலக்கியங்கள்

---

12. ரெட்டியார் காவடிச் சிந்து - 3 - 3.
13. கந்தன் காவடிச் சிந்து - கண்ணி 5

பெரும்பாலும் ஓசையமைப்பாலேயே சீர்மை பெற்று விளங்கு கின்றன.

## பதிப்பு

சிந்து இலக்கியங்களின் கட்டுக்கோப்பையும் எளிய நடையையும் யாப்பமைதியையும் ஆய்வு நோக்கில் கண்ட நாம் அடுத்து சிந்து இலக்கியப் பதிப்புகள்பற்றி காணுதல் வேண்டும். இலக்கிய பதிப்பாளர்களைப் போல வணிக நோக்கில் சிந்து பதிப்பாளர்கள் இல்லை. பெரும்பாலும் சிந்து பாடுகின்ற பெருமக்களே தங்கள் படைப்புகளைப் பதித்திருக்கின்றனர். நாட்டுப்புற மக்களேபெரும் பாலும் சிந்து ஆசிரியர்களாக விளங்கி இருப்பதால் அவர்கள் நகரங்களை நாடி வந்து மிகவும் எளிமையான வெள்ளைக் காகிதத்தில் புத்தக அமைப்பில் அச்சடித்துள்ளனர். அப்பதிப்பு களை அவர்கள் விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பனை செய்யாது தாங்களே கைகளில் ஏந்தி விற்றனர். அதன் காரணத் தால் தான் அப்புத்தகங்கள் விலை கூட ஐம்பது காசுகளுக்கு மேற் படவில்லை. பதிப்பித்தார் விற்றதுபோக எஞ்சியவை நடை பாதைக் கடைகளில், விழாக்காலக் கடைகளில், விலைக்கு விற்கப் படுகின்றன. பதிப்புக்களாக வந்தவை போக இன்னும் எத்தனையோ சிந்துகள் ஏடுகளில் காணப்படுகின்றன. பல சிந்து கள் சென்னை அருங்காட்சி அகத்திலும் திருவனந்தபுரம் அருங் காட்சியகத்திலும் இருக்கின்றன. ஏட்டில் இருப்பனவற்றை நூல் வடிவாக்க வேண்டும் என்னும் உயரிய முயற்சி இப்பொழுது மெல்ல மெல்ல வளர்ந்து வருகிறது. அப்பணியை சென்னை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனமும், தஞ்சைத் தமிழ் பல்கலைக் கழகமும் செய்து வருகின்றன. அது போலச் சிந்து பற்றிய ஆய்வும் இக்காலத்தில் புத்துயிர் பெற்றிருக்கிறது என லாம். தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பழனிப் பேராசிரியர் மாணிக்கம் என்பாரும் திருவனந்தபுரம் பல்கலைக் கழகத்தில் வைத்தியநாதன் என்பாரும் சிந்து பற்றி ஆய்வு செய்து வருகிறார் கள். இத்தகைய செய்திகள் பழங்கலை போற்றிடும் உயர்ந்த செய்திகளாகி நமக்கு மனநிறைவைத் தருகின்றன.

## இலக்கிய உத்திகள்

யாப்பியல் வகையிலோ சிற்றிலக்கிய வகையிலோ இடம் பெறாச் சிந்து நூல்கள் இலக்கிய வகையில் இடம் பெறாது போக வில்லை. பிற நாட்டுப்புறப்பாடல்களைப் போல் ஏட்டில் வாராக் கவிதைகளாக அமைந்து விடாமல் சிந்து பாடல்கள் நூல் வடிவு பெற்றதால் இலக்கியப் பெருமை அடைந்தது எனலாம்.

அது மட்டுமல்லாமல் இலக்கியத்திற்கு வேண்டும் உத்திகளும் அவற்றுள் நிறைந்து காணப்பெறுகின்றன. இலக்கிய உத்திகளாம் வருணனை, உவமை, கற்பனை, உருவகம் போன்ற அணி நலன்கள் சிந்து நூல்களில் பரவிக் கிடக்கின்றன. அவை அனைத்தும் இலக்கிய நயத்தை நாம் துய்த்திட உதவுகின்றன. ஆயின் பிற இலக்கியங்களுக்கும் சிந்து நூல்களுக்கும் நடை அமைப்பில் வேறுபாடு காணப்பெறுகிறது. சிந்து நூல்களில் பிற இலக்கியங்கள் போலல்லாது தொடர்கள் நடைமுறை வழக்கில் தான் இடம் பெற்றுள்ளன.

**வருணனை**

இலக்கிய உத்தியில் சிறப்பிடம் பெறும் வருணனை சிந்து இலக்கியங்களில் சிறப்புறக் காணப்பெறுகிறது.

"வாழை பலாவும் பழஞ்சொரியும்—நல்ல
மாவும் கமுகும் வளம் பெருக்கும்
தாழை மலர்களும் பூச்சொரியும்—நதித்
தாமரை பூத்திடும் மேன்மைகளும்
சோலையில் மாங்குயில் கூவிடுமாம்—வளம்
சொல்லி மயில் விளையாடிடுமாம்
வாலையெனும் சக்க தேவி—கிருபையால்
பாலும் பசுவும் வளர்ந்திடுமாம்.

என்று கட்டபொம்மன் சிந்து பாஞ்சாலங் குறிச்சி வளத்தை வருணிக்கும் போது நம் கண்முன்னே கட்டபொம்மனின் வரலாறு நிழலாடுகிறது. 'சக்கதேவி' என்ற தொடர் அவனின் சமய உணர்வை நினைவூட்டுகிறது.

"தென்னை பலாகமுகு செவ்வாழை மாமரங்கள்
புன்னைய சோரு யின்னும் புகலொணாது சாலையிலே
புதுமையுடனே பட்சி பாடுவதும்
புயலைக் கண்டேமயில்க ளாடுவதும்"

என்று எட்டயபுரத்து ஊர் அழகைத் தேகவியோகச் சிந்து ஆசிரியர் வருணனை செய்யும்போது சங்க இலக்கிய வருணனைகள் நம் நினைவுக்கு வருகின்றன. இவ்வாறு சிந்து இலக்கியங்கள் இயற்கையை மட்டும் வருணனை செய்கின்றன என்று நினைத்தல் வேண்டா. துன்பியல் காட்சிகளையும் வருணனை செய்வதில் சிந்து நூல்கள் தாழ்ந்திடவில்லை,

எட்டப்ப மஹாராஜா இறந்ததைக் கேட்ட மக்களும் அஃறிணைப் பொருள்களும் அழுதன என்பதனைக் கூற அச் சிந்து நூல் ஆசிரியர்,[14]

"ஆடழுக மாடழுக அனேக ஜனம் பார்த்தழுக
நாடழுக பட்டத்தானை நடுத்தெருவில் நின்றழுக
எட்டப்பன் இறந்த சேதி ஏகமாய் எங்கும் பரவ
பட்டணத்து ஜனங்கள் முட்டி முட்டி யழுகுதையோ"

என்று பாடி சிந்து படிப்போரை நெகிழ வைக்கிறார். இப்பகுதி,

"ஆவும் அழுத; அதன் கன்று அழுத; அன்று அலர்ந்த
பூவும் அழுத; புனல்புள் அழுத; கள் ஒழுகும்
காவும் அழுத; களிறு அழுத; கால்வயப்போர்
மாவும் அழுத; அம்மன் னவனை மானவே"[15]

என்ற கம்பரின் கவித் தத்துவத்தைப் பின்பற்றிப் பாடப் பெற்றது என்பதில் ஐயமில்லை. வெள்ளத்தால் ஏற்பட்ட துயர நிகழ்ச்சியைப் படம் பிடித்துக் காட்டுகிறார் ஓர் சிந்து ஆசிரியர். ஆம், அவர்தான் வீடுர் அணை உடைந்த வெள்ளச் சிந்து எழுதிய ஆசிரியர்.[16] அப்பகுதியில் அவர்தம்,வருணனை நம் நினைவுகளை அந்தக் காலக்கட்டத்திற்கு இழுத்துச் செல்கிறது எனலாம்.

"ஆடும் போச்சு மாடும் அறையிலிருந்த பெட்டியும்
போச்சு
ஆப்பை துடுப்பு மத்தும் போச்சு, அண்டா குண்டா
மிதந்து போச்சு
கூடைமுறம் துடைப்பம் போச்சு, கோழிக்குஞ்சு
குமுறிப் போச்சு"

என்ற அச்சிந்துப் பகுதிகள் ஏழை மக்கள் துயரை ஏட்டில் வடித்துக் காட்டுகின்றன. சிறப்பையும் அவலத்தையும் வருணனை செய்யும் சிந்து ஆசிரியர்களில் நம்மை வயிறு குலுங்க சிரிக்க வைப்பவர்களும் உண்டு. சான்றாக,

"வந்ததே பார் கள்ளு வாகனங் கருவாடு
நொந்துயிருந்த பேரை - நெட்டித் தள்ளிக் கொண்டு"

---

14. ப. து. வி. திருமால் கோன்.
15. கம்ப· அயோத்தி நகர் நீங்கு - 98.
16. தென்னமாதேவி டி. என். தங்கவேலு,

"ரகுபதி கடைக்கள்ளு ராவெல்லாம் கொடையுது
ரவுண்டானாக் கள்ளு கிருக்குகள் வாங்குது
பரச்சேரிக் கடைக்கள்ளு பாடுது ஆடுது
பாடுஞ்சுடு காட்டுக்கள்ளு தலைகீழாய்த் துள்ளுது"

என்னும் கள்ளுக்கடைச் சிந்து படிக்கும்போதே நம்மைச் சிரிக்க வைக்கிறது. அதிலும் வாகனத்தைச் சொல்லும்போது கருவாட்டை கூறுவதால் கவிஞரின் ஆற்றலும் வெளிப்படுகிறது. கள்ளுக்கடைகள் எங்கெங்கு இருந்தன என்று சொல்லும்போது சமுதாயத்தின் மறைவிடங்களிலும் கள் விற்கப் பெற்றது என்பதனைச் சுடுகாடு என்ற சொல் மூலம் ஆசிரியர் வெளிப்படுத்தி விடுவது படித்து இன்புறத் தக்கதாகும்.

காலணாச் சீட்டு நடத்தக் கூடாது என்று தடை ஏற்பட்ட போது அதில் நட்டம் ஏற்பட்ட பெண்கள் பாடுவதாக ஓர் வருணனை வருகிறது. இதோ அந்த வருணனை.

"ஆப்பம் விற்று தோசை விற்று ஐந்து வாரம்
பணங்கொடுத்து
போட்ட பணம் கொடுக்க மாட்டேனென்று
சொல்கிறானே தில்லாலோ
பிள்ளை தோசைக் கழுதாலில்லையென்று சொல்லி
விட்டு
பில்லை பில்லையாகத் தந்தேன் பிரட்டு செய்யப்
பார்க்கிறானே தில்லாலோ"[17]

என்பன போன்ற பகுதிகள் ஆசிரியர்களின் கைவண்ணத்தால் நம் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளுகின்றன.

இத்தகைய கற்பனை மட்டும்தான் சிந்து ஆசிரியர்கள் பால் காணப்பெறுகின்றன என்பதில்லை. உண்மை நிகழ்ச்சியை அப்படியே உள்ளபடி கூறும் உயர்வும் அவர்கள் பால் உண்டு. காந்தி மரணச் சிந்து என்ற ஒரு சிந்து அமரகவி ந.பி. கருப்பண்ண பிள்ளை என்பார் பாடி—அய்யம்பாளையம் பாவேந்தர் பாசறை அதனை வெளியிட்டிருக்கிறது. அச்சிந்து ஆசிரியர் மகாத்துமாவின் இறப்பு நிகழ்ச்சியைச் சிறிது கூட மாற்றாமல் உள்ளதை உள்ளபடியே பாடியிருக்கிறார்.

---

17. காலணாச் சீட்டின் விநோதச் சிந்து.

"மன்னன் மகாத்மாவை - மண்டியிட்டே வணக்கம்
பண்ணுவது போலே பாவனை செய்திட்டான்
எண்ணம் தொழுகையில் இருக்கிற வேளையில்
எடுத்தகை மாறாமல் தொடுத்தானே நால்வேட்டு
பட்டுடல் சாய்ந்திட்டார் பாங்குள்ள பேத்திகள்
பாரில் விழாதபடி மார்போடு தாங்கிட்டார்"

என்ற இப்பகுதி அப்படியே அந்தச் கொலை நிகழ்ச்சியைச் சித்திரிக்கிறது. இதுபோல் மகாத்மாவின் இறுதி ஊர்வலத்தை அவ்வாசிரியர் குறிப்பிடும்போது,

"இந்த டில்லி நகரில் - இருபது மைலுக்கு மைல்
எள்ளை வாரி வாரி - இறைத்தாலும் கீழ்விழா
வந்த பெருங்கூட்டம் - கட்டுக் கடங்காது
வல்லவன் காந்தி புகழ் - சொல்லி முடியாது
வண்ணலட்சம் கோடி - அண்ணல் முகம் பார்க்க
வருகிறார் ஓடி

என்றும் பாடும்போது - ஊர்வலக் காட்சி நம் முன்னே கொண்டு வரப்படுகிறது.

இத்தகைய நிலையில் கற்பனையினாலும், கவியுணர்வாலும் சிந்து ஆசிரியர்கள் சிறப்பிடம் பெறுகிறார்கள். நம்மைக் கவி மழையில் நனையவும் வைக்கின்றார்கள்.

**உவமை என்னும் தவலருங் கூத்தி**

சிந்து நூல்களில் உவமை என்னும் தவலருங்கூத்தி அழகு நடை பயில்கிறாள் என்றே கூறலாம். உவமை என்பது உயர்ந்த தன் மேற்றே என்று இலக்கணம்-'விதி' கூறினாலும் சிந்து இலக்கியங்களில் வரும் உவமைகள் உலக வழக்கு நடையைப் பின்பற்றியே வருகின்றன.

முருகன் பால் காதலுள்ள தலைவி ஒருத்திக்குத் தென்றல் துன்பம் தருகிறது. அத்தென்றலை வைதிட எண்ணுகிறாள். அதன் கொடுமையை எண்ணி மனம் வெந்து அதனை வைதிடுகின்றாள்.

"தென்றல் ஒரு சிங்கமே - போலத்
தாக்கவே மயங்கி ஏக்கமாய் மெலிந்தேன் அங்கமே"

என்ற ரெட்டியார் காவடிச் சிந்துப் பகுதியில் தென்றல் - சிங்கம் போன்றது என்று உவமித்துப் பேசப்படுகிறது. பெரும்பாலும் உவமையில் - காட்டு மிருகங்களில் புலி தான் இடம் பெறுதல்

உண்டு. ஆயின் அண்ணாமலை ரெட்டியாரின் தலைவியோ அதனை விடுத்துச் சிங்கத்தையே உவமையாக்குகிறாள். இது புதுமையன்றோ.

வாழ்வியல் பொருள்களை உவமையாகக் கூறுவதில் சிறப்புடையவர்கள் சிந்து நூலாசிரியர்கள். வெள்ளத்தினால் புகை வண்டிப் பாதை சிதைந்து அதில் சென்ற புகை வண்டித் தொடர் விபத்துக்குள்ளாயிற்று. அவ்விபத்தில் மாண்டவரைப் பற்றிக் கூறும்போது, செங்கோட்டை ரயில்வே பரிதாபச் சிந்து ஆசிரியர்,[18]

"ஒன்றுக்கொன்றாய் மோதி உள்ளே இருந்தவர்கள்
ஊறுகாய் போல் நசுக்குண்டு கிடந்தார்கள்"

என்று மாண்டவர் நிலையை ஊறுகாய் என்ற உவமை மூலம் விளக்குகிறார். மானிடர் நசுக்குண்டு உடலின் உறுப்புகள் வெளியில் வந்து கிடக்கும் நிலைக்கு ஊறுகாயை விட வேறு தகுதியான உவமை கூற இயலாது என்றே தோன்றுகிறது.

புகைவண்டி விபத்தைப் பாடும்போது விபத்துக்குள்ளாகப் போகும் புகைவண்டியை,

"காலையஞ் சரைமணி கணகணவே வண்டி
கைலாசபுரம் போலவே ஒயிலாக வருங்காலே"

எனப் பாடி பல உயிரைப் பலி கொள்ளும் புகைவண்டித் தொடரை 'கைலாசரதம் போல' என்று குறிப்பிடுவது காரமடை படுகளச் சிந்தில் காணலாம். இறந்தவரைத் தூக்கிச் செல்லப் பயன்படும் 'பாடை தனை' கைலாசரதம் எனப் பாங்காக வழங்குவது உண்டு. அதனை நினைவில் கொண்டு ஆசிரியர் அச்சொல்லைப் பயன்படுத்தியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

அதுபோல ஆன்றோர் ஒருவர் இறந்த செய்தியை அறிவிக்கத் தந்தி அடிக்கப் பெற்றதை "இறந்த வைபவச் சிந்து" ஆசிரியர் குறிப்பிடும்போது, 'காகம் போல் தந்தி பறந்திடவும் அதனைக் கண்டனர் செட்டிகள்' என்று தந்தி சென்றதைக் காகம் போல் என்ற உவமையால் குறிப்பிடுகிறார். பண்டைக் காலத்தில் அஞ்சல் பணிகளைச் செய்யப் புறாக்களைப் பயன்படுத்தினர். ஆசிரியரோ காக்கையைக் குறிப்பிடுகிறார். இறப்புச்செய்தியைக் கருமை நிறம் கொண்டு குறிக்க வேண்டும் என்பதால் காக்கையைக் குறித்திருக்கலாம் எனத் தோன்றுகிறது.

18. கே. எஸ். செயலெட்சுமி அம்மாள்.

அவலச் சுவை கூறுவதில் மட்டும்தான் உவமைச் சிறப்பைக் கையாளுகின்றனர் என்பதல்ல, காதல் சுவையிலும் சிந்து ஆசிரியர்கள் உவமைப் பெண்ணை உலா வரச் செய்கிறார்கள். பாங்கி தலைவனிடத்தில் தலைவியின் அங்கங்களை உவமை வாயிலாகக் கூறுகிறாள்.

"சுந்தரம் மிகுந்த குழல் மேகம் – அவள்
சொந்த நுதல் இந்து விலோர் பாகம் - திருந்
தும்புருவம் வில்லோடு சிநேகம்"[19]

இப்பகுதி ஏனைய இலக்கியங்களில் காணப்பெறுவது போலவே இருப்பினும் சந்தத்தில் இடம் பெறும்போது புதிய பாணியில் கையாளப் பெற்றிருப்பதைக் காணலாம் அதுபோல வள்ளி முருகன் காதல் சிந்தில் அவன், 'என்னை ஏற்றிடுவாயா?" என வினவினான். அதற்கு வள்ளிக் குறத்திப் பதில் தருகிறாள்.

"பாலையருந்தெனக் கூலிகொடுப்போரிப் பாரிலுண்டோ
- என்னையாமுன்னம்
பண்ணிய புண்ணியம் நண்ணினேன் என்னன்பு
பாலித்தருளுமையா"

எனப் பதில் தருகிறாள். இதில் கரும்பு தின்னக் கூலி தருவார் உண்டோ என்ற நிலை பாலை யருந்தெனக் கூலி கொடுப்போர் உண்டோ என்ற புதிய வடிவம் பெற்றிருக்கிறது.

இவ்வாறு உவமைப் பொருள் புதிதாகவும் சிந்தனையைத் தூண்டுவதாகவும் அமைந்து சிந்து நூல்கள் சிறப்பிடம் பெறுகின்றன.

**சமயக் கருத்துக்கள்**

சிந்து நூலின் தொடக்கத்திற்கு சமய அடிப்படை காரணம் என்பது முன்னர் கூறப்பெற்றது.

எனவே சிந்து நூல்களில் சமயக் கருத்துக்கள், புராண வரலாறுகள் மலிந்து காணப் பெறுவது வியப்பல்ல. காவடிச் சிந்துகளில் பெரும்பாலும் முருகன் சிவபெருமான் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றியவன் என்பதும், தந்தைக்கு உபதேசம் செய்தவன் என்பதும், தந்தைக்கு உபதேசம் செய்தவன் என்பதும், சூரனைத் தடிந்தவன் என்பவன் குறிக்கப் பெறுகின்றன.

---

19. ரெட்டியார் காவடிச் சிந்து - 15.

"திரிபுர மவை ஒரு நொடிதனில் எரிகொடு
சிதைவுற நகைபுரி சிவன் மனமகிழ் உப
தேசன் முருகேசன்"

என்று அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்தும்,

"பாழதாகிய சூர விரனு பாரமாமயி லாகி சேவலும்
பரவிக் கதறிவந்த னாணியே"

என்று கந்தன் சந்தக் காவடிச் சிந்தும், புராண வரலாற்று நிகழ்ச்சிகளைக் குறிப்பதை உணரலாம். தக்கயாகப் பரணி கூறுவதுபோல, திருஞான சம்பந்தர் முருகன் அவதாரம் எனக் கூறும் கருத்து திருப்போரூர் ஸ்ரீகந்தன் சிந்து என்னும் நூலில் காணப்பெறுகிறது.

"சிவபாத ஹிருதயருக்கும்—தேவிபக வதிக்கும்
தவமேயுரு வமாகக் கந்தன் சார்ந்து குறைகள் தீர்த்தான்"

என்று பிறப்பிலிருந்து தொடங்கி ஞானசம்பந்தரின் ஒவ்வொரு நிகழ்ச்சியும் கந்தன் மேல் ஏற்றிக் கூறப்படுகிறது.

"பரவு மதுரை தன்னில் பகர்ந்த தமிழ்த் திறத்தின்
கரைகண்டு சங்கத்தார்க்குக் கந்தன் கலகத்தைத்
தீர்த்தானடி"

என்ற அந்நூலின் வரிகள் திருவிளையாடற் புராணக் கருத்துக் களையும் கையாண்டிருக்கின்றன. இவற்றால் சமயக் கருத்துக் களை எளிமைப் படுத்திக் கூறும் பாங்கு தெற்றென விளங்கு கிறது.

சிந்து இலக்கியங்களின் மற்றொரு வகையான நொண்டிச் சிந்து முழுக்க முழுக்க முருகனின் பெருமைகளையே பேசுகிறது எனலாம். 'பூரணமாய் நின்ற பரம்பொருளே' என்றும், 'அசுரர்கள் வேரறுத்த ஐயனே' என்றும், 'ஆதிசிவரூபமான ஐயா' என்றும் எட்டுக்குடி நொண்டிச் சிந்து பாடி ஏற்றம் பெறும்.

முருகனைத் துதிக்கவே சிந்து எழுந்தது என எண்ணுதல் வேண்டா என்பது போல, திருமால் மீதும் பாடப்பெற்ற இரு நூல்கள் கிடைத்திருக்கின்றன. 'திருப்பதி வெங்கடேசப் பெருமாள் சாட்சிச் சிந்து, ஸ்ரீ அரங்கநாதர் சிந்து' என்ற இரு நூலும் மாயோனைப் போற்றிடும் சிந்துகளாகும். இவ்விரு நூலிலும் திருமாலின் பத்து அவதாரச் சிறப்புக்களும், புராண வரலாறுகளும் இடம் பெற்றுள்ளன.

"அருள்தரு முகவழகும்—அடியாரை
அன்பாக காக்கும் குணவழகும்
ஏழுமலை தன்னழகும்—வெங்கடேசன்
வேகமுடன் பக்தனுக்கு வந்த அழகும்
நீலமுகில் மெய்யழகும்—கரத்தினில்
நெடிய கோதண்ட வடிவழகும்
முகத்தினில் நாமமழகும்—பாலமுத
முண்ட செம்பவள வாயழகும்.'

என்று திருமாலின் அழகினை வருணனை செய்யும் பகுதி எளிமையும் ஏற்றமும் கொண்ட பகுதியாகும். அதுபோல 'பாண்டவர்க்கருள் சுரந்த ஸ்ரீரங்கநாதர்' என்று அரங்கநாதர் புகழ்பாடும் அரங்கநாதர் சிந்துப் பகுதியும் சிறப்புடைப் பகுதியாகும்.

எனவே சிந்து நூல்கள் சமய வேறுபாடின்றி அனைத்துச் சமயங்களுக்கும் உரியனவாக விளங்கியிருக்கின்றன. இசுலாமியப் புலவராகிய காளை அசன் அலிப் புலவர் அவர்கள் முகமது நபி அவர்களைப் போற்றும் முகத்தான் 'பூவடிச் சிந்து' என்று ஒரு சிந்து பாடினார் என அழகிரிசாமி குறித்துள்ளார். எனவே கந்தனுக்குத் தோன்றிய சிந்து நூல் தன் ஓசைத் திறத்தால் ஏனைத் தெய்வங்களைப் பாடிப் போற்றிடவும் பயன் பெற்றது எனலாம். சிந்து ஓர் சமயப் பொதுவுடைமையைத் தன்னளவில் தோற்றியிருக்கிறது என்று கூடக் கூறலாம்.

**சிந்து இலக்கியத்தில் அகப்பொருள் கூறுகள்**

அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்தில் ஏறக்குறைய 15 தலைப்புகள் அகப்பொருள் துறைகளில் எழுதப் பெற்றுள்ளன. சுரம் போக்கு கேட்டு நற்றாய் இரங்கல், தலைவியின் ஊடல், தலைவி பாங்கியைத் தூது விடுத்தல், காலம் நீடத் தலைவி வருந்தல் போன்ற துறைகள் காணப்பெறுகின்றன. துறை அமைப்புகள் சங்க இலக்கியச் சாயலில் இருந்தாலும் செய்திகள் பெரும்பாலும் நாட்டுப்புற இயலை நினைவூட்டுகின்றன. தலைவி ஊடல் கொண்டு தலைவனிடம் பேசுவது போன்ற பாடல்கள் முழுமையும் நாட்டுப்புறப் பாடல் தாக்கத்தையே பெற்றிருக்கிறது.

'எந்தப் பிறப்பினுமே வல்லி—உனையல்லாமல்
எவளையும் சேரேன் என்று சொல்லி—ஊரில்
எத்தனை பரத்தையையோ
நித்தமும் அணைத்தனையோ?
இப்படிக் காசி காஞ்சி டில்லி—கன்யாகுமரி
எங்கு பார்த்தாலும் இல்லை சல்லி' [20]

---

20. ரெட்டியார் காவடிச் சிந்து - பாடல் 19.

போன்ற பாடல்களைக் காணும் போது இலக்கியத் தலைப்பில் நாட்டுப்புற வடிவத்தை நாம் காணமுடிகிறது.

அதுபோல 'மதனசுந்தரி ஓரடிச் சிந்து' என்ற சிந்தில் பரத்தையர் ஒழுக்கம் எவ்வாறு இருக்கும் என்பது சுட்டிக் காட்டப்படுகிறது. டம்பாச்சாரி என்ற காதலன் மதனசுந்தரி என்ற பரத்தையிடம் கொண்ட காதல், அவள் காட்டிய போலியன்பு, பின் செல்வம் இழந்த டம்பன் நிலை, இந்நிலையில் அவனை வெறுத்த மதனசுந்தரியின் மனப்போக்கு, பின் பொருள் டம்பனுக்குக் கிடைத்ததும் மதனசுந்தரியின் பொய்மைக் காதல்—இவை கூறப்பெற்று இறுதியில் அவளின் பொய்மையை உணர்ந்த டம்பன் அவளைக் கைவிட்டு இல்லக்கிழத்தியை அடைதல் நிலையில் நிறைவு பெறுகிறது. இந்நூலில் மதனசுந்தரியின் தாய் பேசும் பகுதி மிகுதியும் கொச்சைத் தமிழாகக் காணப் பெறுகிறது.

"கட்டிலுண்டு மெத்தையுண்டு குள்ளத்தாரா நாம்
கலந்து சுகிக்கலாமே குள்ளத்தாரா
சந்துமுண்டு பொந்துமுண்டு குள்ளத்தாரா
ஜாடை செய்து கூப்பிடவும் குள்ளத்தாரா"

என்பன போன்ற அச்சிந்துகள் பிற நாட்டுப்புறப் பாடல்களைப் போல அகப்பொருட் கருத்துக்களைக் கொண்டு விளங்குகின்றன. இவ் அகப்பொருள் கருத்துக்கள் பெரும்பாலும் இலக்கிய நடையில் அமையாமல் பாமர மக்கள் பேச்சு நடையிலேயே அமைந்து காணப்பெறுகிறது. எனவே அவற்றின் சுவை சிறிது மாறுபட்டுக் காணப்படுகிறது.

### சிந்து நூல்களில் காணப்பெறும் அக்கால வழக்கங்கள்

சிந்து நூல்கள் அமைப்பால் பலவகையாகக் காணப்படுவதால் அக்கால மக்களின் சில வாழ்க்கை நிகழ்ச்சிகள் நமக்குத் தெற்றென விளங்குகின்றன. சிந்து நூலின் காலமான 18ம் நூற்றாண்டின் பிற்பகுதி – 19ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை இடைப்பட்ட காலத் தமிழக நிலையை நாம் ஓரளவிற்கு அறிந்து கொள்ள முடிகிறது.

முருகனுக்குக் காவடி எடுக்கும் பழக்கமும், நொண்டி நாடகம் நடிக்கும் பழக்கமும் இருந்திருக்கின்றன. மேலும், பரத்தையர் ஒழுக்கம், கள் குடித்தல், கஞ்சா என்னும் பொருளைப் பயன் படுத்தல், வாராந்திர, மாதாந்திரச் சீட்டு நடத்தல்

போன்ற வழக்கங்களும் இருந்திருக்கின்றன என்பதை சிந்து நூல்கள் எடுத்துக் காட்டுகின்றன.

மேலும் சில சிந்துகளின் மூலம் அக்கால மக்களின் அணிகலன்களையும் அறிந்து கொள்ள முடிகிறது. வங்கி, ஒட்டியாணம், புல்லாக்கு, சடைப்பில்லை, சடைநாகம், கண்டசரம் போன்ற அணிகலன்கள் சிந்து நூல்களில் இடம் பெறுகின்றன.

மனைவியை அழைத்துக்கொண்டு வழிநடைப் பயணம் செல்லும் பாங்கினை வழிநடைச் சிந்து மூலம் அறிந்து கொள்கிறோம். மேலும், மக்களின் வாழ்க்கையில் நடைபெறும் ஒழுக்கக் குறைபாடுகளைக் கொலைச் சிந்துகள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

அக்காலம் அந்நியர் ஆளுகைக்கு நாடு அடிமைப்பட்டு இருந்தமையால் சிற்சில இடங்களில் வெளிப்படையாக இல்லாது குறிப்பாகவும் விடுதலை வேண்டும் உணர்ச்சியையும் காண முடிகிறது.

பெரும்பாலும் சிந்து நூல்களால் அக்கால வழக்குச் சொற்களை நாம் அறிய முடிகிறது ஆங்கிலச் சொற்களை மக்கள் மிகவும் கலந்து பேசியிருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

### வரலாற்றுக் காவடிச் சிந்தில் குறைபாடுகள்

காவடிச் சிந்து அமைப்பில் பாடப்பெற்ற பழைய வரலாற்றுக் காப்பிய நிகழ்ச்சிகளைக் கூறும் சிந்துகளில் மிகவும் முரண்பாடான கருத்துகள் காணப்படுகின்றன. கோவலன் சரித்திரத் திருப்புகழ் காவடிச் சிந்தில் மாதவியின் நடனம் கோவலன் திருமணத்தன்று நடைபெற்றது என்றும், அப்பொழுது அவள் வீசிய மாலை மணமகன் கோவலன் கழுத்தில் விழுந்தது என்றும் அது கழட்ட முடியாது போகவே மாதவிபால் கோவலன் சேர்ந்தான் என்றும், வீடு திரும்ப எண்ணிய கோவலனிடம் மாதவி பத்துலட்சம் பொன் கேட்டாள் என்றும், அதனால் கண்ணகியின் சிலம்பை விற்கச் சென்று கொலையுண்டான் என்றும் கதை கூறப் பெற்றுள்ளது. இக்கதை அமைப்பு மூல நூலின் கருத்துக்கு முற்றிலும் மாறுபட்டதாக இருப்பது வருந்தத் தக்கதாக இருக்கிறது.

அதுபோல இராமாயணக் காவடிச் சிந்து நூலில் இராமன் சூர்ப்பனகையை 'உனக்கு ஏற்ற மணவாளன் இலக்குவன் தான், அவனிடம் செல்' என்று அனுப்பியதாகக் கூறப்பெற்றிருக்கிறது. இதுவும் ஏற்புடையது இல்லை.

சத்தியவான் சாவித்திரி கதை கூறும் சிந்திலும் சாவித்திரி மாமன் மாமியரால் தொல்லை படுத்தப் பெற்றாள் என்று கூறப் பெறுகிறது.

இத்தகைய மாறுபாடுகள் - சமுதாயத்தினர் உணர்ச்சியுடன் தங்கள் கவிதைகளைக் கேட்க வேண்டும் என்று எண்ணிய கவிஞரால் ஏற்பட்டது என்றே கூறவேண்டும். மேலும் மூல நூல்களை முறையாகக் கற்காத காரணத்தினாலும் இக்குறை பாடுகள் ஏற்பட்டிருக்கலாம். இவைகளை அக்காலக் கவிஞர் பெருமக்கள் தவிர்த்திருந்தால் சிந்து இலக்கியங்கள் இன்னும் சிறப்படைந்திருக்கும்.

இத்தகைய வரலாற்றுக் குறைபாடுகளைப் போல - கொலைச்சிந்து போன்றவற்றில் – அவையற் கிளவிச் சொற்கள் பல அமைந்து - கேட்போர் உள்ளத்தில் சிறிது வருத்தத்தையும் ஏற்படுத்துகின்றன. அவற்றையும் சிந்து ஆசிரியர்கள் தவிர்த் திடல் வேண்டும். இத்தகைய சிறு குறைபாடுகள் நீங்கப் பெற்றால் - சிந்து இலக்கியம் - தமிழ் மொழியின் குன்றா மணியாய் விளங்கிடும். 'திறமெல்லாம் வந்தது என்று சிந்தா மணியாய் இருந்த உன்னைச் சிந்து என்று – சொல்லிய நாச் சிந்துமே' என்று தமிழைப் பார்த்துப் பெருமை பேசிய தமிழ் விடு தூது ஆசிரியர் கூற்றுக்குரிய சிந்து இலக்கியம் உலக அரங்கிலும் பெருமை பெறும். அதே நேரத்தில் சிந்துக் கவி பாடும் நாட்டுப் புறக் கவிஞர்கள் பாராட்டுக்கு உரியவர்கள் ஆவார்கள்

# சிந்து - நாட்டுப்புறப் பாடலே

இன்றைய ஆய்வுப் பொருள்களில் பெரிதும் இடம் பெற்றிருப்பது நாட்டுப் புறப் பாடலின் ஆய்வேயாகும். நாட்டுப் புறப் பாடல்களின் தொகுப்புகள் பல இப்பொழுது வெளிவந்துள்ளன. உ. வே. சாமிநாதய்யர் அவர்கள்[1] தொடங்கி வைத்த அப்பணி இப்பொழுது விரிந்து வளர்ந்திருப்பது குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். உ. வே. சாமிநாதய்யர், பொ. நா. அப்பு சுவாமி அய்யர் மு. அருணாசலம், கி. வா. ஜ., சோமலெ, பெரியசாமித் தூரன், பி. சாம்பமூர்த்தி, மு. இராமலிங்கம், நா. வானமாமலை, எழில் முதல்வன், அ. மு. பரமசிவானந்தம், மு. வை. அரவிந்தன் அன்னகாமு, இராஜாராம், ரஹ்மான், அ. ராகவன், ஆறு. அழகப்பன், சண்முக சுந்தரம், சுரேந்திரன் போன்றவர்களின் நூல்கள் பல நாட்டுப்புறப் பாடல் பற்றி வெளிவந்துள்ளன. இவர்கள் அனைவரும் தங்கள் ஆய்வு நூல்களில் நாட்டுப்புறப்பாடல் வகைகளைக் கூறியுள்ளனர். அவ்வகைகளை ஒருவருக்கொருவர் கூட்டியோ குறைத்தோ கூறியுள்ளனர். அவர்களின் வகைப்பாட்டில் சிந்துப் பாடல்கள் சிறப்பிடம் பெறவில்லை. உ. வே. சாமிநாதய்யர் தன் பகுப்பில் நொண்டிச் சிந்து, 'சிந்து' என்ற இரு தலைப்பில் சில பாடல்களைத் தொகுத்திருக்கிறார். அதுபோல சோமலெ. தன் நூலில்[2] 'காவடிப் பாட்டு' என்ற தலைப்பில் சில பாடல்களைத் தொகுத்துள்ளார். இவர்கள் இருவரைத் தவிர மேற் குறித்தவர்களில் எவரும் சிந்துப் பாடல்களைக் கோடிட்டுக் கூடக் காட்டவில்லை. சிந்துப் பாடல்களை அவர்கள் விடுத்தற்குக் காரணமும் தெரிந்தில ஆயின் நாட்டுப்புறப் பாடல்களுள் ஒன்றாகவே சிந்துப் பாடல்களையும் காணல் வேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

---

1. சங்ககாலத் தமிழும் பிற்காலத் தமிழும் என்ற நூல்
2. இராமநாதபுர மாவட்டம் என்ற நூல்

## நாட்டுப்புறப் பாடல் இலக்கணம்

"இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின்"[1] என்பது நன்னூலாரின் விதியாகும். அதன்படி இலக்கியங்களில் காணப் பெறும் முறைமைகளைக் கொண்டு—இலக்கணங்கள் சூத்திரங் களாகவும் விதிகளாகவும் எழுதப் பெற்றன. அத்தகு நிலையில் நாட்டுப்புறப் பாடல்களைத் தொகுத்த இக்கால அறிஞர்கள் அவற்றில் காணப்பெறும் முறைமைகளைக் கொண்டு—நாட்டுப் புறப் பாடல்களின் தன்மைகளை இலக்கணங்களாகத் தந்துள் ளனர். அவை முழுமையாகச் சிந்துப்பாடல்களில் அமைந் துள்ளன என்பதில் சிறிதும் ஐயமில்லை.

"கற்றாரைக் காமுறச் செய்யும் பாடல்கள் நிறைந்து, நாகரிகம், பண்பாடு, பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகிய வற்றின் கொள்கலமாய் அமைந்ததுவே நாட்டுப்புற இலக்கியம். இலக்கணம் எனும் சிறைக்குள் சிக்காது, கட்டற்ற காட்டாறாய்ப் பெருகி வருவது. சமுதாயத்தின் உயிர்த் துடிப்பு; உண்மையின் பிரதிபலிப்பு; நீரூற்றி உரமிட்டுப் பராமரித்து வளர்க்கும் ஒட்டுச் செடிகளின் மணமற்ற அழகிய புதுமையான பூப்போல் அன்றி மலைச் சரிவிலும், ஆற்றோரத்திலும், நீர் நிலைகளிலும், கடற் கரைச் சோலைகளிலும் இயல்பாகத் தோன்றி மலர்ந்து மணம் பரப்பும் தேனிறை மலர்க் கூட்டமாக அமைந்து உணர்ச்சி உந்தலின் அப்பட்ட வெளியீடு நாட்டுப்புறப் பாடல்கள்" என்பார் ச. வே சுப்பிரமணியன்[2]

"கிராம மக்களிடை அன்றாடம் காணும் உள்ளுணர்வுகளைப் பிரதிபலிப்பதே நாட்டுப்புற இலக்கியம்" என்பார் பி. சாம்ப மூர்த்தி.[3]

"நாட்டுப்புறப் பாடல்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்த மக்களின் உணர்ச்சி வெளிப்பாடாகும்" என்பார் இரா. சுரேந்திரன்.[4]

---

1. நன்னூல்—சூத்திரம் 141
2. நாட்டுப்புற இயல் ஆய்வு. உ த. ஆ.நி. சென்னை—1979. முகவுரை.
3. நாடோடிப் பாடல்கள், பக்கம்.6
4. "நாட்டுப்புற இலக்கியம்—நலந்தரு விளக்கம்" தேன்தமிழ்ப் பதிப்பகம். சேலம். 1979. ப-1.

"நாட்டுப்புறப் பாடல் ஆசிரியர் பெயர் அறிய முடியாதது. எளிய நடையில் வாழ்வோடு பிணைந்த இன்ப துன்ப நிகழ்ச்சிகள், தோய்ந்த வகையில் அவ்விலக்கியம் அமையும்.'' என்பார் அ.மு. பரமசிவானந்தம் [1]

"நாட்டுப் பாடல்கள் கிராம வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புள்ளவை. வாழ்க்கையின் அன்றாடச் சம்பவங்களையே பொருளாகக் கொண்டவை. வாழ்க்கையின் சாதாரணச் சம்பவங்களான பிறப்பு, குழந்தைப் பருவ நிகழ்ச்சிகள், விளையாட்டுக்கள், காதல், பொருந்தாமனம், குடும்ப விவகாரங்கள், கிராமத் தொழில்கள், பஞ்சம், கிராமத்தேவைகள் முதலியனவே நாட்டுப்புறப் பாடல்களின் பாடு பொருளாக அமைந்துள்ளன'' என்பார் ஆறு. அழகப்பன். [2]

இவ்வாறு பல ஆய்வாளர்கள் நாட்டுப்புறப் பாடல்களுக்கு விளக்கம் தந்துள்ளனர். அவற்றை ஒட்டு மொத்தமாகக் கொண்டு கீழ்க்கண்ட மரபுகளை நாம் விதிகளாக வரையறுக்கலாம்.

1. இலக்கண வரம்பிற்கு அப்பாற்பட்டது. அதற்குள் அடங்காதது.
2. இசையமைப்பு—கட்டாயமானதாகும்.
3. யாவரும் புரிந்து கொள்ளும் பொருளமைப்பு, எளிமையான தொடரமைப்பு இருத்தல் வேண்டும்.
4. இயற்றியவர் யார் என்பது அறிய முடியாது வாய்மொழியாகப் பாடப் பெற்றனவாகஇருத்தல் வேண்டும்.
5. உணர்ச்சியை வெளிப்படுத்தும் நிலையில் பிறப்பு, இறப்பு, இன்ப துன்ப நிகழ்வுகளைப் பாடு பொருளாகக் கொண்டிருக்க வேண்டும்.

இவ்வாறு நாம் அவற்றை ஒழுங்குபடுத்தலாம்.

**சிந்துப் பாடல்களில் அவற்றின் தாக்கம்:- பாடியோர்**

மேற்கூறப்பெற்ற இலக்கண மரபுகள் அனைத்தையும் சிந்துப் பாடல்களில் நாம் காணலாம். எவ்வாறு நாட்டுப்புறப் பாடல்கள் கிராம மக்கள் என்று கூறப்பெற்ற படிப்பறியா பாமர மக்களால் பாடப் பெறுகின்றனவோ அதுபோலவே சிந்துப்பாடல்

---

1. வாய்மொழி இலக்கியம், தமிழ்க்கலை பதிப்பகம்—1964
2. நாட்டுப்புறப் பாடல்கள் திறனாய்வு—கழக வெளியீடு. 1973—பக்கம்-7.

கள் படிப்பறியா நாட்டுப்புறக் கவிஞர்களால் பாடப் பெற்றிருக்கின்றன. நமக்குக் கிடைத்திருக்கும் சிந்து பாடல்களில் மிகவும் பழமையானது அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்து ஆகும். அதனைப் பாடிய ஆசிரியர் வரலாற்று நிகழ்ச்சிகளைக் காணும் போது அவர் நினைவாற்றல் உடையவர் என்றும், பிறப்பிலே கவிபாடும் திறம் பெற்றவர் என்றும் தெரிகிறதே தவிர—பட்டம் பெற்ற—அல்லது படிப்பறிவு மிக்கவராகத் தெரியவில்லை. அதுபோல அண்மையில் காலம் சென்ற விழுப்புரம் வட்டம் தென்னமாதேவி தங்கவேலு அவர்களுடன் உசாவிய பொழுது—அவர் தாம் ஏட்டுப் பள்ளியில் படித்ததே தவிர-வேறு கல்வி பெற்றேனில்லை என்று கூறியதும் சான்றாகும். ஆனால்-அதே நேரத்தில் நாட்டுப் புறப் பாடல்களின் தாக்கத்தை எவ்வாறு பாரதி, நாமக்கல் கவிஞர்,இராமலிங்க வள்ளல் போன்ற கவிஞர் பெருமக்கள் தங்கள் கவிதைகளில் கொண்டார்களோ அதுபோல சிந்து பாடியவர்களில் ஒரு சிலரும் அறிஞர்களாகவும் விளங்கியிருக்கிறார்கள். உதாரணமாக-வித்துவான் ப. து வி. திருமால் கோன், வித்துவான் வெ. நா. சபாபதிப் பிள்ளை ஆகியவர்களைக் குறிப்பிடலாம்.

**நடை**

நாட்டுப்புறப் பாடல்கள், இலக்கணக் கட்டுக்குள் அடங்காது என்பது அறிஞர்கள் கூறும் சிறப்பான விதி. அந்த விதியில் ஒரு சிறிது கூட சிந்துப் பாடல் பிறழவில்லை. எனவேதான் பா இலக்கணம் கூறும் பாட்டியல் நூல்கள் சிந்துப் பாடல்களுக்கு இலக்கணம் கூறவில்லை. மேலும் சிந்து நூல்கள் அனைத்தும் ஒரே சந்தத்தையோ ஒரே சீரளவையோ கொண்டவையாக விளங்கவில்லை. ‘அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்து, சிந்தடி-அளவடி என்ற சீரமைப்பில் அமைந்து பல்லவி-அனு பல்லவி இவை அமையாது பாடப் பெற்றுள்ளது. ஆனால் அந்நூலுக்குப் பின்னர் வந்த காவடிச் சிந்துகள் அனுபல்லவி-பல்லவி-சரணம் என்ற அமைப்பில் காணப்பெறுகின்றன. உதாரணமாக மயிலம் ஸ்ரீ சிவசுப்பிரமணியர் சிந்து, கள்ளுக் கடைச் சிந்து என்னும் குடியர் சிந்து ஆகியவற்றைக் குறிப்பிடலாம். அதுபோல இருவரிச் சந்தம், மூன்று வரிச் சந்தம், ஓரடிச் சந்தம் என்ற அமைப்பில் சிந்துப் பாடல்கள் பல திறப் பட்டவையாகக் காணப் பெறுகின்றன. எனவே இலக்கணம் என்ற அமைப்பில் அடங்காது நாட்டுப் புறப் பாடல்களைப் போலப் பாடுவோர் எண்ணப்படி சந்தங்கள் அமைந்து காணப் பெறுகின்றன.

நாட்டுப் புறப் பாடல்களில் காணப்பெறும் தெம்மாங்குச் சந்தப் பாடல்களைக் கொண்டே 'ஈட்டிக்காரனிடத்தில் கடன் பட்டு ஓட்டம் பிடிக்கும் சிந்து' என்ற சிந்து அமைந்துள்ளது. "தெம்மாங்குப் பாட்டில் பாடற் பொருளைக் காட்டிலும் பாடலுக்குப் பாடப்படும் இசை அமைப்பு சிறந்ததாகும்."[1] என்ற கூற்றுப்படி,

"எனக்கேத்த பெண்டாட்டி-நானன்ன நனனா
எடுத்தவுத்திப் போதுமடி-நானன்ன நனனா
மனம் போல வாங்கிவாடி-நானன்ன நனனா
மாட்டிக் கொண்டால் பாக்கலாண்டி-நானன்ன
நனனா"[2]

என அச்சிந்தில் பாடல்கள் அமைந்து-தெம்மாங்கு ஓசையை எடுத்துக் காட்டுகின்றன. இது போல பல நாட்டுப்புறச் சந்தங்களைச் சிந்துப் பாடல்களில் காண முடிகிறது. எனவே நாட்டுப் புறப் பாடலைப் போலவே சிந்துப் பாடல்கள் இலக்கண, நடை அமைப்புகளில் காணப்பெற்று தங்களை நாட்டுப் புறப் பாடல் களாக விளக்குகின்றன.

## சொல்-பொருள்-எளிமை

நாட்டுப் புறப் பாடல்களுக்குரிய இலக்கண மரபுகளில் அடுத்து கருதத் தக்கது சொல்லும் பொருளும் எளிமையாக இருப்பது. இந்த மரபும் சிந்துப் பாடல்களில் அமைந்து ஏற்றம் தருகின்றன.

"எட்டி நட என்ற வள்ளிக் குட்டி-குறக்குட்டி-எனைத்
திட்டுராய் வாய்ப்பட்டி-தாலி
கிட்டுவேன் பார்க்குட்டி"[3]

"தெப்பக் குளக்கரை கற்பகத் தானையைச்
சேவிக்கும் அன்பரைப் பாராய்—பல
செல்வம் கொடுத்திடத் தொல்லுல கண்டிடுஞ்
செல்லாயி அம்மனை நேராய்"[4]

என்ற பாடல்கள் குறிப்பிடத் தக்கன.

---

1. நாட்டுப்புற இயல் ஆய்வு. உ. த. ஆ. நி. சென்னை 1979-பக்-327
2. செஞ்சி ஏகாம்பர முதலியார் வெளியீடு 1894.
3. வளையல் சிந்து. பதிப்பு ஜி. தயானந்தம்.
4. கண்டனூர் கார்த்திகைக் கடைச் சோம வாரச் சிந்து.

**பாடுபொருள்**

இவ்வாறு இலக்கண மரபில் அமைந்த சிந்துப் பாடல்களில் பாடு பொருள்களும் நாட்டுப் புறப் பாடல்களின் பாடு பொருளாகவே அமைந்துள்ளன. இன்ப துன்ப நிகழ்ச்சிகளையும், பிறப்பிறப்பு நிகழ்ச்சிகளையும், உணர்ச்சிப் பெருவெள்ளமாகக் கவிஞர்கள் அமைத்துள்ளனர். எவ்வாறு நாட்டுப் புறப்பாடல்களில் ஒப்பாரி சிறப்பிடம் பெறுகின்றதோ-அவ்வாறு சிந்து நூல்களில் இறப்புப் பற்றிய பாடல்கள் சிறப்பிடம் பெறுகின்றன.

உதாரணமாக,

"ரயில் விபத்தை நினைக்கையிலே-எதோ
ரத்தங் கொதிக்குது நெஞ்சத்திலே-வண்டி
அயிலூர் விட்டு வட மதுரைக் கிடை
அத்தனை பேர்களும் மாண்டு விட்டார்"[1]

"பண்ருட்டி நகர மக்கள் பக்கத்தூர் ஜனங்களெல்லாம்
வந்தார் பெருங் கூட்டமாய் வைபோகம் பார்த்தழுதார்
இந்த வித கோரமதை எந்தநாளும் கண்டதில்லை
வந்த ஜனங்களெல்லாம் சிந்தைநொந்து தானழுதார்"[2]

இத்தகைய இரங்கல் பாடல்களை நாம் பல சிந்து நூல்களில் காணலாம். ஆனால் ஒப்பாரிப் பாடல்களுக்கும் இறப்புச் சிந்துப் பாடல்களுக்கும் வேற்றுமை உண்டு ஒப்பாரிப் பாடல்கள் இறந்து பட்டவரின் உறவினரின் அழுகுரலாக ஒலிக்கும். சிந்துப் பாடலோ இறந்து பட்டவருக்குத் தொடர்பு இல்லாதவரும் கூட அழும்—அழுகுரலாக ஒலிக்கும். இதைத் தவிர வேறு எந்த நிலையிலும் நாம் காண முடியாது.

அதுபோல உணர்ச்சிப் பாடல்களாகிய காதற் பாடல்களை கண்ணாட்டிச் சிந்து, குள்ளத்தாராச் சிந்து போன்றவற்றில் காணலாம். தொழிற் பாடல்களின் அமைப்பை—வழி நடைச் சிந்துகளில் காணலாம். அறக் கருத்துக்களைக் கள்ளுக்கடைச் சிந்து,திருக்குறள் காவடிச் சிந்து போன்ற சிந்துகளில் காணலாம்.

இத்துணைச் சிறப்பிருந்தும் நாட்டுப் புறப் பாடலிலிருந்து சிந்துப் பாடல் வேறுபட்டிருப்பது ஒரே ஒரு விதத்தில்தான்.

---

1. அயிலூர் ரயில் விபத்துச் சிந்து.
2. லாரி விபத்துச் சிந்து.

நாட்டுப்புறப் பாடல்கள் சிறுசிறு பாடல்களாக வாய்மொழி யாகவே இருந்து வளர்கிறது. ஆனால் சிந்துப் பாடல்கள் நீண்ட நெடும் பாடல்களாக-நூல் வடிவில் வெளிவருகிறது இதனால் சிந்துப் பாடல்களை நாட்டுப்புறப் பாடல்கள் அல்ல என அறிஞர்கள் ஒதுக்கிவிடக் கூடாது. காரணம் நாட்டுப் புறப்பாடல் களில் அம்மானை, கும்மி, கதைப் பாடல்கள் போன்றவை எவ்வாறு வாய்மொழியிலிருந்து நூலாக விளங்குகின்றதோ அது போல சிந்துப் பாடல்களைக் கொள்வதில் தவறு இல்லை யன்றோ!

எனவே, நாம் முடிவாகக் கூறுமிடத்து இலக்கண அமைப்பு களில் நாட்டுப்புறப் பாடலுக்கு எத்தகைய கருத்துக்களை அறிஞர்கள் காணுகிறார்களோ அவற்றைச் சிந்து நூல்களிலும் உறுதியாகக் காணலாம். சிந்துப் பாடல்கள் ஒரே பொருள் அமைப்பில் விளங்குபவையல்ல. அவற்றிலும் நாட்டுப் புறப் பாடல்களைப் போல பொருளமைப்பில் பல பிரிவுகள் காணப் பெறுகின்றன. அப்பிரிவுகளை இன்றைய ஆய்வாளர்கள் கண்டி ருக்கின்ற நாட்டுப் புறப் பாடல் பிரிவுகளுள் உறுதியாகக் கொண்டு வரலாம்.

வரலாற்றுச் சிந்து—கதைப் பாடல்கள்

வழிநடைச் சிந்து<br>காவடிச் சிந்து } —தொழிற்பாடல்கள்

விபத்துச் சிந்து<br>கையறுநிலைச் சிந்து } —ஒப்பாரிப் பாடல்கள்

நீதிச் சிந்து<br>நகைச் சுவைச் சிந்து<br>நிகழ்ச்சிச் சிந்து } —உணர்ச்சிப் பாடல்கள்

இவ்வாறு, எக்கோணம் கொண்டு பார்த்தாலும் நாட்டுப் புறப் பாடல்களின் மரபு முறைகள் சிந்து நூல்களில் அமைந்திருப் பதால்-சிந்துப் பாடல்களை நாட்டுப் புறப் பாடல்களாகக் கருத இடமுண்டு

# பழனியாண்டவன் காவடிச் சிந்து

சிந்து இலக்கியத்தில் முதன்மை பெறும் காவடிச் சிந்து வகையில் இச்சிந்து அடங்கும். முருகக்கடவுளின் படை வீடுகளில் ஒன்றான திருவாவினங்குடியில் அமைந்துள்ள பழனி மலையில் எழுந்தருளியிருக்கும் முருகன் மீது பாடப் பெற்றது. இச்சிந்து பாடிய ஆசிரியர் முத்துக் கருப்பண்ணன் என்பவர் ஆவார். இச் செய்தி, நூலின் அகச்சான்றாகவே கிடைக்கிறது. ஏட்டில் தனியாகக் குறிக்கப் பெறவில்லை. நூலின் ஈற்றில் ஆசிரியரே தன்னைப் பற்றிக் குறித்துள்ள பகுதியே அவ் அகச்சான்றாகும்.

> "சுத்தமா நகர் வாழும் முத்துக் கறுப்பணன்
> சொல் நாளும்
> சித்தமேவிய பெரியோர் தினம் செழித்து வாழி."

இப்பகுதியில் ஆசிரியர் தான் வாழும் நகரையும் குறித்துள்ளார். 'சுத்தமா நகர்' என்பது அவர் குறித்துள்ள நகராகும். ஆயின் சுத்தமா நகர் என்ற அப்பெயர்- 'சுத்த மடம்' என்ற நகரைக் குறிக்கிறது. சுத்த மடம் என்ற பெயரே சுத்தமா நகர் என வழங்கியிருக்கிறது. சுத்த மடம் என்ற பெயரையும் ஆசிரியரே கையாண்டுள்ளார்.

> "வளமேவிய பரனே! சுத்த மடம் வாழும்
> தந்தி முகனே!" (1)

என்பது ஆசிரியர் கையாண்ட இடம். எனவே ஆசிரியரின் ஊர் சுத்த மடம் என்பது பெறப்படுகிறது. ஆசிரியரின் வழிபடு கடவுள் 'செட்டி விநாயகன்' என்ற பெயருடைய ஆனைமுகத்தான் ஆவார். இக்குறிப்பு நூலின் இறுதியில் "செட்டி விநாயகன் பாதார விந்தம் துணை" என்று எழுதப் பெற்றிருப்பதால் பெறப்படுகிறது.

வழிபடு கடவுள் விநாயகராக இருப்பினும் பழனி மலையில் எழுந்தருளியிருக்கும் முருகனின் அடிமையாகி முருகபக்தராகவும் ஆசிரியர் விளங்கியிருக்கிறார். இச்செய்தி,

> "சிவகிரியில் வாழ்வோன்—எனைத்
> தினமும் குடி ஆள்வோன்" (2)

என்ற பகுதியால் பெறப்படும் பழனி மலையின் ஒரு பகுதி சிவ மலை எனப் பெயர் கொண்டது என்பது மயில் விடு தூது

நூலால் அறியலாம். இத்தலகைய குறிப்புகளை ஆசிரியர் பற்றிய தாக நாம் அறிய முடிகிறது.

நூலின் அமைப்பு சிந்துப் பாடல்களுக்கு ஏற்ப இயைபுத் தொடை பெற்றே விளங்குகிறது. ஆயின் ஈரடியால் பாடல்கள் அமையாது நான்கு நான்கு அடிகளாகவே பாடல்கள் அமைந்துள்ளன. 9 ஆம் பாடல் மட்டும் 3 வரிகளைப் பெற்றிருக்கிறது. அதில் இரண்டாம் வரிக்கும் இறுதி வரிக்கும் இடையில் ஒரு வரி விடுபட்டிருக்க வேண்டும். பாடல்களும் நொண்டிச் சிந்தின் சாயலைப் பெற்று ஒரு வரிக்கு மற்றொரு வரி அசை குறைந்து காணப் பெறுகிறது.மூன்றாம் பாடல் தொடங்கிப் பத்தாம் பாடல் வரை ஈற்று வரி மயிலைப் பார்த்து "முருகப் பெருமானைத் தனக்கு அருள் புரியக் கொண்டு வர வேணும்'' என்று கூறுவதாக அமைந்துள்ளது. மொத்தம் 11 பாடல்கள் அமைந்துள்ளன. முதல் இரு பாடல்கள் கடவுள் வணக்கப் பாடல்களாக அமைந்திருக்கின்றன. ஈற்றில் உள்ள பாடல் வாழ்த்துப் பாடலாக அமைந்துள்ளது. இடைப்பட்ட எட்டுப் பாடல்களில் முருகனின் புராண வரலாற்றுச் செய்திகள்—பெருமைகள் இடம் பெற்றுள்ளன.

சிவபெருமானின் நெற்றிக் கண்ணில் தோன்றியவன் முருகன் என்பதும், தேவர்களின் அச்சத்தைத் தீர்த்தவன் என்பதும், (4) தெய்வயானையை மணந்தவன் என்பதும் (5) முருகனுக்குத் தம்பியர் நவ வீரர்கள் என்பதும் (6) வள்ளியைக் காதலித்து மணந்தவன் என்பதும் (3) ஆனைமுகனின் சகோதரன் என்பதும் (6) கடம்பமாலை அவனுக்கு உரிய மாலை என்பதும், வச்சிர ஆயுதம் அவனுக்கு உரிய ஆயுதம் என்பதும் (8) பார்வதியின் மைந்தன் என்பதும் (7) பாடல்களில் இடம் பெற்றுள்ளன. இவ்வாறு ஆசிரியர் முருகனின் பெருமைகளைப் பேசுவதோடு தனக்கு வேண்டிய வரங்களையும் வேண்டிப் பாடியுள்ளார்.

இச்செகம்தனில் அடியேன்—உனை
ஏற்றத் தினம் போற்ற
மிச்சமாய்க் கலிவருத்த—நான்
மெலிவேனோ! அலைவேனோ! (8)

என்பது அவர் வேண்டுதலைத் தெரிவிக்கும் பகுதியாகும். ஆசிரியர் தன் வறுமை தீரவேண்டும் எனப் பாடிப் பரவி வேண்டுகிறார்.

இத்தகு பொருட் சிறப்புகளைப் பெற்றுள்ள இச்சிந்து குறைவான பகுதிகளைக் கொண்டிருந்தாலும்—இனிய ஓசையோடு—சொற் திறத்தோடு—பக்திப்பரவசத்தோடு அமைந்துள்ளது என்பது நினைவு கூறத் தக்கது.

# 1. பழனியாண்டவன் காவடிச் சிந்து

பழனிப்பதி வாழும்—வேலர்
பாதம் தனை நாளும்
உளமேதினம் துதிக்க—வினை
ஒடுக்கும் கதிகொடுக்கும்
வளமேவிய பரனே—சுத்த
மடவாழு தந்திமுகனே
அழகாகிய குருவாய்—எனக்
கருள்வாய் முன்பு வருவாய் (1)

சிவகிரியில் வாழ்வோன்—எனைத்
தினமும் குடி ஆள்வோன்
தவமேவிய குமரன் புகழ்
தானே அடியேனே
நவமீறிய காவடிச் சிந்து
நாடத் தினம் பாட
புவனச் சரசுவதியே—சிந்து
புகல வருவாயே (2)

---

1. சுத்தமடம்—ஊர்
தந்திமுகன்—விநாயகர்

2. சிவகிரி—கயிலாயம், இங்குப் பழனியில் உள்ள சிவமலையைக் குறிக்கிறது.
நவமீறிய—புதுமை மிகுந்த
புவனம்—உலகம்

கள்ளமாய் அன்று வனத்தில்—வள்ளி
　　　　கானத் தினைப் புனத்தில்
உள்ளமே மகிழ்வாகிக்—கிழ
　　　　வருவாய்ப் பரண் ஏகி
தெள்ளிய தினை மாவை—பொசித்
　　　　திலகும் அண்டர் கோவை
வள்ளி நாயகப் பொருளைக்—கொண்டு
　　　　வருவாய் தோகை மயிலே (3)

துண்ட வெண்பிறை அணிவோன்—அருள்
　　　　சுத்தனைப் பரிசுத்தனை
அண்டர் கோன் பயம் தீர்ப்போன்
　　　　அடியாரைத் தினம் காப்போன்
எண்டிசை பணி நேசன்—தவம்
　　　　இலகும் கிரி வாசன்
வண்டமிழ்ப் பழனியனைக்—கொண்டு
　　　　வருவாய் தோகை மயிலே (4)

செய்ய தாண்டவ ராயன்—அருள்
　　　　சேயனைக் கார்த்தி கேயனை
துய்ய குஞ்சரி பங்கனை—அயில்
　　　　துலங்கும் கரதுங்கனை
உய்யவே அருள் கொடுப்போன்—அன்பர்
　　　　உளத்தில் குடி இருப்போன்
வையகம் புகழ் வேலனைக்—கொண்டு
　　　　வருவாய் தோகை மயிலே (5)

---

3. கள்ளமாய்—களவு நிலையில்
பொசித்திலகு—உண்டு விளங்கும்
4. துண்ட வெண்பிறை—பிறைச் சந்திரன்
துண்ட வெண்பிறை அணிவோன் அருள் சித்தன்—
சிவனார் அளித்த முருகன்
அண்டர்கோன்—தேவேந்திரன்
கிரிவாசன்—மலை வாழ்பவன்
5. தாண்டவராயன்—ஆடல்வல்லான்
சேயன்—மகன்; முருகன்
அயில்—வேல்
துங்கன்—மேன்மை உடையோன்
குஞ்சரி—தெய்வயானை

ஆனைமா முகன் துணைவன்—வள்ளிக்
கழகாகிய கண்ணன்
ஞானதேசிக போதன்—நவ
வீரரும் பணி நீதன்
தேனுலாவிய கடப்ப—மலர்
செறிவோன் அருள் புரிவோன்
வானவர் பணி வேலனைக்—கொண்டு
வருவாய் தோகை மயிலே (6)

திங்கள் சேர் நுதல்—மீனாள்
தருதேனை முருகோனை
எங்கள் நாயகப் பொருளை—பணிந்
தேற்றார் மனத் திருளைத்
துங்கமா மனம் தேம்பிட்டேன்—உனைத்
தொழுதே நிதம் கும்பிட்டேன்
மங்களம் உயர் வேலனைக்—கொண்டு
வருவாய் தோகை மயிலே (7)

இச்செகம் தனில் அடியேன்—உனை
ஏற்றத் தினம் போற்ற
மிச்சமாய்க் கலிவருத்த—நான்
மெலிவேனோ அலைவேனோ
அச்சமாய்த் துயர் ஓட—அருள்
நாடகக் கவி பாட
வச்சிரம் திகழ் வேலனைக் கொண்டு
வருவாய் தோகை மயிலே (8)

---

6. போதன்—அறிவுடையோன், அறிவளிப்போன்
நவவீரன்—வீரவாகு தேவர் உள்ளிட்ட ஒன்பது பேர்
நீதன்—நீதி உள்ளவன் தலைவன்
செறிவோன்—சூடுவோன்
7. திங்கள்சேர் நுதல் மீனாள்—பார்வதி
ஏற்றார்—கொண்டார்
துங்க—பெரிய
தேம்பிட்டேன்—கலங்கிட்டேன்
8. மிச்சமாய்—மிகுதியாய்
கலி—வறுமை
வச்சிரம்—வைரமணி, கூர்மை
வச்சிரம் திகழ் வேல்—வைரவேல் அல்லது கூர்வேல்

பூசுரர் வெகுமானி—சிவப்
பொருப்பில் வளர் ஞானி.
தேசமேழும் புகழ்—காவடிப்
பூசை சிறக்கும் தமிழ்புரக்கும்
*...................................
...................................
வாசனை வடி வேலனைக்—கொண்டு
வருவாய் தோகை மயிலே (9)

படியெழும் புகழ் இடும்பன்—தினம்
பணியும் மலர்க் கடம்பன்
அடியார் வினை பொடி செய்திடும்
மானபுகழ் குமரன்
துடிமீறு மும்முரசன்—தெய்வம்
தொழுவாழ் கொலு வாசன்
வடிவேல் முருகனையே—கொண்டு
வருவாய் தோகை மயிலே (10)

கர்த்தனாகிய முருகன்—அருள்
கனியும் திரு மருகன்
பத்தர்கள் மிக வாழி!—நிதம்
படிப்போர் தினம் வாழி!
சுத்தமா நகர் வாழும்—முத்துக்
கறுப்பணன் சொல் நாளும்
சித்தமேவிய பெரியோர்—தினம்
செழித்து மிக வாழி! (11)

---

9. பூசுரர்—அந்தணர்
சிவப்பொருப்பு—கயிலைமலை
புரக்கும்—காக்கும்
*ஒருவரி விடுபட்டிருக்க வேண்டும்.
10. இடும்பன்—குமரனின் ஏவல் செய்வோன்
பொடி செய்திடும்—அழித்திடும்
மானபுகழ்—பெரும்புகழ்
துடிமீறு—மேன்மை மிகுந்த, முழக்கமிகுந்த
மும்முரசு—மங்கலமுரசு, வெற்றிமுரசு, கொடைமுரசு
11. கர்த்தன்—தலைவன்; திரு—திருமகள்
முத்துக் கறுப்பணன்—நூலாசிரியர்
சித்தம்—உள்ளம்

## 2. கந்தன் மணம்புரி சிந்து

### முன்னுரை

இச்சிந்து கதைகூறும் சிந்துபோல் பாடப் பெற்றுள்ளது. பாடிய ஆசிரியரும் இச்சிந்து "கதை" தான் என்பதை,

"குறவேடங் கொண்டார் ஆபரணங்களை
சூட்டினார் மெல்லியாள் என்றணைந்தார்
வேறே கதையாச்சே" (31)

என்று குறிப்பிடுவதிலிருந்தும் அறியலாம். இனி நடக்கப் போவது வேறு கதை என்பதால் இதுவரை நடந்ததும் ஒரு கதை என்பதை நாம் உணரலாம். இச்சிந்து பாடிய ஆசிரியர் "சண்முகதாசன்" என்பவர் ஆவார். நூலின் இறுதியில்,

"பலமாக சண்முக தாசனும்
கலைவாணி தனைப் போற்றியே
நல்கு தமிழ்ச் செல்வமிது". (32)

என்று குறிக்கப் பெற்றிருப்பதால் இதனையறியலாம். ஆசிரியரைப் பற்றிய பிற குறிப்புகள் தெரியவில்லை.

### நூலின் அமைப்பு

நூலின் தொடக்கத்தில் காப்புச் செய்யுளும் - அவையடக்கச் செய்யுளும் இடம் பெற்றுள்ளது. நூலின் இறுதியில் வாழ்த்துச் செய்யுளும் அமைந்திருக்கிறது. இடையில் 31 பாடல்கள் அமைந்துள்ளன. அந்த முப்பத்தொரு பாடல்களும் இரண்டிரண்டு அடிகளாக அமைந்துள்ளன. முதற்பாடல் மட்டும் ஒரு அடியை அதிகமாகப் பெற்றுள்ளது. பாடல்கள் சந்த ஓசையைப் பெற்றுள்ளன.

### பாடுபொருள்

பாடல்கள் தரும் பொருள் நலம் முருகன் - வள்ளி திருமணச் செய்தியாகும். செய்திதனை வரலாறு போல் கூறாது முருகன் - வள்ளி இருவரும் பேசுவது போல் அமைத்துக் கூறியுள்ளார்

ஆசிரியர். உரையாடற் பகுதி மிகச் சிறப்பாக இலக்கியச் சுவை யோடு காணப் பெறுகிறது. புராண வரலாற்றிற்கும் இவ் உரை யாடலிற்கும் வேறுபாடு உண்டு. புராணக் கதைகள் தினைப் புனத்தில் காவல் மேற்கொண்டிருந்த வள்ளியை - முருகன் வேடனாய், விருத்தனாய் வேடம் கொண்டு காதலித்து மணந் தான் எனக் கூறுகின்றன. ஆனால் இச்சிந்து ஆசிரியரோ தினைப் புனக் காவற்காரி வள்ளியை முருகன் – வளையல் விற்கும் செட்டி யாக – அதுவும் கன்னட தேசத்துச் செட்டியாக வேடங் கொண்டு வந்து - காதலித்து மணந்தான் எனக் காட்டுகிறார். தமிழ்க் கடவுள் முருகன் - கன்னடியராகக் (பாட்டு 5) காட்டப் பெறுவது புதுமையானதாகும். அதுபோல வள்ளியை மணந்தது திருத்தணியில் என்பது புராண வரலாறு. ஆனால் இச்சிந்து ஆசிரியரோ - திருச்செந்தூர் எனக் கூறுகிறார்.

“குறமாதையே மனஞ் செய்திடும்
செந்தூ ரதனின் மேவியே
சேர்ந்து வாழ்ந்து”

என்பது அப்பாடற் பகுதியாம்.

நாரதர் வழி காட்டிட வந்த முருகச் செட்டி வளையல்களின் பெருமை கூறி - பணம் கொடுத்தால் தருவேன் என வள்ளிக் குறத்தியிடம் கூறுகிறார் வள்ளிக் குறத்தியோ - பணம் கிடைக் காது; தினைப் புனத்தில் விளைந்த வரகுதான் விலையாகத் தரப்பெறும் எனக் கூறுகிறாள். ஆனால் செட்டியோ - தன் குலத்தார் வரகு ஏற்றால் நகையாடுவர் எனக் கூறி—வளைய லுக்கு விலையாக முத்தம் தந்து இன்புறுத்தக் கேட்கிறான். கேட்ட குறத்தியோ வெகுண்டு அவனை ஏசிப்பேசி விரட்டிட— பின் வந்தவன் முருகன் என்பதை உணர்ந்து—அவனுக்கு இன்பம் தந்தாள் எனச் செய்தி கூறப்பெற்றுள்ளது.

## நூலின் சிறப்பு

நூலாசிரியர் அவையடக்கத்தில் ஓர் உவமை மூலம் தன்னை எளிமைப் படுத்தி உள்ளது குறிப்பிடத் தக்கதாகும் சலதாரை என்று கூறப்பெறும் தூம்பிலிருந்து ஒழுகும் நீரை—கடல் சூழ்ந் தால்—அது வீம்பு என்று கருத மாட்டார்கள் உலகோர். அது போல சிறியவனான எனைப் பெரியோர் சூழ்ந்துகொண்டு அறிவற்றம் பார்ப்பதை பெருமை எனக் கருத மாட்டார்கள்.

மேலும் என் புன்சொல்லை இகழ்ச்சியாகக் கருதமாட்டார்கள் என்று கூறுகின்றார்.

நூலில் பல வழக்குச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. கங்காணம், கோரி, காலிகள், இக்கணம், இளைப்பும், இங்கிதம், தொலையாவழி, கூவரகு, தவிட்டரிசி, சகியார், அலைச்சல், கனகஸ்தானம், போங்காணும், மட்டி, பலபேருடமகன், உபகாரம் போன்றவை அவற்றில் குறிப்பிடத் தக்கன.

அதுபோல உவமைகளையும் ஆங்காங்கு ஆசிரியர் கையாண்டுள்ளார். "பட்டப் பகலில் பறி கொடுத்தவன் போல்" (பாட்டு-24) என்ற உவமையை முருகனைக் குறித்து வள்ளி கூறுவதாக அமைத்துள்ளார்.பட்டப் பகலில் பொருளைப் பறி கொடுத்தவன் எவ்வாறு வேதனைப் படுவானோ அதுபோல வள்ளியின் அன்பைப் பெற இயலாது வருந்தினான் முருகன் என்பது அவ் உவமை தந்திடும் பொருளாகும். பாடல் 26இல் வள்ளியின் சகோதரர்கள் முருகனைக் கண்டால் இண்டஞ் செடியைக் கொய்வது போலக் கொய்து விடுவர் எனக் கூறப் பெற்றுள்ளது. இங்கு இண்டஞ்செடி தலைக்கு உவமையாக்கப் பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கது.

நூலில் எளிமையையும்—அழகிய நடையையும் நாம் காண முடிகிறது. ஆசிரியர் கதைச் செய்திகளைச் சொல்லும் பொழுது நாம் படித்தவுடன் மனதில் பதியக் கூடிய அளவிற்கு எளிய சொற்களைக் கையாண்டுள்ளார்.

கானக் குறக்குல மானே—உனைத்தேடி
காவின் வழியே வந்தேன்
கைக்கு வளையலும் இக்கணமே தாரேன்
காசு கொடுத்திடு வாய் (5)

காவில் கிளிகளைக் கூவிவிரட்டிடும்
கன்னியே பெண்மயிலே (7)

இப்பகுதிகள் போல் பல பகுதிகளை நாம் காணலாம். முருகச் செட்டி சுற்றி வந்த ஊர்களையும்—நாடுகளையும் ஆசிரியர் குறிப்பிடும்போது முருகன் வீற்றிருக்கும் திருப்பதிகளைக் குறிப்பிடுகின்றார். அதுபோல வளையல்களின் திறம் பேசும்போது சீனா, மக்கம், துலுக்கானம் போன்ற தேசங்களைக் குறிப்பிடுகிறார். இவை கைவினைப் பொருள்களால் சிறப்புப் பெற்றவை ஆகும்.

வள்ளி—முருகன் உரையாடல்கள் ஆசிரியரின் கற்பனைத் திறத்திற்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். அவ் உரையாடல் கள் குறவஞ்சி எனும் சிற்றிலக்கியங்களில் இடம் பெறும் குறவன் குறத்தி உரையாடல்களை நமக்கு நினைவூட்டுகின்றன. நூலில் முருகனின் பெருமையோ—அல்லது வேறு புராணக் குறிப்புகளோ காணமுடியவில்லை. முருகனைப் பற்றிய மற்ற சிந்துகளில் காணப்பெறும் அளவிற்கு இல்லெனில் ஒரு சிறிதாவது ஆசிரியர் பேசியிருக்கலாம். ஒவ்வொரு பாடலிலும் இறுதியடி பொரு ளோடு இணைந்து நிற்கவில்லை. ஏதோ பாட்டின் இறுதியில் ஓசை கூட்டுவதற்காக அமைந்த வரிபோலவே பல பாடல்களில் காணப் பெறுகிறது.

நூலின் முடிவும் விரிவாக அமையாது வள்ளி—முருகன் உரையாடல் முடிந்ததும் திருமணம் அமைந்தது போல் திடீரென முடிக்கப் பெற்றுள்ளது. இருப்பினும் இச்சிந்து ஓசையால் சிறப்புப் பெறுகிறது என்பதை நாம் மறுக்க இயலாது.

# கந்தன் மணம்புரி சிந்து

கங்கா தரனற் கருணையா லீன்றெடுத்த
சிங்கார ஆனைமுகத் தேசிகனே—மங்காத
கந்தன் மணம் புரியக் காதல்தனை மாநிலத்தில்
சிந்துகவி யானுரைக்கச் செய்

தூம்பினில் வீழுஞ் சலந்தனைச் சாகரஞ் சூழ்ந்து கொண்டால்
வீம்பனென் றெண்ணி வெறுப்பதுண் டோயிந்த மேதினியில்
கூம்பலில் லாத தமியே னுரைத்த குழறு புன்சொல்
தாம்புக ழாகவாழ் வார்பெரி யோர்தடை வேறுள்ளதே

சீருடன் வள்ளியைச் சேரும்வடி வேலன்
சேவடியைப் போற்றி—கந்தன்
சிந்துநான் சொல்ல எந்தனக்கருள்
செல்வவி னாயகனே

சிறிய(ன்)னுரை மொழியுந் தமிழ்
குறமா தையே மணஞ் செய்திடும்
செந்தூ ரதனில் மேவியே
சேர்ந்து—வாழ்ந்து—சாந்த—முடனே
சீருடன் வள்ளியைச் சேரும்வடி வேலன்
சேவடியைப் போற்றி (1)

---

(வாழ்த்து) கங்காதரன் — கங்கையை முடியில் தரித்தவன்
தூம்பு — சலதாரை
சாகரம் — கடல்
வீம்பன் — வம்பு வார்த்தை சொல்வோன்
கூம்பல் — ஒடுங்கல்
(மலர்தலும் கூம்பலும் இல்லது அறிவு—குறள்
கூம்பாத மெய்ந்நெறியோர்—திருவருட்பா)

1. செந்தூர் — திருச்செந்தூர்
குறமாது—வள்ளி

பேரு பெரிய நம்பி மகரா சேந்திரன்
பெண்ணாக வந்துதித்துத்—தாதிப்
பெண்க ளுடன் தினைக் கங்காணங் காத்திடப்
பேசியே காக்க வைத்தார்
பிரியா மலே புனமே விய
பரண்மீ தினில் கவணோ சையால்
பலமாய்த் தினை விளை காத்து
உணங்கிப் பிணங்கி இணங்கி இருக்கப் (பேருபெரிய) (2)

குன்றக் குருபரன் கோதையாள் வள்ளியைக்
கோரி வழி நடந்து—கந்தன்
குளறிக் குளறிப் புனத்தைத் தேடிக்
கொண்டான் வணிக னைப்போல்
குருநா ரத னுவந் தோதிய
உரைகேட் டிட வரு வேலவர்
குயிலோசையு மயில் பாசையும்
குறித்துத் தரித்துச் சிரித்து நின்று (குன்றக்குரு) (3)

மன்றினி லுள்ள காலிகள் மாடுகள்
வளருந் தினைப்புனத்தில் — வள்ளி
மங்கையர் களுடன் செந்தினை காக்கவும்
மாது தலை விதியோ?
மங்கைக் கிளி மொழியா ளென
தங்கப் பிர காச(ம்) மென
மருக இது சமய மென
மயங்கித் தியங்கிச் செயஞ்செ யமென்று (மன்றினி) (4)

---

2. நம்பிமகராசேந்திரன்—நம்பிராசன்—வள்ளியின் தந்தை
கங்காணம் — கண்காணம்
கவணோசை — கவண்கல் எழுப்பும் ஒலி
விளை — விளைபுலம். (ஆகுபெயர்)
உணங்கி — வாட்டம் அடைந்து

3. மயில் பாசை — குயில் ஓசைக்கு ஏற்பத் திரிந்து வந்தது.
கோரி — விரும்பி
குருநாரதர் — நாரதர்

4. காலிகள் — பசுக்கள்
மாது — வள்ளி, மருக — நெருங்க

கானக் குறக்குல மானே உனைத்தேடி
காவின் வழியே வந்தேன்
கைக்கு வளையலு மிக்கணமே தாரேன்
காசு கொடுத் திடு வாய்
காசிவட காசிப்பணி
ஆசை மிக வேகொண்டிடும்
கன்னடியன் சென்னை நகர்
கடந்து கடந்து தொடர்ந்து வந்தேனே (கானக்) (5)

சீனா வேலையிது தானே மலையாளம்
செஞ்சிக் கோட்டை நகரம் அதில்
சீமான் மெச்சிய கோம ளப்பணி
செங்கை நீ தருவாய்
செக மொய்த்திடு வளை ரத்தினத்
தொகை செப்பிட முகநட் பிலை
திரு மங்கையாள் குலநங்கையே
சிரித்து விரித்துப் பரிக்கும் குறப்பெண் (சீனா) (6)

கண்டி கதிர் காமம் காஞ்சி
கொழும்பு வங்காள தேசப்பணியே—புனைக்
காவிற் கிளிகளைக் கூவிவி ரட்டிடும்
கன்னியே பெண்மயிலே
கவி வாணர்கள் அடி போற்றிடும்
துதி பெருமான்; இசை பெற்றிடும்
கலை மான துனை யீன்றதும்
கலங்கி யிலங்கி அலங்கா ரத்துடன் (கண்டி) (7)

---

5. கா — சோலை
கணமே — நேரத்திலே
வட காசிப் பணி — வடகாசியில் செய்த செயல்திறம் உடைய அணிகலன்
கன்னடியன் — ஒரு சாதியான்.
6. சீனாவேலை—சீனர்களால் செய்யப் பெற்ற வளையல்
சீமான் — ஸ்ரீமான் — திருமகள் கேள்வன் — இங்கு செல்வரைக் குறித்தது
கோமளப்பணி—அழகு மிகுந்த அணிகலன்
முகநட்பிலை—விரும்பவில்லை
7. புனக்கா—புனம்
கண்டி, கதிர்காமம் — இலங்கையிலுள்ள முருகன் திருப்பதிகள்

எண் டிசை போற்றிடும் யாழ்ப்பாண
தே சத்தி லிருந்து வருகிறேனடி
மன திசைந்து யிசைந்து நடந்து
வந்ததால் இளைப்பும் கொண்டேனடி
இருநீ பரண் அடி கீழினில்
கரநீ ட்டிடு அணிவேன் வளை
இதுவே நல்ல சமய மல்லவோ?
இகனை முகனை தகையுந் தீர்ந்தேனடி (எண்டி) (8)

ஆயிரங் கோடி திரவியந் தந்தால்
அதன்விலை மேலாகும்—வளை மேல்
ஆசை கொள்ளுவார் நேச மாகுவார்
அனாதியென் றெண்ணாதே
அடரும்தினை படரும்விளை
அதிலேகிளி களுமேயுது
அழகாகவும் மழமாகவும்
அறிந்து தெரிந்து மிருந்து மாவதென் (ஆயிரங்) (9)

சேயிழை யேகொங்கு தேசம் திருப்பேட்டை
ஸ்ரீரங்கப் பட்டணமாம்
(அதில்) சிறந்த மனித ருறவுண் டாகும்
சித்திரப் பணியாம்
திரு வாவினன் குடி மேவியே
ஒரு மாதமும் அதில் தங்கியே
திடமாகவும் நடையாகவும்
சிக்ப்பு தரிப்பு முகப்புங் காற்குமே (சேயிழை) (10)

---

இசை—புகழ்
கலைமான் — வள்ளியையீன்ற மான். (சிவமுனியின் காமநோக்கால் கருவுற்றது] என்பது புராணவரலாறு)

8. யாழ்ப்பாணம்—இலங்கைத் தலம்
மனதிசைந்து—மனம் விரும்பி
இளைப்பு—சோர்வு
பரண்—காவல் மேடை
இகனை முகனை—எதுகை மோனை—இங்கே இடம்பப் பேச்சைக் குறிக்க வந்தது

9. வளை—வளையல்
அனாதி—அநாதி—திக்கற்றவன்
விளை—விளைபுலம்—ஆகுபெயர்
மழமாகவும்—இளமையாகவும் எனலாம்.

10. சித்திரப்பணி—அழகுடன் விளங்கும் வளையல்

மக்கந் துலுக்காண மராட்டிய தேசமும்
வந்து பணியெடுத் தேன் சிறு
மங்கையர்க் கேற்ற இங்கித முள்ள
வளைய லுங் கொடுத்தேன்
*ம(ய)லுற்றிடு காருண்ணிய
நகர்முற்றிலும் விலை கூறியே
வரும் பாதையில் குறியாச்சுது
மகிழ்ந்து புகழ்ந்து விருந்துவந் தேனடி (மக்கந்) (11)

துக்காணிப் பாளையப் பட்டு கல்கத்தா
கருதியே வந்தெடுத்தேன்—சேலம்
சுத்தியே வந்து மஞ்சள்குப்ப மதனில்
சில தோகையர்க்குங் கொடுத்தேன்
தொலையா வழி கடவாம லே
விலைமாதர்கள் குடி மேவிய
சுருக்காய்த் தரிக்கப் பரிக்கக் கொடாமலே (துக்காணி) (12)

செஞ்சிக் கோட்டைவிட்டு சீனாக்கப்பல் ஏறித்தென்
தேசம் நாடி வந்தேன் (வழி)
திகைத்துத் திகைத்துப்] புனத்தி லோசையும்
செப்பிடவும் கண்டேன்
சிந்தை தெளி வாகியே நான்
வந்து னையுங் கண்டவு டன்
செயல் பெற்றனன் பயமற்றனன்
ஜெக மோகன புகழுண்டாகிய (செஞ்சிக்) (13)

---

11. மக்கம், துலுக்காணம், மராட்டியம்—தேசங்கள்
பணி எடுத்தேன்—வளை கொடுத்தேன்
இங்கிதமுள்ள—இனிமையான—விரும்பத்தக்க
மயலுற்றிடு—ஆசை ஏற்படுத்தும்
காருண்ணிய—கிருபையுள்ள
குறியாச்சுது—நற்சகுனம் ஏற்பட்டது
விருந்து வந்தேன்—விருந்தாக வந்தேன்
* (பாடம்) அயலுற்றிடு

12. துக்காணி, பாளயப்பட்டு, கல்கத்தா } தேசங்கள்
தோகையர்—மகளிர்
தொலையாவழி—நெடுவழி
விலைமாதர்கள்—பரத்தையர்கள்

13. ஜெகன் மோகன புகழ்—உலகினை மயக்கும் புகழ்

வஞ்சிஎன் தாய் பேர் மீனாட்சி அல்லோ
பெற்ற மக்க ளிருவரடி பெரு
வயிற்றன் கணேசன் இளைய செட்டிக்கு
வடிவேல் பட்டமடி
மாது தெய் வானை யல்லோ?
ஏது மறி யாள் சிறியாள்
மணமுஞ் செய்தேன் துணை யாகவே
மறித்துக் குறித்து வெறுத்து வந்தேனே (வஞ்சிஎன்)
(14)

கந்தன் செட்டியென்று யித்தலைக் கெல்லாம்
கண்டவர் சொல்வகேள்—என்னைக்
காண வென்றாலுமே தோணாமல் போகுமே
காரணம் நீ யறியாய்
கர நீட்டிடு ரதம் போலவே
வளை மாட்டு வேன் இளையாமலே
கனி வாயினால் பணம் ஓதடி
கலங்கி யிலங்கு அலங்கிக் கொண்டானடி (கந்தன்)
(15)

சந்திர வட்டமொரு கண்ணாடி
ஆயிரம் பொன் பெறுந் தையலரே
அது தானும் போதா தொரு
சூரிய வட்டத்தின் மேல் விலை
சற்குணமே சமய மிது
தமையன் மார்கள் வருவாரடி
தருவாய் திரவியம் ஓதடி
தடித்துப் புடைத்துக் குடத்தி லடைக்க (சந்திர) (16)

---

14. இளைய செட்டி—முருகன்
மீனாட்சி—பார்வதி தேவி
15. இத்தலை—இக்காலம்
காணவென்றாலும்—காணவேண்டுமென்றாலும்
தோணாமல்—தோன்றமாட்டேன்
கனிவாய்—கனிபோன்ற வாய்
பணம் ஓது—விலை கூறு
அலங்கி—இரங்கி
16. சந்திர வட்டம் / சூரிய வட்டம் } வளையல் வகைகள்
சற்குணம்—நற்குணம் உடையவள்
திரவியம்—பொருள்—விலை

வள்ளி:-

ஆயிரம் பொன்பொருள் தாரே னுனக்கு
வரகு கூவரகு தனபடியாய் விளைந்த(து)
தானே இருக்கு தவிட்டரிசி புல்என்
தாய் தந்தைக் கோர் குழந்தை
தாதிகளுஞ் சகியார் நீ வந்ததுமே அறியார்
தருநிதி கள் வேறே இல்லை
தருவாய் பெறுவாய் குறைசொல் லாமல்தானே
(ஆயிரம்) (17)

முருகன்:-

ஆருக்கு வேணும் தவிட்டரிசி புல்
அசலார் வசை சொல்லுவார் இதை
அப்புறஞ் சொன்னாலுமே என் குலப்
பழிப்பாக எனை வெல்லுவார்
ஆதி நேரமும் ஆச்சே—தினைப்
பதி தா னிருப் பாச்சே
அகங்காரமோ பகை நேரமோ
அலைச்சல் உளைச்சல் விளைச்சல் இருந்தும் (ஆருக்கு)
(18)

---

17. தாரேன்—தரமாட்டேன்
கூவரகு—வரகின் ஒருவகை (வழக்கு)
சகியார்—விரும்பார்
தருநிதிகள்—வேறு செல்வங்கள்
தனபடியாய்—தானப்படி என்ற வழக்குச்சொல்—அதிக
மாய் எனப்பொருள் தரும்

18. ஆருக்கு—யாருக்கு
அசலார்—அயலார்—அடுத்தவர்—இங்கே இனத்தவர்
அதிநேரம்—அதிக நேரம்
இருப்பு—தங்குமிடம்
அகங்காரமோ—உன் ஆணவமோ
பகை நேரமோ—என் கெட்ட நேரமோ

வள்ளி:-

ஆனா லுனக்குத் தரவொரு காசில்லை
அண்ணே யென் செய்வேன்—முள்
ளடர்வனந் தனில் விளைதினை யல்லாமல்
ஆர் கொடுப் பார் காசு
அச்சமான தில்லாமலே
இச்சணமே யேகிவிடு
அறிந்து தெரிந்தும் இருந்தும் ஆவதென்
(ஆனா லுனக்கு) (19)

முருகன்:-

கானக் குறத்தியே நான் சொல்லும் வார்த்தை கேள்
கைக்கு வளையிடு வேன்
கட்டி யணைந்திடு முத்தங் கொடுத்திங்கு
காமனையுஞ் செயிப்பாய்
கலையைத் திற துடை தட்டியே
சிலையைக் கணை மூட்டியே
கனக ஸ்தனமும் நெருடியே
கருத்தில் நினைத்த படிக்கு முடிப்பேன் (கானக்) (20)

வள்ளி:-

போங்காணும் பித்தப் பயித்தியங் கொண்டிடும்
போதங் கெட்ட செட்டியே – (இந்த)
புத்தி நீ எங்குப் படித்தாயிது
போது மோ சொல் மட்டியே
பொறுக்க முடி யாதே யினி
முறுக்கும் மீசைக் காரருனை
பொருவார் எதிர்வார் மனம்
பொறுத்தேன் உரைத்தேன் குறத்தி நானல்லவோ
(போங்காணும்) (21)

---

19. முள்ளடர் வனம்—முள்ளடர்ந்த காடு
இச்சணம்—இந்த க்ஷணம்—எதுகை நோக்கித் திரிந்தது
20. காமனை — காமத்தைக் குறித்து வந்தது
கலை — ஆடை
21. பித்தப் பயித்தியம் — ஒருபொருட் பன்மொழி
போதங் கெட்ட — அறிவுகெட்ட
மட்டி — மடையன்
முறுக்கும் மீசைக்காரர் — தமையன் மார்

பாங்காக நெத்தியில் பட்டமுஞ் சாத்தி என்
பக்கத்தில் வந்தா(ய்) — எந்தன்
பாங்கிமார் காணாமல் போங்காணுஞ் செட்டியே
பட்டப் பக லல்ல வோ
பல பேருட மகனே குற
குல மென்றெனை அறியாயோ நீ
பகவான் விதிப் படியோ இது
பகரும் விகடம் குகனுக் கேற்குமோ (பாங்காக) (22)

செட்டி மகன் செட்டி போலே யெனதுட்
சிந்தையில் தோணவில்லை — கள்ளர்
சில்லாக்கு வந்த கள்ளரே அல்லாது
தெய்வ வணக்க மில்லை
செங்கை வடி வேலனே
எங்கள் குல தெய்வமே
சின்னஞ்சிறு பெண்ணல்லவோ
சிவனார் மகன் அடியாள் எனை
தீங்காகவே நினையாம லேபோம் (செட்டிமகன்) (23)

---

22. பாங்காக — அழகாக
பட்டமும் — திருநீறு
பாங்கிமார் — தோழியர்
பலபேருடமகன் — இழிவுரை
பகவான் — இறைவன்
விகடம் — கேலிப் பேச்சு
குகன் — முருகன்

23. சில்லாக்கு — வழக்குச்சொல்
கள்ளரே — திருடர்போல்
சிவனார் மகன் — முருகன்

பட்டப் பகலில் பறிகொடுத்தவன் போல்
பார்த்து விழிக்கிறாய் — உன்னைப்
பார்க்கிலுங் கெட்டிக் காரன்போல்
தோன்றுதென் பரணி லொளிக்கிறாய்
பரிகாச மோயிரு உந்தனை ஒருபோதும்
விடார் கந்தனே
பயமில்லையோ அயில் கொண்டுனை
பறித்துக் குறித்துத் தரித்து விடுவார் (பட்டப்பகலில்)
(24)

முருகன்:-

ஆதர வாகவுன் ஆலோலச் சத்தங்கேட்
டன்புட னிங்கு வந்தேன் — இங்கே
ஆண்துணை இல்லையே நாம்போவோ மென்றெண்ணி
அயர்ந்து நா னிங்கு வந்தேன்
அழகு வடி வான பொருள்
வளைய லிது கிடையா திது
அறி ஒருப கார மிது
அணிவாய் பணிவாய் துணிவா யிப்போது (ஆதரவாக)
(25)

வள்ளி:-

ஏதுமறி யாத போதங்கெட்ட செட்டி
ஏகும் வழி பாரு — இங்கு
எந்த னண்ணன் மார்கள் வந்து விடுவார்கள்
ஏசல் புரி யாதே
இண்டஞ்செடி யல்லோதலை கண்டுமவர் கொய்துவிட
ஏகும் வழி யறியாமலே — நீ
போகுந் தடந் தெரியாமலே
இச்சணமே ஏகிவிடு (ஏதுமறி) (26)

---

24. ஒளிக்கிறாய் — ஒளிகிறாய்
பரிகாசமோ — கேலி செய்கிறாயோ
அயில் — வேல்

25. ஆதரவாக — அன்பாக
ஆலோலம் — ஒலி
உபகாரம் — உதவி

26. ஏகும் வழி பாரு — தப்பிப் போக வழிபார்
ஏசல் — இகழ்ச்சி

முருகன்:-

மாது குறவள்ளி மங்கையே நான்கொண்ட
மய்யலைத் தீராயோ
மோகமாகினே னுந்தன்மேல் தாகமுங் கொண்டேன்
காமன் றனை வெல்லுவாய்
மலை யுற்றிடுங் குமரேசனும்
வரமுற்றிலும் அருள் செய்குவார்
மனதில் குறை நினையா மலே
மருவி செருவி உருகிப் புணர்வோம் (மாது) (27)

கோதை குழல் வள்ளி நாயகி யேஎன்னைக்
கூடி மருவிடு வாய்
கோமா னிருக்கும் கொலுவுக்கும் பாதை
கொண்டுமே காட்டிடு வாய்
குலவித்தைகளோ ஸ்தம்பனத்தில்
வித்தைகளோ செப்படி குறி
காரணமோ அறியேன்
குறத்தி சமர்த்தி நிறுத்தி வையாதே (கோதைகுழல்) (28)

---

இண்டஞ்செடியல்லோ — இண்டஞ்செடியைக் கொய்வதுபோல்
தடம் — பாதை
இச்சணம். இ — க்ஷணம் — இப்பொழுதே

27. மய்யல் — மையல்
மோகம் — காதல்
மருவி — கலந்து
செருவி — ஊடி

28. கோதை—மாலை
கோமான்-அரசன்-இங்கே மன்மதனைக் குறிக்க வந்தது.
தம்பன வித்தை—உடலை அசைவற நிறுத்தும் வித்தை
செப்படி—செப்பிடுவித்தை—தந்திரவித்தை — செப்பில் பந்தினை இட்டு மறைத்துக் காட்டும் வித்தை
சமர்த்தி—கெட்டிக்காரி
குறி—ஒருவகைச் சாத்திரம் சொல்லுதல்

வள்ளி:-

கெட்டி வெகு கெட்டிக்கார நீயல்லது
கேலிக ளின்ன முண்டோ—புனக்
கிள்ளைகளும் வனத்துள்ள பக்ஷிகளும்
கிளைகள் கூட்டும் உண்டோ
கிளையின் முறை உளதாயின
குளவின்தகு வளை கழனியில்
கெச கரணம் போட்டுவிடும்
கிறுக்கோ திருக்கோ யிதுக்கோ வந்தாய்நீ
(செட்டிவெகு) (29)

ஒட்டாத வார்த்தையை நெட்டுர மாகவே
முன்னே யுரைத்தாயே நீயும்
ஓடிப்போ நில்லாத நானும் வேள்விமலைக்
குகந்த குறத்தி யல்லோ
உள்ளபடி சொல்லுகி றேன்
வள்ளியெனும் பெயரானதும்
உலகந் தனிலே கேட்டிடு
ஒளியின்ற வெகு பலன் சொல் (ஒட்டாத) (30)

மேவுங் குணவிதரண வள்ளி யென
வடிவேலனுமே நினைந்தான்—குற
வேடங்கொண் டாப ரணங்களை
சூட்டினார் மெல்லியாள் என்றணைந்தார்
வேறே கதையாச்சே முதற்சி ரானதிலவன் போந்து
விபதை மகளான தினால் விடுமா
விரும்பி விரும்பிப் புகழ்ந்து (மேவும்) (31)

---

29. கெசகரணம் — யானை காதை அசைப்பது போல் அசைக்கும் வித்தை
திருக்கு—வஞ்சகம்.

30. ஒட்டாத வார்த்தை—பொருந்தாத சொல்
நெட்டூரம்—நீட்டூரம்—கொடுமை
வேள்விமலை—வள்ளிக்குரிய மலை

31. குணவிதரண—குணச்சிறப்பு மிகுந்த (விதரணம்—அறிவு)
விபதை—தேவமகள்—திருமகள்

நாவலர் போற்றும் கவிவாணர் களுக்கும்
நாட்டி லனை வோர்க்கும்
நாடரிய வேலவர் தாசனடி யவர்
நண்பர்க்கும் வாழியதே
பலமாக சண்முக தாசனும்
கலைவாணி தனைப் போற்றியே
நல்கு தமிழ்ச் செல்வ மிது
நாளும் வாழ வாழி தாமே
(நாவலர் போற்றும்) (32)

---

32. நாடரிய – அருமையான - உயர்ந்த (தேடக் கிடைக்காத செல்வம் என்பது போல)
சண்முகதாசன் - ஆசிரியர் பெயர்

## 3. சுப்பிரமணியர் பேரில் சிந்து

இச்சிந்து 5 பகுதிகளாகக் காணப்பெறுகிறது. ஐந்து பகுதிகளும் ஒன்றோடொன்று தொடர்புடையதாகத் தெரிந்தில. 5 சிறு நூல்களாகவே காணப்பெறுகின்றன. இருப்பினும் ஐந்தும் ஏட்டுச் சுவடியில் ஒன்றாகவே இருந்ததால் தொகுத்தே பதிப்பிக்கப் பெற்றுள்ளது. ஏடுகள் வரிசை மாறி இருந்தன ஆயினும்-பொருள் நோக்கி வரிசைப் படுத்தப் பெற்றுள்ளது.

ஏட்டில் காணப்பெறும் 5 பகுதிகள்.

1. ஆனந்தக் களிப்பு.
2. பவனிச் சிறப்பு.
3. பள்ளு.
4. நந்தவனச் சிந்து.
5. காவடிச் சிந்து.

இத்தகு ஐந்து பிரிவுகளைக் கொண்டிருக்கும் இச்சிந்து - ஓசையால் சிந்து இலக்கியமாகவே விளங்குகிறது. ஓசை நூல் முழுமையும் ஒரே அமைப்பில் இல்லை. பல விதங்களில் சந்த அமைப்பு அமைந்துள்ளது. இடையிடையே நொண்டிச் சிந்து ஓசையும் காணப்பெறுகிறது. ஆனந்தக்களிப்பு வரிகள் கண்ணியாக அமைந்துள்ளன. இரண்டிடத்தில் (35 ஆம், 49 ஆம் கண்ணிகள்) மட்டும் 3வரி கொண்ட பகுதி அமைந்துள்ளது. இது மொத்தம் 141 கண்ணிகளைக் கொண்டு விளங்குகிறது.

அடுத்த பகுதி பவனிச் சிறப்பு. ஆறு வரிகளைக் கொண்ட சந்தப்பாவாக அமைந்துள்ளது. 17 பாடல்கள் அமைந்துள்ளன.

அடுத்த பகுதி பள்ளு. இருவரிக் கண்ணியாகவே அமைந்துள்ளது. மொத்தம் 61 கண்ணிகளைக் கொண்டதாக விளங்குகிறது. அடுத்த பகுதி நந்தவனச் சிந்து. இதுவும் 2 வரிக் கண்ணியே. 38 கண்ணிகளை உடையது. அடுத்த பகுதி காவடிச் சிந்து. சிந்துப்பாவிற்கு ஏற்ப - சிந்து ஓசை சிறப்பாக அமைந்து -

இருவரிக் கண்ணியாய் 31 கண்ணிகளை உடையதாய் விளங்கு கிறது. நூல் முழுமையும் ஆய்ந்து பார்த்தால் இனிய ஓசையும் முருகப் பெருமானின் பெருமையும் இயற்கை வருணனையும் நமக்குக் கிடைத்தற்கரிய செல்வங்களாகக் கிடைத்திடும்.

**ஆசிரியர்**

இந்நூலை எழுதிய ஆசிரியர் தன்னைப் பற்றிய குறிப்பை எங்கும் காட்டவில்லை. சிந்து ஆசிரியர்கள் பாட்டின் தொடக் கத்திலோ அல்லது இறுதியிலோ தங்கள் பெயரைச் சுட்டுவது போல இவ்வாசிரியரும் சுட்டியிருந்தால் நாம் தெரிந்து கொண் டிருக்க முடியும். அக்குறை சிந்து ஆசிரியரிடத்தில் அமைந்து விட்டது. இவ் ஆசிரியர் சைவப்பற்று மிக்கவர் என்பது நூலின் மூலமாகத் தெள்ளத் தெளிய வெளியாகிறது. சந்தம் பாடும் செந்தமிழ்ப் புலவராகவும் அவர் விளங்குகிறார். இயற்கையை வருணிக்கும் இயற்றமிழ்ப் புலவராகவும் விளங்குகிறார். இது தவிர ஆசிரியர் பற்றிய செய்திகள் கிடைக்கவில்லை.

**நூல் தந்திடும் பொருள் : ஆனந்தக் களிப்பு**

இப்பகுதியில் முருகப் பெருமான் வள்ளியம் பெருமாட்டியை தினைப்புனத்தில் கண்டு காதல் கொண்டு மணம் செய்ததை ஆசிரியர் குறிப்பிடுகின்றார். ஆனந்தக் களிப்பு என்ற தலைப்புக் கேற்ற வண்ணம் முருகப் பெருமானைப் பாடுவதால் நூலாசிரி யருக்கு ஆனந்தமும், அதைப் பாடி உணர்வதால் நமக்கு ஆனந்தக் களிப்பும் ஏற்படுகின்றது. இப்பகுதியில் முருகப் பெருமானுடைய வரலாறுகள் முழுமையாக ஆங்காங்குச் சுட்டிக் காட்டப் பட்டுள்ளன. இப்பகுதியில் அமைந்துள்ள சந்தங்கள் சிறந்த பண் ஓசையோடு விளங்குகின்றன.

> "ஆண்டிமக னாண்டிகும ராண்டி - எங்கள்
> ஆறுமுக வேலரென வந்த குமராண்டி" (20)
> "வெள்ளிமலை தங்கமலை விந்தைமலை உண்டு -
> அங்கே
> விரைகமழும் சந்தனச் சோலை வேலரது கண்டு" (63)
> "வந்தவகை எந்தனுடன் சொல்லும் - நீரும்
> வம்புதும்பு பேசாமல் மரத்தடியில் நில்லும்" (70)

என்பன போன்ற பகுதிகள் படிக்கப் படிக்க ஓசை இன்பந்தருவன வாகும்.

முருகனும் வள்ளியும் பேசுவதை ஆசிரியர் வழக்குச் சொற்களோடு கையாண்டுள்ளார். பீற்றாதே, குறவேஷம். பரதேசி, அன்னிதம், வசியம், முடுக்க, கோரணி, கலந்துக்கோ, சேர்ந்துக்கோ என்பன போன்றன எடுத்துக் காட்டுக்குரியன.

முருகப் பெருமான் வள்ளியம் பெருமாட்டியிடம் தன் வேண்டுதலைக் கூறும் பகுதியை,

"நம்பின பேர்க்கு வஞ்சகம் செய்யலாகுமோ - உன்னை
நாடி வந்து வாடி நொந்து நையலாகுமோ 130
வம்பு சேரும் கொங்கைநடு வுற்று நானும் - முத்து
மாலையாய்க் குலுங்க வரம் பெற்றிலேனே 131
துள்ளுமுன் விழியிலிட்ட மைய தாகவே
துலக்கமா யிருந்தேனில்லை மெய்ய தாகவே 132
வள்ளியுடன் முகத்தில் பூசு மஞ்சளாகவே
மாதுடன் இருந்தேனில்லை தஞ்ச மாகவே" 133

என்பதாக அமைத்துள்ளார். தற்கால அகப்பொருட் சுவைக்கு ஏற்ப அப்பகுதி அமைந்திருப்பது படித்து இன்புறத் தக்கதாகும். மேலும் முருகனின் வேடத்தைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது எந்தவேடம் கொள்ளுவது என்று சிந்தித்து இறுதியில் வேடன் வேடம் கொண்டதை ஆசிரியர் நகைச் சுவையோடு பாடியுள்ளார். (73—77 கண்ணிகளில்)

**பவனிச் சிறப்பு**

ஆனந்தக் களிப்பில்,
இரைப் போதிலும் பிரியேன் — மாத்
திரைப் போதிலும் மறவேன்."

என்ற பகுதிக்குப் பின் சந்தத்தாலும் — பொருளாலும் வேறுபட்டிருந்த பகுதி பவனிச் சிறப்பு என அமைக்கப் பெற்றுள்ளது. பாட்டு 143ல் பவனி வந்தார் என முடிவதால் இத்தலைப்பு இடப்பெற்றது. இப்பகுதியில் காணப்பெறும் கடவுள் வணக்கப் பாடலும் பிறிதோரிடத்தில் இருந்தமையைப் பொருள்நலம் நோக்கி முன்னதாக அமைக்கப் பெற்றுள்ளது. பாடலின் இறுதியில் 'தனை' என்ற சந்த அமைப்பு காணப்படுகிறது. இப்பகுதியில் காணப்பெறும் பாடல்கள் முருகன் பவனி வந்த போது நிகழ்ந்த நிகழ்ச்சிகளை வருணனை செய்வதோடு — முருகனின் பெருமைகளையும் கூறுவனவாகும்.

முருகனின் பெருமை கூறப்பெறும் பகுதியில் முருகன் கரக முனிக்கொரு குரு என்பதும், கடலுண்ட முனிவன் தெண்டனிட வண்டமிழ் உரைதனைப் புகன்ற அருளும், முருகன் காலனை உதைத்தவனின் பாலன் என்பதும், கானக்குழல் தெய்வத்திரு மடந்தை கணவன் என்பதும், திணைப்புனம் சென்று குறமாதை மணந்தவன் என்பதும் கூறப்பெற்றுள்ளன. முருகன் அரிமருகன் என்பதனைக் கூறுமிடத்துத் திருமாலின் அருளாடல்களும் நினைக்கப்படுகின்றன. மேலும் முருகன் வணங்குவார் பண்டை வினையினைத் துண்டுசெய்வான் என்பதும்; அனுதினம் பணிவார் அருவினை தானறுப்பான் என்பதும் குறிப்பிடப்படுகின்றன.

"செஞ்சரன் இறைஞ்சும் அடியார்க்கருள் தரும்
கஞ்சமலர் மிஞ்சு சரணம்
தோடவிழ் கடப்ப மலரும் பிரசம் கமழ்
ஏடவிழ் நறைத் தொடையலும் புனைந்தருள் சோதி"

என்பன போன்ற தொடர்கள் செந்தமிழ்ச் சொற்களைக் கொண்டு ஆசிரியரின் தமிழ் உணர்ச்சியை விளக்குகின்றன. ஆனால் இச் செந்தமிழ் வழக்குகள் இந்நூலில் பிற பகுதிகளில் அமைந்துள்ள வழக்கு நடைச்சொற்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது ஒரே ஆசிரியரே எல்லாப் பகுதிகளையும் (5 பகுதிகளையும்)எழுதியிருப்பாரோ என்றஐயத்தைத்தோற்றுவிக்கிறது. நடை வேறுபாடு அந்த ஐயத்தை மேலும் வலியுறுத்துகிறது. ஆனால் ஆசிரியர் தன்னுடைய புலமையை வெளிக்காட்ட இவ்விரு நிலையில் நூலை எழுதி வெளியிட்டிருக்கலாம் எனவும் அமைதி கொள்ளலாம். அந்த அளவிற்கு மற்ற நான்கு பகுதிகளைவிட இப்பகுதி மிகச் சிறந்த நடையோடு விளங்குகிறது.

**பள்ளு**

இப்பகுதியும் முன்பகுதிச் செய்திகளோடு தொடர்புடையது அல்ல. இப்பகுதியில் இளசைக் குமரன் எட்டேந்திரனின் பண்ணையில் நடைபெற்ற அறச்செயல்கள் கூறப்பெற்றுள்ளன. இவ்வறச் செயல்களை வள்ளலின் பணியாளர் ஒருவர் செய்து—அதனைக் கூறுவதாக அமைந்துள்ளது. பெரும்பாலும் நெல் அளந்து கொடுத்து அவ்வறச் செயல்கள் செய்யப் பெற்றுள்ளன. எனவேதான் நெல் அளந்து கொடுத்த செய்தியே இப்பகுதி முழுமையும் காணப் பெறுகிறது, எனவே நூலாசிரியர் அவ் வள்ளலால் ஆதரிக்கப் பெற்றவராக இருக்கலாம் என எண்ணலாம். இப்பகுதி வரலாற்றுச் சான்றுடையதாக விளங்குகிறது.

இப்பகுதியில் பலவகை நெல்லின் பெயர்கள் கூறப்பெறுகின்றன, சீரகச் சம்பா, பூந்தாளைச் சம்பா, வாழைப்பூச்சம்பா போன்ற நெல் வகைகள் குறிப்பிடத் தக்கன. அதுபோல அம்பாரம், பண்டாரம் போன்ற நெல் வைக்கப்படும் இடப் பெயர்கள் கூறப்பெற்றுள்ளன. மேலும் நாதர்பட்டர், திருமலை அய்யங்கார், கஸ்தூரிவாரணன், நாகூர் முத்துப்புலவர், ராக்கப்பன் செட்டி, முத்துப்பேயன், கனகசபாபதி, குமாரவேல் போன்ற பெயர்கள் பணியாளர்களின் பெயர்களாகக் குறிக்கப்பெறுகின்றன.

மேலும் நெல் கொடுக்கப்பட்ட இடங்களாகக் கழுகாசல வேளின் திருக்கோயில், வெங்கிடாசல விஷ்ணு கோவில், சம்பாதி வெற்புக் குமரகுருபரர் சன்னதி, மாற்றினிக் கிரிக்கோவில், நமச்சிவாயப் பண்டாரம், கடல்வளர் சொக்கேசர் மீனாட்சி கோவில், போன்றவை குறிப்பிடத் தக்கன. மேலும் பாட்டம், பகுதி போன்ற உழுதுண்போர் உழுவித்துண்போருக்கு உரிய பகுதிகள்; கோயிலுக்கு விதிக்கும் நிபந்தனைகளாகிய படித்தரம், வராத்தம், கட்டளை போன்ற சொற்களும், சம்பிரதி போன்ற கணக்கர் பெயர்களும் குறிக்கப் பெறுகின்றன; கோட்டை என்ற அளவுப் பெயரும் காணப்பெறுகிறது. (இருபத்தொரு மரக்கால் கொண்ட அளவுக் கருவி கோட்டை என்பதாகும்)

கோயில்களுக்குச் செய்யும் சிறப்புக்கள்; குளம் வெட்டல், சத்திரம் நடத்தல், சாத்திர தோத்திர வேதபாராயணத்துக்கான உதவிகள் ஆகியவை குறிக்கப்பெறுகின்றன. மேலும் நாகூர் முத்துப்புலவர், நற்றமிழோங்கும் கடிகைப்புலவர், நமச்சிவாயப் புலவர் ஆகியவர்களுக்கும் வீணை இசைவல்ல வெள்ளை அண்ணாவி குமாரருக்கும் செய்த சிறப்புக்கள் கூறப்பெறுகின்றன.

இவ்வாறு எட்டேந்திரனின்—தெய்வக்கடன்கள், அறிஞர்களைப் போற்றுதல் ஆகியவை சிறப்புடன் கூறப்பெற்றுள்ளன. எனவே இப்பள்ளு பிற பள்ளு நூலின் ஒரு பகுதியாகக் காணப்பெறும் குறவன் நெல்வகைக் கூறும் பகுதியைக் கொண்டு சிந்தாக பாடப்பெற்றுள்ளது எனலாம்.

**நந்தவனச் சிந்து:**

இப்பகுதியில் முத்துசாமி என்பார் செய்த நந்தவனத்தின் சிறப்பு கூறப்பெற்றுள்ளது. இதில் நந்தவனத்தினை ஆசிரியர் வருணனை செய்து இலக்கிய நயத்தை அள்ளித் தருகிறார் எனலாம்.

"கொந்து கொந்தாய் மலர் தூவும்—மயல்
கொண்டிடவே குயில் கூவும் 222
பின்னும் கூடும் பெடை யோடும்
உறவாடும் விளையாடும் 223
பஞ்சவர்ணக் கிள்ளைச் செறிவும்—வெகு
பாந்தக் கலவிகள் புரியும்—கனி 224
பழுக்கும் கொத்தி இழுக்கும்—பிரசம்
ஒழுக்கும் நிலம் வழுக்கும் 225
அஞ்சிறைத் தும்பிகள் ஓங்கும்—குயில்
அன்புடன் வயினால் வாங்கும் மலர் 226
அடுக்கும் சீதம் தொடுக்கும்—மார்க்க
மெடுக்கும் இன்பம் கொடுக்கும் 227

இப்பகுதி இயற்கையைச் சிந்து ஆசிரியர்களாலும் வருணிக்க முடியும் என்பதற்கு ஓர் சான்றாகும். இப்பகுதியில் மிகுதியாக சிந்து இலக்கியம் என்பதை நினைவூட்ட வழக்குச் சொற்கள் அதிகம் இடம்பெற்றுள்ளன அதே நேரத்தில் இனிய நடைத் தமிழ்ச் சொற்களும் அமைந்து பாடல்கள் அழகு பெற்று விளங்கு வதையும் மறுக்க இயலாது.

## காவடிச் சிந்து

கலைமகள் வணக்கத்துடன் தொடங்குகின்றது. வனத்தினில் வேலரைத் தேடிப் பிடிப்பதாகத் தொடங்கி அன்னம், மயில், மாடப்புறா, கிளிப்பிள்ளை, இவற்றை எல்லாம் கூவி முருகனைக் கண்டீர்களோ என்று வினவுவதாக அமைகின்றது. காணையளோ என்ற வழக்குச் சொல் அடிதோறும் இறுதிச் சொல்லாக அமைந் துள்ளது முருகன் ஆண்டி என்பதும், அவன் சூரரைச் சூறையாடி யதும், ஏறுமயில் ஏறிவரும் எழிலும் அவன் 'மதிசூடீ' அளித்தவன், உலகளந்தவர் மருகன் என்பனவும் கூறப்படுகின்றன. மொழிநடை குறைந்திருப்பினும் பத்திச் சுவையும் இலக்கியப் பாங்கும் நிறைந் துள்ளது.

## முடிப்புரை

இங்ஙனம் பல தனி நூல்களின் தொகுப்பான இச்சிந்து செஞ் சொல் வளம் உடையதாக இருந்து பலகாலம் வாய்மொழியாகப் பயின்றதினால் பேச்சு வழக்கே பெரிதும் ஏட்டில் இடம் பெற்றிருக்க வேண்டுமென்று தெரிகிறது. நூலின்முடிவும் சரி யாக அமையவில்லை என்றாலும் சந்தத்தாலும் பொருள் வளத்தாலும், சிந்து இலக்கிய வகைகளில் சிறப்பான இடத்தைப் பெறும் இந்நூல் என்பதில் ஐயமில்லை.

# 3. சுப்பிரமணியர் பேரில் சிந்து

## ஆனந்தக் களிப்பு

சீர்பெருகு சந்தவரை மேவும் பழனிச்
சேவற்கொடியோன்மேல் சிந்துபோல் பாடக் 1

கார்பெருகு தந்திமுகத் தையன்—செந்தில்
கடற்கரை ஆண்டிமேல் தமிழை நான் பாட 2

தார்பெருகும் அபிராமி சொல்வாள்—அருமைச்
சந்தக் களிப்பை யான் தத்திமொழி குளற 3

ஏர்பெருகும் ஆறுமுகத் தையன்—நாளும்
என்னாவில் அனுதினமும் ஆனந்த மயமாய் 4

அத்திமுக(வேல)வனை நித்தம் தொழுவேன்—
நான்முகன்
நாவுடைய மாதே மனமேவி இப்போது 5

புத்திவித்தை சவுபாக்கியம் தருவாள்—நாமும்
பூலோக நாயகன் குமரன்மேல் பாட 6

சத்திஉயர் அருள் பெற்ற வேலா—என்னைத்
தயங்காமல் காக்கிறது நின்கடனய்யா 7

---

1. சந்தவரை—அழகு பொருந்திய மலை
2. கார்பெருகு—கருணை மதம் பெருகு
   தந்திமுகம்—அத்தி முகம்—ஆனைமுகம்
   செந்தில் கடற்கரை—திருச்செந்தூர்
3. தார்—மாலை
4. ஏர்—அழகு
5. நான்முகன் நாவுடைய மாது—நாமகள்
6. புத்தி—அறிவு
   வித்தை—கல்வி
   சவுபாக்கியம்—மிகுந்த செல்வம்

வெற்றி மயில் ஏறி விளையாடும்—அய்யன்
வேலவ னய்ங்கரன் பாதமலர் துணையே 8

குற்றங்குறை தெரியாது எனத் தமிழைக்
குமரன்என் நாவில்வந் தொழுங்காகச் சொல்வாயே 9

பத்தனைக் காக்கும் குறவள்ளி—ஏழையேன்
பாடுதற் கருள்தல் நின்கடன் தாயே 10

ஆறுகுற்றம் நூறுபிழை செய்யும்—அடிமை
யறியாக் குழந்தைமேல் அன்புசெய் தருள்வாயே 11

தேறுவேன் அபிராமி செயலால்—ஒரு
சிங்கார மாலைபோல் ஆனந்தக் களிப்பை* 12

கூறுவேன் உனதுடைய நாமம்—எனக்குக்
குறையொன்று வாராமல் குமரநீ காப்பாய் 13

ஏறுமயில் மீதேறி மாலைக் கிப்போ
யிதுவேளை காப்பது நின்கட னய்யா 14

சூராதி சூரனை வெறுத்த—சிவ
சுப்பிரமணியர் அருள்பெற்று நான்தொழுவேன் 15

ஆராத கானங் கடந்தய்யன்†—ஞான
ஆறுமுகத் தையன்உன் தரிசனம் பெறவே 16

உபாங்கமுடன் காவடி எடுத்து அன்பர்
போற்றியே வேலருட‡ பாதமே துதித்து 17

கைவேலு வட்டமிட் டாடச்—செந்தூர்க்
காவடிகள் இருகோடி சூழ்ந்து விளையாட 18

குயில்கூவ மயிலும் கூத்தாட—சாமி
குமரகுரு பரமுருக அரகர என்றாட 19

---

8. ஐங்கரன் — விநாயகன்
12. தேறுவேன் — தெளிவேன்
*ஆனந்தக் களிப்பை – ஆனந்தக் களிப்பாய் எனவும்படும்
16. ஆராத கானம் கடந்து — அரிய வழி கடந்து
'ஆறாறு காதம் கடந்து' எனவும் பொருந்தும்.
17. உபாங்கம் —துணை (பக்க வாத்தியம்)
†ஆறாத நாமம் கடந்தய்யன் என்பது மூல வடிவம்
‡வேலருடைய என்பதன் சிதைந்த வடிவம்

ஆண்டிமக னாண்டிகும ராண்டி—எங்கள்
ஆறுமுக வேலரென வந்த குமராண்டி 20

தாண்டி மயி லேறிவரு வாண்டி—கிழவன்
தானாவே உருவெடுத்து வருவாண்டி 21

வேண்டிய கானவர்கள் வரவே—குமரன்
வேங்கைமர மாகவே நின்றவடி வாண்டி 22

பாண்டிக் குறவருட மகளை—நித்தம்
பட்சமுட னிச்சித்து வந்தகும ராண்டி 23

கைதனில்வே லாயுத மெடுத்து—நல்ல
கனகமணி ரத்தினத் தேரின்மே லேறி 24

எய்ததொரு சூரனையும் குத்தி—அவனை
இருபிளவு செய்துமே வாகனம தாக்கி 25

செய்ததவ முனிவோர்கள் தேவர்—தம்மைச்
சிறைவிடுத் தேதெய்வ லோகமீ தேற்றி 26

அய்வர் சகாயன் மருகன்—அனங்கர்*
ஆறுமுக வேலவரை வந்து தொழு தேத்தி 27

பாருங்கோ பூலோகம் வாழும்—இந்தப்
பார்புகழும் வேந்தரே செந்தூர் நகரில் 28

வாருங்கோ ஒருமனது கொண்டு எங்கள்
வடிவேலர் பாதமதை வாழ்த்துங்கோ நின்று 29

---

20. ஆண்டிமகன் - பிட்சாடனப் பெருமானாகியசிவன்மகன்
குமராண்டி — ஆண்டிக் கோலம் கொண்ட முருகன்
22. கானவர்கள் — குறவர்
23. பாண்டிக்குறவர் — பாண்டிய நாட்டுக் குறவர்
பட்சம் — அன்பு
இச்சித்து — விரும்பி
26. செய்ததவ முனிவோர்கள் — தவம் செய்த முனிவர்கள்
27. அய்வர் சகாயன் மருகன் — மால் மருகன்
அனங்கர் — கடவுள்
*அணங்கார் எனவும் பாடம் ஆயின் 'விழா அயரும்', 'வெறியாடுகின்ற' என்பது பொருளாகக் கொள்ளலாம்.
29. ஒரு மனது — அலையாத, ஒரு முகமான நினைவு

கலகலென வருதண்டைக் காலா—உக்கிர
காளிதிரி சூலிகவு மாரிபெறு பாலா 30

பலபல யோசனைசெய் யாமல்—எந்தன்
பவ வினையைத் தீர்ப்பதுவும் பழனிமலை யானே 31

ஆங்கார ஓங்கார சக்தியம்மாள்—தேவி
அம்மையுமை பங்கில் வளர் சிவனுடைய சத்தி 32

வாங்காத காவடிகள் கட்டி—நல்
வையாபுரி சுற்றி வாரா னிடும்பன் 33

மருவும் மருக்கொழுந்தும் – வகையாய்
மாலை புனைந்து மரகதரூப மயி லேறியே 34

பயின்றரக்கன் சூரர் பகை தீரவே
திருவும் நிறைந்த தலம் திருப்பரங் குன்றில் மாடத்
தெருவில் பவனி வார தாரய்யா 35

அறுமுகன் பன்னிருகை அயில் கொண்டு
அசுரரைமுன் சமர் செயும் குமரரிவர் தானடி 36

சோலைகளும் கன ஆலயமும் திகழ்
சோபித சம்பிரமம் மீறிய செந்தினில் வேலன்மேல்* 37

---

30 கலகலென— தண்டையின் ஒலிக் குறிப்பு
உக்கிரகாளி — கோபமிகுந்த காளி
திரிசூலி — சூலப்படையுடையாள்
கவுமாரி — பார்வதி

32. ஆங்கார ஓங்கார சத்தி — வெற்றிப் பெருமிதம் உடைய ஓங்கார வடிவினளான சத்தி

33. வாங்காத — வளையாத
வையாபுரி — பழனி

34. மரு, மருக்கொழுந்து — நறுமணப்பூண்டு
மரகத ரூப மயில் — பச்சை வண்ணம் உடைய மயில்

37. சோபித சம்பிரமம் மீறிய — அழகும் களிப்பும் மிகுந்த
*இத்தொடர் அமைப்பு பொருள் விளங்கவில்லை

வாலிபர் அன்பொடு பாடிய சிந்தையில் ஆசைகள்
சிந்துகளவே மனதின்புற நானுமே 38

உத்தள வெண்ணீறணிந்து எத்திசை எங்கும் விளங்க
வித்தாரப் பவனி வந்த தாரய்யா 39

சத்திவே லெடுத்துரண சுத்தவீரரைச் செயித்த
சண்முக முத்தையர் இவர் தாண்டி 40

சுத்திவிளையாட வென்றே இத்திசை தனிலே வந்து
அத்திதட மத்தகமீ தேறியே 41

சித்து விளையாட என்றே இத்திசை தனிலே வந்த
சேவகப் பெருமாள் இவர் தாண்டி 42

சூரர்முகங் கிரியூடுருவும் படி
வேல்விடு செங்கை விசாகல் அலங்
காரத் தோகை யிலங்கு மயூர துரங்கை வேலனே 43

பதக்கஞ் சரப்பணியோன் பணிகள்
பருதிஒளி போல வாரதிவ ராரய்யா 44

கதிக்குங் கதலி கன்னல் நிறுத்தி மலர் தூக்கி
கனகரதம் ஏறியவர் தாண்டி 45

தாளந் தவில்முரசு தம்பட்ட மேளமொடு
சங்கீத ராகமுடன் வாரதிவ ராரய்யா 46

வேழஞ் சரவணைகள் கண்டு பயின்றதொரு
வேலேறும் பவனி இவர் தாண்டி 47
வள்ளிக் குறமக ளுள்ளபடி தினை
தெள்ளிச் சிறுதேனை வெல்லப் பொடிதனை

---

39. உத்தளவெண்ணீறு — நீரில் குழையாது உத்தூளன
மாகப் பூசப்பட்ட வெண்ணீறு
வித்தாரப்பவனி — வித்தாரம் - விரிவு - பெரும்பவனி
41. அத்தி — யானை
42. சேவகப்பெருமாள் — வீரனாகிய முருகன்
விசாகன் — குமரன் (திவாகரம் 1-4)
43. மயூரதுரங்கன் — மயிலூர்தி (துரங்கம்—குதிரை—இது
ஆகுபெயராய் ஊர்தியைக் குறித்தது)
46. தாளம், தவில், முரசு, தம்பட்டம் — இசைக்கருவிகள்
47. வேழஞ் சரவணை — நாணல் சூழ்ந்த சரவணப் பொய்கை
வேழஞ் சருளணைகள் - என்பது மூல வடிவம்

வாங்கியுண்ட காங்கையன் விசாகனே
கள்ளத் தனமுட—னுள்ளத் தினில்மிகு 48

வள்ளிப் பெண்தனை மெள்ளத் திருடின
காங்கையன் சுப்பிரமணியர் தானடி 49

உத்த(ர) சிவகிரியில் நித்தம் குழந்தை வடி
வுகந்து குடியிருப்ப தாரய்யா 50

சுத்தி உலகமெங்கும் வெற்றிமயி லேறிவரும்
சுப்பிர மணிய வேலரிவர் தானடி 51

சென்னியில் கிரீடமின்ன செங்கையில் வேலிலங்க
திட்டமுடன் வாரதுரை ஆரய்யா 52

சொன்னவடி வேலெடுத்து சூரனைச் சங்காரம் செய்யும்
சுப்பிரமணிய வேலரிவர் தாண்டி – எங்கள் 53

திங்கள் துலங்கு முகத்தில் சேர்ந்த கத்தூரிந்
திலகம் தீட்டிமிக வாரதுரை ஆரய்யா 54

மையல்கொண்டு வேலர்குற மாதைத், தேடியே-கந்தன்
மானிடர் வடிவு—கொண்டு பாதை கூடியே-தெய்வ 55

நாரதனே கூடச்சேர்ந்து வாவென்றே-கந்தன்
சீக்கிரம் குறப்பெண்ணாளைப் பார்க்கவே—சென்று 56

வில்லெடுத்து அம்புதொட்டு வேடர் போலவே-கந்த
வேலவர் வனத்தைத் தேடி மிஞ்சி ஏலவே 57

செல்லவழி கேட்டுத் திசை நாடியே - கந்தன்
சீக்கிரம் குறப்பெண்ணாளைப் பார்க்கவே—சென்று 58

---

48. காங்கேயன் — முருகன் (கங்கை...கொண்டு சென்று சரவணத்திடுதலால் பெற்ற பெயர். கந்த-திரு-16)
விசாகன் — குமரன் (கந்த – திருவிளை-60)

50. உத்தசிவகிரி — புகழுரை மிகுந்த சிவகிரி
உத்தர சிவகிரி — வடக்கில் உள்ள சிவகிரி எனலுமாம்

52. சென்னி — திருமுடி

53. சொன்ன — சொர்ண—பொன்

55. மையல் — மயக்கம்

57. மிஞ்சி — மிக, கடந்து
ஏல — பொருந்த

கண்களுக் கெட்டாத தினைக் காடு தூரமோ - மெய்யா
கந்தன் வள்ளியைக் காண்ப தெந்த நேரமோ 59

தன் தினைப் புனமும் வள்ளித் தலமு மெதுவோ - வள்ளி
தன்னைக் காண்ப தெக்காலமோ
சமயம் என்றைக்கோ 60

தூரவோ கிட்டவோ லக்குச் சொல்லு மெனக்கே—அந்தத்
தோகை தன்னைக் காண்பித்தால் சுகிர் தமுண்டுனக்கு
நாரதா 61

வாவென்றே வேலா நண்ணி நடந்தார்—அந்த
நாகமலைக் கப்புறத்தில் நண்ணி நடந்தார் 62

வெள்ளிமலை தங்கமலை விந்தைமலை உண்டு—அங்கே
விரை கமழும் சந்தனச் சோலை வேலரது கண்டு 63

கிள்ளையும் குயிலன்னமும் கிளைபெருக்கவே—வேலர்
கேள்வியால் வள்ளி என்றதைக் கேட்டுக் கூவவே 64

தோகை வள்ளி கவணோசை தொடர்ந்துள்ளங்
குளிர்ந்தார் வேலர்
சோலைப் பெண்ணா ளோல மென்றது தோணிச்சே 65

வியாயந்தார் வாசாயத் தினைப்புனமும் வளமும்
காண்கின்றார்—வேலர்
வள்ளியின் வடிவு கண்டு வந்தெதிர் நின்றார் 66

எந்தவூர் காணீர் எந்தத் தேசம் இப்பம்‡
எனக் கறிய வகை வகையாய் விள்ளுவீரே நேசம் 67

தென்கழுகு மாமலை எந்த வூரு—யானும்
சிவலிங்கச் செட்டி மகன் கந்தனெனப் பேரு 68

சொந்தமுடன் இந்தவழி வந்து யானும்
தோகைமயில் கொண்டு இந்தப் பூமியில் வந்தேன் 69

---

61. லக்கு—திசை, நெல்லை வட்டார வழக்கு
தோகை—மயில் போன்றவர்
சுகிர்தம்—நன்மை
63. விரை—நறுமணம்
67. விள்ளுவீர்—சொல்லுவீர்
‡இப்பம்—இப்பவும் என்பதன் குமரி மாவட்டப் பேச்சு வழக்கு

வந்தவகை எந்தனுடன் சொல்லும்—நீரும்
வம்பு தும்பு பேசாமல் மரத்தடியில் நில்லும் 70

கண்டு கொண்டார் வேலவரும்—வள்ளி
கட்டழகி தன்னழகி செண்டுமுகில் மாதரசே வள்ளி 71

எந்தவூரு தேசமெதோ நாமறியோம்—இவள்
எவருபெற்ற பெண்மயிலோ நாமறியோம் 72

அந்தரமாய் வனந்தனிலே ஒரு ஆளுமில்லாக் கானகத்தின்
சுந்தரியோ லட்சுமியோ தோகையிள மாமயிலோ
மந்திரஞ்சேர் கயிலைமலை யிவள் வாழும் பரமீசுவரியோ 73

தெள்ளுபுகழ் மானவடிவு கண்டுசிந்தை மிகவே மயங்கி
வள்ளியரைத் தானெடுக்க என்ன வடிவெடுப்போம்
வேலவரும் 74

குறவேஷமொடு வருவோம் வள்ளி தையலரைத்
தானெடுக்க
பரதேசி வேடங் கொண்டு வள்ளிப் பாவையரை
நாமெடுப்போம் 75

வளவிச் செட்டி வேடங்கொண்டு வள்ளி மாதரைக்
கைப்பிடிப்போம்
இளகி மனம் வாடியதால் சுப்பிரமணியர் என்னவேடம்
போடுவோம் 76

வேடர்வேடம் போடுறதைக் கண்டு மெல்லி நல்லா ளேது
சொல்லுவாள் 77

வேறு

அன்னமே மாங்குயிலே—சின்ன
அஞ்சுகமே தேன்மொழியே 78

உன்னையல்லோ நானினைந்து—(இப்)பம்
உருகிமனம் வாடுகிறேன் 79

---

70. வம்பு—வம்புத்தனம், நேரின்மை, வஞ்சனை
தும்பு—அநாகரிக வார்த்தை
71. செண்டு—பூச்செண்டு
73. பரமீசுபரி—பரமேஸ்வரி
76. வளவி—வளையல் (பேச்சு வழக்கு)
77. மெல்லி—பெண்
78. அஞ்சுகம்—கிளி

கன்னல் மொழி மின்னரசே—உந்தன்
கமலமுகம் காண்பதற்கு 80

என்னேனெஞ் சுருகு திப்போ—வள்ளி
ஏந்திழையே வாராயோ 81

பட்டுடையும் தானிலங்கப்
பணிகள் மிகத் தான் துலங்க 82

இட்டமுடன் வந்துநின்று—இப்பம்
என் மயக்கம் தீராயோ 83

காதழகும் மார்பழகும்—அளக*
முகத்தழகும் முத்தழகும் 84

பாதச் சிலம்ப மேவு பண்பென்ன
பைங்கொடியே வந்திடாயோ 85

வனக் குறத்தி ஆசையினால்—வேலர்
மய்யல் கொண்டு தான் மயங்கி 86

எனக்கொருவர் தூது சொல்லி
இணங்கவரக் காணேனென்றார் 87

உன்னை மணம் செய்யுவேன்—உனைவிட்
டொருபக்கமும் போகேன்—என்னை 88

அன்னிதமென்று நினைந்துகொண்டால் எனக்
காதரவார் பெண்ணே 89

ஆதரவென்று சொன்னால்—எனக்கு
அடுத்த கிளை நீயோ 90

---

81. ஏந்திழை—பெண் (அழகிய அணிகலன் அணிந்தவள்)

83. இட்டம்—அன்பு

*வசை முகத்தழகு என்றும் அமையும்

89. அன்னிதம் அந்நியம் என்பதன் பேச்சு வழக்கு
ஆதரவு—உதவி

90. கிளை—சுற்றம்

மித்திர பேதகம் பண்ணாதே நான் சகியேன்—இனிப்
பேசாமல் ஓடிப் போவீரே 91

ஓடிப்போ என்று சொன்னால்—எனக்கு
உயிர்நிலை இங்கிருக்கே என்னைக் 92

கூடிக் குலாவியே கொஞ்சிக் கொண்டாலுன்
குருக்களுக்கே புண்ணியம் 93

புண்ணியமும் தவமும் மடந்தனில் போனால்
செய்வார்களே 94

ஆரண்யமான வனந்தனிலே புண்ணியம்
ஆரிங்கே செய்யப் போறார் 95

ஆரிங்கே என்று சொன்னால்—எனக்
காதாரம் எங்கும் உண்டோ 96

சேரும் படிக்குநீ நம்பிக் கொண்டால்—உன்
சிநேகம் பிரியேனே 97

ஆற்ற மாட்டாமல் புகல் கெட்டு
அலைகிறீர் தொண்ணாந்து —சும்மா 98

பீற்றாதே போமிந்த மட்டுக்கு—தர்க்கித்துப்
பேசினால் கோபம் வரும் 99

கோபமுள்ள இடத்திலே அதிகக்!
குணமுண்டு என்பார்களே—மனத் 100

தாபமில்லாமலே சேரு மந்திரித்
தாலுந்தன் தன்னாளாயிருப்பேன் 101

---

91. மித்திரபேதகம்—நட்புப் பிரித்தல்
93 குருக்கள்—குருமார்
94. மடம்—சத்திரம்
95. ஆரணியமான வனம்—பெருங்காடு
98. ஆற்ற மாட்டாமல்—பொறுக்க மாட்டாமல்
தொண்ணாந்து—ஏங்கி (பேச்சு வழக்கு)
99. பீற்றாதே—தற்பெருமை பேசாதே
தர்க்கித்துப் பேசினால்—வாக்குவாதம் செய்தால்
100. மனத்தாபம்—மனவருத்தம்
101. மந்திரித்தல்—மந்திரம் செபித்தல்

தன்னாளா யிருக்கநீ எனக்குத்
தாய்தகப்பன் கிளையோ 102

எட்டி உன்னாதே மெட்டி மின்னாதே*
இனி உன்னால் ஏன்றதைப் பார் 103

கோரணி பண்ணாதே இதுவரை
கோபம் பொறுத்திருந்தேன் 104

ஆரென்றும் பாராமல் பாங்கியரை விட்
டடித்து முடுக்கச் சொல்வேன் 105

அடித்து முடுக்க என்றால் எனக்கு
அவ்வளவும் லட்சம் பொன்னே 106

பிடித்த பிட்டுக்கு மண்சுமந்தே அடி
பட்டது சொக்க ரல்லோ 107

மனதுக் கேற்ற மாப்பிள்ளை தானே—குகனை
மணம் செய்துக்கோ வள்ளி மானே 108

தனதாகு மானால் வள்ளித் தாயே—கந்த
சாமி தருவார் வெகு நன்மையே 109

அசுரரைப் பொருதுமே வேலன்—அயி
லாண்டவள் உதவிய பாலன் சும்மா 110

வசியம் பனிரண்டுகை தோளன்—உந்தன்
மனதுக்கிசைந்த மணவாளன் 111

கழுகுமலையில் முருகேசன்—உந்தன்
கருணைக் கிணங்கும் உபகாரன்—அவரை 112

---

103. எட்டி உன்னுதல்--தாவி உயர்ந்து விரைந்தெழும்புதல் *வெட்டி மின்னாதே என்றும் பாடம்-கண்டித்துப் பேசாதே
104. கோரணி--குறும்புச் செய்கை
105. அடித்து முடுக்க--அடித்துத் துரத்த
109. தனது (ஆகுமானால்)--நட்புரிமை
110. அயிலாண்டவள்--அகிலாண்டேசுவரி--உலகநாயகி
111. வசியம்--பரந்த

### வேறு

தழுவிக் கொண்டால் வெகுசெம்மையே—கந்த
சாமி தருவார் வெகு நன்மையே 113

கலியுக வரத குமாரன்—ஆர்க்கும்
கருணைக் குகந்த உபகாரன் 114

சலியாமல் சேரச் சம்மதிப்பாயே—வள்ளித்
தாயேஉன் மனதில் பதிப்பாயே 115

ஆரோ எவரோ என்றெண்ணாதே—சும்மா
அணைந்துக்கோ வினைகள் வாராதே 116

வேறே பேதகம் நினையாதே—வெற்றி
வேலரைச் சேர்ந்துக்கோ மாதே] 117

கமலச் சரவணச் சண்முகனே—மேவிக்
கலந்துக்கோ நல்ல சேவகனே 118

அசுரர் பணி குழந்தைக் குகனே—நீ
அணைந்து கொண்டால் நல்ல முகனே 119

வேலுண்டு வினையில்லை தானே—வெற்றி
வேலரை சேர்ந்துக்கோ மானே 120

தனித்துநீ இருப்பது வருத்தம்—இந்தச்
சாமிக்கும் உனக்கும் நல்ல பொருத்தம் 121

வள்ளியே உன்னைநான் கண்டேன்—இப்பம்
மையலைத் தீர்த்துவி டாயோ 122

கண்கொண்டு என்னைநீ பாராய்—சற்று
காத்துப் பார்த்துநீ தாராய் 123

---

114. கலியுக வரத குமாரன்-கலியுகத்தில் அருள் செய்யும் கடவுள்
115. சலியாமல்—துக்கப் படாமல்
117. பேதகம்—வேறுபாடு
118. சரவணச் சண்முகன் — சரவணப் பொய்கையில் வளர்ந்ததால் வந்த பெயர்

## வேறு

வேள்வி மலைக் கரசே சிற்றூர் குடி
வேடுவர் கோமானே (தனென) 124

தாழ்விலா வாழ்க்கையுடன் எனைப்பெற்ற
தந்தையே அண்ணன் மாரே (தனென) 125

என் தாய் தேடினளே எனைத்தேடி
ஏங்கி இருப்பதுண்டோ 126

மறக்க மனம் கூடுதில்லை—வஞ்சி
மாதே உந்தன் மய்யல் கொண்டு 127

வாடுறேன் இப்போதே உறக்கமும்
வருகுதில்லை என்ன செய்குவேன் 128

வெயில்தனில் தனித்திருக்க விதிதானோ—உன்னை
விட்டிருக்கத் தாய்க்குச் சம்மதி தானோ 129

நம்பின பேர்க்கு வஞ்சகம் செய்யலாகுமோ—உன்னை
நாடி வந்து வாடி நொந்து நையலாகுமோ 130

வம்பு சேரும் கொங்கைநடு வுற்று நானும்—முத்து
மாலையாய்க் குலுங்க வரம் பெற்றிலேனே 131

துள்ளுமுன் விழியிலிட்ட மைய தாகவே
துலக்கமா யிருந்தேனில்லை மெய்ய தாகவே 132

வள்ளியுடன் முகத்தில் பூசு மஞ்சளாகவே
மாதுடன் இருந்தே னில்லை தஞ்ச மாகவே 133

கன்னல் மொழி மாது—வள்ளி
மின்னாள் அப்போது 134

---

124. வேள்வி மலைக் கரசு—வள்ளியின் தந்தைக்குரியமலை
125. தாழ்விலா வாழ்க்கை—குறையா வாழ்க்கை
129. சம்மதி—சம்மதம்
131. வம்பு—மார்புக் கச்சு
132. துலக்கம்—விளக்கம்
133. தஞ்சம்—அடைக்கலம்

அப்பனே குமராண்டி—உன்
தகப்பன் பேயாண்டி சொன்னால் 135

தண்ணீர் உண்ணநீர் எண்ணாமலே
நின்னீர் யெப்பவே உன்னை வேண்டித்
தொழ யிருப்பவே மனம் பூண்டீர் 136

அடியேன் வெண் ணீறணிந்தேன் உந்தன்
குடிநான் என்று துணிந்தேன் 137

மிடிதீர எனைப்பாரும்—இந்தப்
படியோர் புகழ் காரும் 138

வானோர் புகழ் வேலர்—நீர்
தானா வென்று துதிப்பேன் 139

இறைப் போதிலும் பிரியேன்—மாத்
திரைப் போதிலும் மறவேன் 140

துரையாகிய செந்தூரச் சந்த
வரை மேவிய குமரா 141

## பவனிச் சிறப்பு

பானை வயிற்றோன் கழலினை
பண்புடன் போற்றுவோமே—நற்கதலி
பழமொடு சர்க்கரை அவலொடு எள் பொரி
பலகனி பட்சண வகை
சடுதியில் அருந்தியே பாரத மேரு
வரைந்தோன் இளையவர் பாதம் பணிந்திடுவோம்
(தனென) 142

---

136. நின்னீர்—நின்றீர்

138. மிடி—வறுமை
காரும்—'காப்பாற்றும்' என்பதன் மரூஉ

140. இறைப்போது—சிறிது நேரம்
மாத்திரைப்போது—கைந்நொடி நேரம்

142. பானை வயிற்றோன்—பிள்ளையார்
கதலி—வாழை
சடுதியில்—விரைவில்

வாரணங் கொட்டு முகில் மாதரசி வர
வந்து நடனஞ் செய நட்டுவர்கள்
மங்கையர் கொங்கைகள் செங்கை குலுங்கிட
மத்தள வீணைகள் கைத் தாளம் நேர் செய்ய
மாதர்கள் ஆடிடவே சுப்பிரமண்யர்
வந்தார் பவனிதனில் (தனென) 143

காரணனாக வந்து அடியாரைக்
காப்பது நின்கடன் காண் பொதிகையில்
கரக முனிக்கொரு குருவெனப் பத்திரு
கரமயில் கொடுவினை அறுபட ஏவிய
கழுகு மலைக் குமரா குறவள்ளி
காதலனே குகனே (தனென) 144

அந்திமதி சூடும் பரமன்
அருளிய பாலகனே—கொடிய
அமர்தரு செருவினில் இயல்கொடு சமர்செய
அலகை நிணம்உண கழுகு குதிகொள
அசுரர்கள் மாய்ந்திடவே—தெய்வ லோகத்து
அமரர் சிறை மீட்டாய் (தனன) 145

விந்தை பேர்க் காவில் குறத்தியை
மேவிடவே நினைந்தாய் —குறவரில்
வில்லும் அம்பொடு செல்லும் பேர்துணை
வெல்லவே நினை வல்லவோ முன்
வேங்கை மர மாகி நின்றதொரு
வேலவ னேகுக னே(தனன) 146

---

144 காரணன்—கடவுள்—“உயிர்கட்கெல்லாம் காரணம் ஆய மேலோன்” (கந்தபுராணம்)
கரகமுனி—குடமுனி
பத்திரு கரம் அயில் கொடு—பன்னிரு கைகளில் வேலினைக் கொண்டு

145. அமர்தரு செரு—உக்கிரம் மிகுந்த போர் நிகழுமிடம்
இயல்—முறை
அலகை—பிசாசம்
குதிகொள—குதித்தல், பெருகுதல்

வரம் பெற்ற கும்ப கர்ணன் இந்திர சித்து
மற்றுள பேரை எல்லாம் அடக்கியே
வஞ்ச கரானவர் நெஞ்சில் அறைந்திட
வாளிய தேவிய மால் மருகா குகா
வாய்த்திடு நற் கழுகு மலைதனில்
வாழும் குருபரனே(தனன) 147

திரமுற்ற பன்னிருகை அயில்கோடு
சிந்தினை வேரறுப்பாய்—கயிலைச்
சிவமய ருத்திரன் அருளிய புத்திரனைத்*
தினமும் நினைத்திட வினைகள் அறுத்திடும்
சேவற் கொடியனே உனை நிதம்
சேவடி போற்றுவமே 148

ஆனையை முன்னாளில் சலந்தனில் ஆம்
கரா பற்றிட மூலமென்று
அழைக்கும் அக் கரி பிழைக்க நேமி தொட்டங்(கு)
கராவை முன் சங் கரித்திடும்
அரி மருகா குகனே நின்னடி
அன்புடன் போற்றுவமே (தனன) 149

---

147. வாளி—அம்பு
மால்—திருமால்
சிந்து—கடல்
(வேல் கொண்டு வேலைப் பண்டேறிவோனே
—திருப்புகழ்)
சிவமய ருத்திரன்—மகா சங்கார காரணன்
(அழித்தற் கடவுள்)

*பாடம்—புத்திரனே

149. கரா—முதலை
நேமி—சக்கரம்

செந்தினில் வளர்ந்த குமரன் அடியவர்
சிந்தையில் நிறைந்த முருகன்—கனக்குழல்
தெய்வத் திருமடந்தை கணவனைச்
சேவடி போற்றுவமே—தனன
சுந்தர மிலங்கு மயிலன் நலம் பெறுஞ்
சுந்தரி தருங் குருபரன் கதிர்சொரி
துய்யவடி வேலன் பாதமலர்
சூழ்ந்து வணங்குவமே (தனன) 150

செஞ்சர ணிறைஞ்சும் அடியார்க் கருள்தரும்
கஞ்ச மலர் மிஞ்சு சரணம்—தினைப்புனம்
சென்று குறமாதைப் புணர்ந்தருள்
தேசிகனைப் பணிவோம் (தனன) 151

தேசிகன்—குருபரன்
அஞ்சின் இறை அஞ்சிலேன்—மெய்க்
கதிபுரை அம்பிகை
அலர்ந்த கருணைத் துரைத்திரு
ஆறுமுகக் குமரன் பதத்தை
அனுதினமும் வாழ்த்துவமே (தனன) 152

தோடவிழ் கடப்ப மலரும் பிரசம் கமழ்
ஏடவிழ் நறைத் தொடையலும் புனைந்தருள்
சோதிவடி வேலன் பதத்தைத்
துதித்து நாம் வாழ்த்துவமே (தனன) 153

---

150. சுந்தரம் இலங்கு மயிலன்—அழகியமயிலூர்தி உடையவன்
நலம் பெறுஞ் சுந்தரி—உமை
துய்ய—தூய—பரிசுத்த
151. செஞ்சரண்—சேவடி
கஞ்சமலர் மிஞ்சு சரணம்—தாமரையினை வெல்லும் சேவடி
152. அஞ்சின் இறை அஞ்சிலேன்—அஞ்சு புலன்களின் அலைக்கழிவுக்கு அஞ்சாத என்னுடைய மெய்க்கதி என்று கொள்ளலாம்
153. தோடு, ஏடு—இதழ்
பிரசம்—தேன்

காடுறுமாச் சிறுமியைத் தினந்தினம் நாடி
மயலுற்ற தன்னை முன்னின்று
காத்த தனிக்குமரன் பதத்தைக்
கனிந்து வணங்குவமே (தனன) 154

வண்டுகுடி கொண்ட குழலின்—வணங்குவார்
பண்டை வினை துண்டு செயுமின்—பத்திரு
வள்ளிக் கிசைந்த குகன் பதத்தை
வணங்கிக் கொண்டாடுவமே—(தனன) 155

சண்டனுடலங் கிழிபடத் திருக்கழல்
தந்த விமலன் தருகுகன் தனைத் தினம்
சாமி எனப் பணிவார் அருவினை
தானறும் நிச்சயமே (தனென) 156

திண்டிறல் மிகுங் குருபரன் திரள் செயும்
வண்டுகள் முழங்குமாலை சூழ
திருச் செந்தில் மால்வரை மேல் சிறந்த
வேலவனை வாழ்த்துவமே (தனென) 157

பண்டுகட லுண்ட முனிவன்—கழலினை
தெண்டனிட வண்டமிழ் உரைதனைப் புகலும்
பன்னிரு கைக் குமரன் பதத்தைப்
பணிந்து கொண்டாடுவமே (தனென) 158

## பள்ளு

கொண்டல் இளசைக் குமரன் எட்டேந்திரன்
மண்டலீகன் பண்ணை தனிலே—இன்று 159

---

154. காடுறுமாச் சிறுமி—தினைப் புனத்திலிருந்த வள்ளி
155. பண்டை வினை—முன்வினை
156. சண்டன்—காலன் (எமன்)
157. திண்டிறல்—மிகுவலி
திரள் செயும் வண்டுகள்—மிகுந்து முழங்கும் வண்டுகள்
159. கொண்டல் இளசை—மேகம் தவழும் இளசை
(மழைவளம் பொருந்திய இளசை)
மண்டலீகன்—மண்டலாதிபதி

கண்டிடும் நெல்லுக்கும் புல்லுக்கும் உள்ள
கணக்கு நான் சொல்கிறேன் ஆண்டே 160

மாலோன் வணங்கும் எட்டீசுபரன் கோவில்
வகைக்கேநற் சிரகச் சம்பா நெல்லில் 161

நாலாயிரம் கோட்டை ஓர் தொகையாய்
நம்மள் நாதர் பட்டர் வசம் அளந்தேன் 162

மெய்யான காரணராம் வெங்கிடாசல
விட்டுணு கோவிலுக்குந் தன் சம்பா நெல்லில் 163

அய்யாயிரம் கோட்டை நம்பி திருமலை
அய்யங்காரர் தன்வசம் அளந்தேன் 164

சாத்தூர்ப் பெருமாள் படித்தரம் பூசை
தவறாமல் என்றும் நடக்க உங்கள் 165

வார்த்தைப் படிக்கு ஆயிரம் கோட்டை கஸ்தூரி
வாரணனம் பாரத்தில் அளந்தேன் 166

விண்ணோர் புகழும் கழுகா சலக்குக
வேளுக்குப் பூந்தாளைச் சம்பா நெல்லில் 167

அண்ணர் பட்டர் வசம் எண்ணாயிரம் கோட்டை
அட்டி பண்ணாமல் அளந்தேன் 168

கந்தன் குமர ரெட்ட பாண்டிய தெய்வேந்திரன்
கண்ணன் திருநாமம் துதிக்கும் நாகூர் 169

முத்துப் புலவர் வளவுக்குத் தானுண்ண
முன்னூறு கோட்டை நெல்ல ளந்தேன் 170

---

160. ஆண்டே—பண்ணை முதலாளியைப் பணியாள் அழைக்கும் முறை
162. நம்மள்—நம் (நம்ம—நம்மள்—பேச்சுவழக்கு)
165. படித்தரம் — கோவில் முதலியவற்றுக்குச் செய்யும் கட்டளை
166. கஸ்தூரி வாரணன்—பெயர்
அம்பாரம்—குவியல்
167. பூந்தாளைச் சம்பா—நெல்வகை
168. அட்டி பண்ணாமல்—தடை சொல்லாமல்
170. வளவு—இருப்பிடம்

திட்டமதாய்க் குளம் வெட்டுக் கென்றே—சேரில்
கட்டுநெல் லாயிரம் கோட்டை (குளத்)தைக் 171

கெட்டியதாய் நோட்டம் பார்க்கின்ற ராக்கப்பன்
செட்டியார் தன்வச மளந்தேன் 172

சட்டமதாகப் படிக்கும் கனக
சபாபதியா பிள்ளை கணக்கின் படி 173

கொட்டிய முத்துப் பேயன்பால் எண்ணாயிரம்
கோட்டை நெல் பாட்டத்தில் அளந்தேன் 174

உவணகிரி சுத்தித்தேர் ஓட்டி வைப்பதற்கு
ஒன்பதினாயிரம் கோட்டை நெல் 175

எவரும் புகழும் குமாரவேல் மணியத்துக்கு
ஏற்கவே தீர்க்கமாய் அளந்தேன் 176

சம்பாதி வெற்புக் குமர குருபரர்
சன்னிதிச் சத்திரம் நடக்க வென்றே 177

கொம்பு பெறவே தொண்ணூற் றொரு
கோட்டை நெல் சுப்பன் பகுதியில் அளந்தேன் 178

இந்தவகை அன்பத்திராயிரத் தெழுநூற்று
ஒரு கோர்ட்டைநெல் நீக்கிச் சேரில் 179

வந்தநெல் தொண்ணூத்தி ரெண்டுலட்சம் கோட்டை
சொந்த இருப்புக் காணாண்டே 180

தீர்த்த விசேடம் பெறும் தனுக்கோடி
சிவராம லிங்கருக் கென்றேகண் பார்த்தும் 181

---

171. சேர்—நெற்கூடு; வைக்கோல்புரி சுற்றி அமைப்பது
173. சட்டமதாக—செவ்வையாக
174. பாட்டம்—பகுதி
முத்துப்பேயன்—முத்தப்பய்யன்
175. உவணகிரி—கழுகுமலை (உவணம்—கழுகு)
176. தீர்க்கமாய்—திட்டமாய்
177. சம்பாதி வெற்பு—கழுகு மலை
178. கொம்புபெற—மேன்மை பெற
பகுதி— வருவாய்
179. அன்பத்திராயிரம்—ஐம்பத்திராயிரம்

ஓராயிரம் கோட்டைநெல் நேர்த்தியாய்ப்
பள்ளையச் சம்பா நெல்லளந்தேன் 182

காசினி போற்றிடு மாற்றினிக் கிரிக்கோவில்
கட்டளைக் கெண்ணூறு கோட்டை விசு 183

வாசமதாய் நமசிவாயம் பண்டாரம்
வசத்தில் மிளகுநெல் அளந்தேன் 184

கூடல்வளர் சொக்கேசர் மீனாட்சிக் கெண்ணூறு
கோட்டைநெல் குங்குமச் சம்பாயிந்த 185

நாடறியும்படி கட்டளை மீனாட்சி
நாதர்பட்டம் வசமளந்தேன் 186

தாழ்வு வராமலே கேசய்யஞ் காற்குப்பூந்
தாளைச் சம்பா நெல்லளந்தேன் 187

காந்திமதி வடிவாள் நெல்லை நாயகர்
கட்டளைக் கெண்ணூறு கோட்டை 188

வராந்தக மாகப்புளுகு சம்பா நெல்லை
வாரிக் கையாரவே அளந்தேன் 189

புன்னைவனச் சங்கரேசுபரர் கோவிலுள்
பூசை தவறாமல் நடக்கத்தானே 190
அன்னதானச் சம்பா ஓர்தொகையாக
அளந்தேன் அறுநூறு கோட்டை 191

ஆதிவெயில் உகந்தாள் முப்பிடாரி
அலங்காரிக் கஞ்ஞூறு கோட்டை மனு 192

நீதியதாகவே பண்டாரம் கையினில்
நேர்முத்துச் சம்பா நெல்லளந்தேன் 193

மங்காத சீர்த்தி பெறும் எட்டயபுரம் தனில்
தங்காளி நாயகிக் கென்றே—கன 194

---

182. பள்ளையச் சம்பா—நெல்வகை
183. கட்டளை—கோவில்களுக்குச் செய்யும் நிபந்தனை
184. வராந்தகம்—வராத்தம்—கட்டளை
192. அஞ்ஞூறு—ஐந்நூறு
193. பண்டாரம் — சிவனடியார்; இச்சொல் பண்டாரகன் என்பதன் திரிபு

பொங்கமாய் முன்னூறு கோட்டைநெல்
பூசாரி அங்கணன் பாரிசம் அளந்தேன் 195

செப்பமுறும் தவசித் தம்பிரானுக்குச்
சித்திரக் காலி நெல்லதிலே சைவ 196

சுப்பன் பண்டாரன் வசமளந்தேன் ஓர்
தொகையாய் அறுநூறு கோட்டை 197

தாரணி போற்றும் இளசை அன்னதானச்
சத்திரத்துக்கே ராசவெள்ளை நெல்லில் 198

ஆருமகிழச் சிதம்பரத் தய்யன் வசத்
தாயிரங் கோட்டைநெல் அளந்தேன் 199

குலதெய்வமென்னுஞ் சகதேவிக் கானைக்
கொம்பன் சம்பா நெல்லதிலே நான் 200

நிலவரமாக முன்னூத் தஞ்சு கோட்டைநெல்
*நேத்தந்தி நேரத்தில் அளந்தேன் 201

காசி கேதாரத்தினில் வாசமிகு விசுவேசர்
படித்தரம் நடக்கப்படி 202

பூசை தவறாமல் ஆயிரம் கோட்டைநெல்
போசன சம்பா நெல் அளந்தேன் 203

மங்கையெனும் கோவில்பட்டி தனிலே
வாழ்பூவண நாதருக் கென்றே வெகு 204

இங்கிதமாகவே முன்னூறு கோட்டை
நெல்லிற்குச் சம்பா நெல்லளந்தேன் 205

சந்தவரை திருச்செந்தூரில் மேவிய
சண்முகனார் கட்டளைக்கே நல்ல 206

---

195. கனபொங்கம்—பெருமையும் பொலிவும்
பாரிசம்—வசம்—இடம்
200. சகதேவி—குலதெய்வத்தின் பெயர்
ஆனைக் கொம்பன்—நெல் வகை
201. நிலவரம்—இங்கு வழக்கப்படி என்று கொள்ளலாம்
*நேற்று அந்தி எனப் பிரியும்.
202. படித்தரம்—கோயில் முதலியவற்றுக்கு உதவும் தினசரிக்
203. கட்டளை
205. போசன சம்பா—நெல்வகை

வெந்தயச் சம்பா எழுநூறு கோட்டைநெல்
வேலன் பகுதியில் அளந்தேன் 207
சாத்திர தோத்திர வேத பாராயணத்
தாத் தய்யங்கார் வகைக்கென்றே 208
ஆத்தி கிணத்தினில் அஞ்ஞூறு கோட்டைநெல்
காத்தன் பகுதியில் அளந்தேன் 209
ஆதிக்கற்குப் பராபரி யாகிய
ஆன கண்ணப் பருந் தனக்கு 210
மாதிஷ்டமாகவே எண்ணூற் றஞ்சு கோட்டைநெல்
மாசற்ற சம்பாவில் அளந்தேன் 211
நற்றமிழ் ஓங்கும் கடிகைப் புலவர்
நமச்சிவாயப் புலவருக்கே துரை 212
சொல் தவறாமல் முன்னூற்றஞ்சு கோட்டைநெல்
தூய வெள்ளை தனில் அளந்தேன் 213
வீணைதனில் சுர ஞான மிசைத் திடும்
வெள்ளை அண்ணாவி குமாரர் தனக்கும் என்று 214
வான்புகழ் தொண்ணூற் றஞ்சு கோட்டை நெல்
வாழைப் பூச் சம்பாவில் அளந்தேன் 215
சம்பிரதிப் பிள்ளை வயித்திய லிங்கர்
தயாலெழுதுங் கைக் கணக்கின் படி 216
அம்பாரஞ் சேரில் களஞ்சியந் தோறும்
அனேக நெல் கட்டினேன் ஆண்டே 217
இத்தனை நெல்லும் உள்ளூர் மணியம்
வெங்கடேச ரெட்டு முன்னிலைக் கேயின்று 218

---

207. வெந்தயச் சம்பா—நெல்வகை
212. இங்கிதமாக—இனிமையுடன்
பகுதி—வருவாய்
துரை—தலைவர்
214. சுரஞானம் — இசையறிவு
அண்ணாவி — கூத்து முதலியன பழக்குபவர்
215. வாழைப்பூச் சம்பா — நெல்வகை
216. சம்பிரதி — தலைமைக் கணக்கன்
217. அம்பாரம் — சேர், களஞ்சியம்; நெல் சேர்த்து வைக்கும் இடம்
218. மணியம் — விசாரணைக் காரரர்

கந்த னனுத்தாரப் படிக் களந்துமே
கட்டி வைத்தேன் பண்ணை ஆண்டே 219

## நந்தவனச்சிந்து

சந்தமிகும் புஷ்பவனமே—முத்து
சாமி செய்த நந்தவனமே—என்று 220

சார்ந்தார் களிகூர்ந்தார்—மனந்
தேர்ந்தார் கலி தீர்ந்தார் 221

கொந்து கொந்தாய் மலர்தூவும்—மயல்
கொண்டிடவே குயில் கூவும் 222

பின்னும் கூடும் பெடையோடும்
உறவாடும் விளையாடும் 223

பஞ்சவர்ணக் கிள்ளைச் செறிவும்—வெகு
பாந்தக் கலவிகள் புரியும்—கனி 224

பழுக்கும் கொத்தி இழுக்கும்—பிரசம்
ஒழுக்கும் நிலம் வழுக்கும் 225

அஞ்சிறைத் தும்பிகள் ஓங்கும்—குயில்
அன்புடன் வயினால் வாங்கும் மலர் 226

அடுக்கும் கீதம் தொடுக்கும்—மார்க்க
மெடுக்கும் இன்பம் கொடுக்கும் 227

இச்சையுடன் இரண்டு மந்தி மாவில்
ஏறிப் பலாக்கனி அருந்திக்—கனிக் 228

கெதிரும் சோலை உதிரும்—சுளை
உதிரும் கனி உதிரும் 229

---

221. கலி — சிறுமை, வருத்தம்
222. கொந்து — கொத்து
225. பிரசம் — தேன்
226. அஞ்சிறைத் தும்பி — 'கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி' - குறு - ஒப்பு
227. கீதம் — இசை
மார்க்கம் — கூத்து வகை
228. கனிக்கெதிரும் — கனிக்காக எதிர்த்துக் கொள்ளும்

உச்சிதச் செண்பகத் தோப்பும்—பெண்கள்
ஊடே மலர் கொய்யும் தாப்பும்—தென்றல் 230

ஓட்டமும் மலர் ஆட்டமும் குயில்
ஈட்டமும் கன தேட்டமும் 231

கற்பகக் காவனம் போலே—மயக்கங்
காணுதடி ஒருக்காலே—சுத்திக் 232

கன்னலும் வளந் துன்னலும் கன
சென்னெலும் சடைப் பின்னலும் 233

பொற்ப மிகுங்கன வாளையும்—தன்பூட்
டுட வாளெனும் தாளையும்—சாலைப் 234

பொங்கமும் திருவங்கமும் மகன்
சங்கமும் பிரசங்கமும் 235

குங்குமச் சந்தன மரமும்—புன்னை
கொண்டு வளர்ந்திடு முரமும்—மலர்க் 236

கொல்லையும் மணமுல்லையும்—பசுங்
குல்லையும் திருவில்லையும் 237

---

230. உச்சித — உயர்ந்த
தாப்பு — நேரம், சௌகரியம், இடம்
231. ஈட்டம் — கூட்டம்
தேட்டம் — செல்வம்
232. கற்பகக்கா — கற்பகச் சோலை
காவனம்—சோலை—ஒருபொருட் பன்மொழி
ஒருக்கால் — ஒருமுறை
233. கன்னல் — கரும்பு
வளந்துன்னல் — வளம் சேர்தல்
சென்னெல் — நெந்நெல். எதுகைக்காகத் திரிந்தது.
235. பொங்கம் — பொலிவு
அங்கம் — அலங்காரம்
சங்கம் — கூட்டம்
பிரசங்கம் — சொற்பொழிவு
237. குல்லை — இருவாட்சி
வில்லை — வில்வம்

புங்கமிகு நந்தவனமும்—தெய்வ
பூமியிற் கற்பக வனமும்—கண்டு 238

புகழ் ராதை இகழ்வார் மனம்
மகிழ்வார் கிட்ட யகழ்வார் 239

மாமரம் தோறும் உலாவி—குயில்
மாரனை வாவென்று கூவி—அதில் 240

வசிக்கும் குடல்பசிக்கும்—மெத்த
ருசிக்கும் கனி பொசிக்கும் 241

தென்னங் குரும்பையைத் தின்று
தெற்கே நிழலிலே உறங்கும் மனம் 242

செழிக்கும் உடல் நெளிக்கும் முகம்
களிக்கும் மதங் கொழிக்கும் 243

பன்னகந் தென்றலைப் புசிக்கும்—கன
பண்புயரு மலையினில் வசிக்கும்—பல 244

வளமும் பரிமளமும் கடல்
வளமும் மலை வளமும் 245

தங்கும் வளம் கண்டு மகிழ்ந்தார்—முத்து
சாமி தெய்வேந்திரனைப் புகழ்ந்தா—ருப 246

சரித்தார் மெள்ளச் சிரித்தார்—மலர்
பறித்தார் குழல் தரித்தார் 247

### காவடிச்சிந்து

தாயே சரசோதி—அருள்
தரவேணுநீ தாயே 248

வாயீசுபரி அரசே—தமிழ்
வாணற் கருள் புரிவாய் 249

---

238. புங்கம் — உயர்ச்சி
240. மாரன் — மன்மதன்
244. பன்னகம் — பாம்பு
245 பரிமளம் — நறுமணம்
246. முத்துசாமி தெய்வேந்திரன்—பாட்டுடைத் தலைவன்
248. சரசோதி—சரசுவதி என்பதன் இசை வழக்குத் திரிபு
249. வாயீசுபரி — வா ஈஸ்வரி என வரும்

காவடிச் சிந்துபாடி—உந்தன்
கருணை மலர் தேடி 250

சேவடி தனைப் போற்ற—அருள்
புரிவாய் மனம் மகிழ்வாய் 251

ஆண்டி குமராண்டி—எழில்
அழகு மயிலாண்டி 252

மூண்டி ரண சூரர்களைத்
தாண்டி மயி லேறி 253

மூவ்விரண் டாறுமுகம்
எவ்வாறென் றறிந்து 254

செவ்வே வழி நடந்தால் சிவன்
அவ்வாறே துணை செய்வார் 255

மாலிதனை வெல்வேன்—சரவண
வாவென்று சொல்வேன் 256

பரனே அறுமுகனே உனதிரு
நீறிட வினை தீர 257

ஞானக் கடல் மூழ்கி—வெகு
மானத்துடன் வாழ்க 258

பாடுவமோ இவ்வனத்தை—வேலர்
பண்புனத்தை நாடுவமோ 259

தேடுவமே இவ்வனத்தில்—வேலர்
சிறந்திருக்கும் இடந்தேடி 260

ஓடுவமோ கிரியைச் சுற்றி
ஒளிந்திருந்தால் பிடிக்க லாமோ 261

---

253. மூண்டு—கூடி
இரணசூரர்—யுத்தவீரர்
254. மூவிரண்டு—மூவ்விரண்டு எனக் குறுகியது
255. செவ்வே—நேரே நன்றாக
256. மால்—மயக்கம்
257. உன—உன்னுடைய
258. வெகுமானம்—பரிசு, சன்மானம்
259. பண்புனம்—பண்படுத்தப்பட்ட புனம்

ஆடுமன்ன மயிலினங்காள்—செந்தூர்
ஆண்டி வேலர் வரக் காணையளோ 262

சின்ன அன்ன மயிலினங்காள்
செந்தூர் சேவகனைக் காணையளோ 263

அன்னநடைப் பட்சிகளே—எங்கள்
ஆண்டி வரக் காணையளோ 264

மாடப்புறாக் கிளிப் பிள்ளை—வடி
வேலர் வரக் காணையளோ 265

வாடை கண்டு மயங்கி வரும்—வடி
வேலர் வரக் காணையளோ 266

சூரனையும் சூறையாடி வந்த
சொகுசன் வரக் காணையளோ 267

ஏறுமயில் ஏறிவரும் –எங்கள்
இறையவனைக் காணையளோ 268

கரடி பன்றி யாளிகளே—செந்தூரக்
கந்தன் வரக் காணையளோ 269

ஓரடியா லளந்தவர் தன் மருகன்
உத்தமனைக் காணையளோ 270

காடைகளே—கவுதாரிகளே—செந்தூரக்
கந்தன் வரக் காணையளோ 271

தேடி வரும் புள்ளினமே—செந்தூரச்
சேவுகனைக் காணையளோ 272

பஞ்சவர்ணக் கிள்ளைகளே—சிவன்
பாலன்வரக் காணையளோ 273

கொக்கினங்காள் குருகினங்காள்—செந்தூரக்
குமரன் வரக் காணையளோ 274

---

262. காணையளோ—கண்டீர்களோ அல்லது காணீர்களோ என்பதன் வட்டார வழக்கு
266. வாடை—வடகாற்று
267. சூறையாடுதல்—அலைக்கழித்த (வென்ற)
சொகுசன்—சுகானுபவமுள்ளவன்—நாகரிகன்
271. காடை, கவுதாரி—பறவையினங்கள்

சோலையில் வாழ் குயிலினங்காள்—செந்தூரச்
சொகுசன் வரக் காணையளோ 275

காலைமதி சூடிதரும்—கந்த
சுவாமி வரக் காணையளோ 276

பாய்ந்து வரும் புலிகரடி—சிவன்
பாலன் வரக் காணையளோ 277

மேய்ந்து வரும் தாராவே—எங்கள்
வேலர் வரக் காணையளோ 278

கூவுகுயில் மயிலினங்காள் எங்கள்
குமரன் வரக் காணையளோ 279

---

278. தாரா—ஒருவகைப் பறவை

## 4. சித்தராரூட நொண்டிச் சிந்து

இச்சிந்து திருவனந்தபுரம் அருங்காட்சி யகத்திலிருந்து முழுமையாகக் கிடைக்கப்பெற்ற ஏடுகளிலிருந்து பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இச்சிந்தின் மற்றொரு ஏட்டுப் பிரதி பாண்டிச் சேரி பிரஞ்சு ஆய்வகத்தில் இருக்கிறது ஆனால் அது முழுமையாக இல்லை. 14 ஏடுகளே உள்ளன. இவ்விரண்டு ஏட்டுப் பிரதிகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது பாட வேறுபாடுகள் பல காணப்பெறுகின்றன. குறிப்பிட்டுச் சொன்னால் பாண்டிச்சேரி ஏட்டுப் பிரதியில் காணப்பெறும் ஒரு காப்புச் செய்யுள் திருவனந்தபுரம் ஏட்டுப் பிரதியில் காணப்பெறவில்லை. அக் காப்புச் செய்யுள்:

தண்டமிழ் வழங்கும் வெற்றிச் சங்கரன் தன்னை வாழ்த்தி
கண்டபேர் விஷத்தை பீழக் கணபதி கடவுள் போற்றி
மண்டலம் வலமீரேழும் வலம்செயும் வலிய வீரன்
உண்டையும் மருந்தும் பாட உறுதிஎன் பாதந்தானே

மேலும் பாண்டிச்சேரி ஏட்டுப்பிரதி 13ஆம் ஏட்டில் காணப் பெறும் செய்திகள் முழுமையும் திருவனந்தபுரம் பிரதியில்காணப் பெற்றில. திருவனந்தபுரம் பிரதியில் இடையில் சில இடங்களில் வரிகள் முற்றுப் பெறாமல் உள்ளன.

### வழி நூல்

இச்சிந்து கருத்தால் வழிநூலாக விளங்குகிறது. இதன் முதன் நூல் சித்தர் ஆரூடம் என்பதாகும். அந்நூலில் கூறப்பெற்ற கருத்துக்களை இச்சிந்து ஆசிரியர் தெளிவுபடுத்தி—சுருக்கமாகச் சொல்லுவதற்காக இச்சிந்து நூலை எழுதியுள்ளார் எனத் தெரிகிறது.

"சித்தராரூடம் தன்னில் செப்பிய பொருளா ராய்ந்து
சுத்தமா யெவர்க்கும் தோன்றச் சுருக்கமாய்
நொண்டிச்சிந்தாய்"

என்று ஆசிரியர் நூலின் தொடக்கத்தில் கூறியிருப்பது அதனை வலியுறுத்தும். மேலும் ஆங்காங்கே தன் நூல் வழிநூல் என்பதை நன்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

"அடக்கம் எழுப்பு மென்றும் சொல்லி
போதித்தார் ஆரூடம் சோதித்தவர்"

என்ற வரி அதற்கு ஒருசான்றுஆகும். இந்நூலில் பாம்புக்கடியைக் கொண்டு பெறப்படுகின்ற ஆரூடம் இடம் பெற்றிருப்பதாலும் அதனைக் கூறியவர் ஒரு சித்தர் என்பதாலும் சித்தர் ஆரூட நொண்டிச் சிந்து என இந்நூல் பெயர் பெற்றிருக்கிறது.

**நூலின் அமைப்பு**

இந்நூல் மொத்தம் 355 வரிகளைப் பெற்றிருக்கிறது. காப்புச் செய்யுளும், நூலின் இடையில் இடம் பெற்ற அடக்கம் பற்றிய செய்யுளும், கருடனைப் பற்றிய செய்யுளும், மருந்துப் படலச் செய்யுளும் ஆகிய நான்கு செய்யுட்கள் விருத்தப்பாவில் அமைய மற்றவை அனைத்தும் சிந்து ஓசையிலேயே அமைந்துள்ளன. காப்புச் செய்யுள் விநாயகர் வணக்கமாக அமைந்துள்ளது. ஆனால் நூலாசிரியரின் வழிபடு கடவுள் திருமருதூர் இறைவனாம் நாகலிங்கராக இருத்தல் வேண்டும். காரணம் நூலின் தொடக்கத்திலும், மருந்துப் படலத்திலும் (295—310) அவ் விறைவனின் பெருமைகளை ஆசிரியர் பலபடப் பேசியுள்ளார். இத்தகு மருதூர் தென்பாண்டி நாட்டைச் சேர்ந்த ஊராக இருக்கலாம். திருமருதூர் புராணம், திருமருதூர் திருவந்தாதி என்ற இரு நூல்கள் திருமருதூர் பற்றிக் கூறுவனவாகும். அந்நூல்கள் கூறும் இத் திருத்தலம் தென்பாண்டியில் இருக்கும் திருத்தலமாகும்.

நூலில் காணப்பெறும் வரிகள் நொண்டிச் சிந்துக்கு - முதல் வரிக்கு அடுத்த வரி அசையாலோ - சீராலோ குறைந்தே காணப் படுகிறது. நூலில் கூறப்பெறும் செய்திகளை ஆசிரியர் முதலில் எடுத்துக் கூறியுள்ளார்.

"உரகத்தின் பேர்நிறமும் சாதியும்
ஊரும் மணமும் உறைவிடமும்
படமெடுத்தாடும் குறியும் முட்டை யிட்டுப்
பருவமறிந்து பொரித்தூரும் பரிசும்
விடமுறு தங்கக் குறியும் கடித்திடும்
விடமும் கடித்தகடி மீளாததும்
கால்கடி அடக்ககுறி வேகக்குறி
தூதரின் கண் குறிப்பும்
சிலமுள்ள மணி மந்திரத்தால் கருடதியானத்தால்
மருந்தினால் தீர்க்குஞ் செயலும்
குருமலரடி வணங்கி வகையாய்க்
கூறுகி றேனிந்த குவலயத்தில்"

இத்தகு செய்திகளை ஆசிரியர் கூறும்போது தனித்தனிப் பகுதிகளாகவே பிரித்துக் கூறுகிறார். ஒவ்வொரு பகுதியிலும்

இன்னது கூறியுள்ளேன். இனி இன்னது கூறப்போகிறேன் என்று கூறும் பாங்கு நூலில் காணப்பெறுகிறது. அவ்வாறு அமைந்துள்ள பகுதிகளைப் பார்க்கும்போது நூல் முதலில் படல அமைப்புகளைப் பெற்று விளங்கியிருக்கவேண்டும் என எண்ண வேண்டியுள்ளது.

**நூலாசிரியர்**

இத்தகு அரிய செய்திகளைச் சிந்தாகத் தந்த நூலாசிரியர் யார் என்பது தெரியவில்லை. சிந்து நூல்களில் ஆசிரியர்கள் பெரும்பாலும் தங்களின் பெயரை நூலின் தொடக்கத்திலோ - இறுதியிலோ கூறி விடுவார்கள். ஆனால் இந்நூலாசிரியர் தன்னைப் பற்றிய குறிப்பை எங்கும் பெய்து வைத்தாரில்லை. ஒருக்கால் இந்நூல் கருத்துக்கள் தன் சொந்தப் படைப்பு இல்லாத காரணத்தால் - தன் பெயரை இடம்பெற வைக்கவில்லை போலும். ஆனால் நூலாசிரியர் பாம்புகளைப் பற்றிய செய்திகளை அறிந்தவராதல் வேண்டும். ஏனெனில் பிறர் கருத்தைச் சொல்லும்போது அதில் ஓரளவேனும் பயிற்சி இருந்தால்தான் செம்மையாகக் கூறமுடியும். நூலாசிரியர் பாம்பின் வகை, மருந்துகள் இவை பற்றிக் கூறும்போது மிகத்தெளிவாகவே கூறியுள்ளமையிலிருந்து அது பெறப்படுகிறது. மேலும் ஆசிரியர் மிகுந்த சைவப் பற்றுள்ளவராகத் தெரிகிறது நூலின் தொடக்கத்தில் வணக்கம் கூறுவதோடல்லாது நூலின் இறுதிப் பகுதியில் ஏறக்குறைய 15 வரிகளில் சிவனின் பெருமைகளைப் புகழ்ந்து பேசியுள்ளார். எனவே அவரின் சைவப் பற்றை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. ஆசிரியரைப் பற்றிய வேறு செய்திகளை நூலிலிருந்து தெரிந்து கொள்ள முடிந்தில.

**நூலின் செய்திகள்**

ஆசிரியர் நூலின் தொடக்கத்தில் தொகுத்துக் கூறியிருப்பது போல் பாம்பு பற்றிய செய்திகளே நூல் முழுமையிலும் இடம் பெற்றுள்ளன என்றாலும் இடையிடையே மற்ற வித உயிர்களாகிய தேள், பூரான், சிலந்தி, நட்டுவாய்க்காலி போன்ற விஷ உயிரினங்களைப் பற்றியும் கூறப்பெற்றுள்ளது. நூலில் பாம்புப் பற்களைப் பற்றிய செய்திகள், பாம்பின் விஷமேறும் நிலை, அவற்றின் வேகம், கருடனின் வரலாறு ஆகியவை சிந்தனைக்கு விருந்தாக அமைந்துள்ளன. மேலும் இச்சிந்து நூலைப் பலகால் பயின்று - பொருளமைப்பை நன்கு புரிந்து கொண்டால் பாம்பு பற்றிய செய்திகளை முழுமையும் தெரிந்தவராகலாம். நூலில் பாம்புக்கும் நால்வகைச் சாதிகள் வகுக்கப் பெற்றுள்ளமை நமக்கு வியப்பளிக்கிறது. மேலும் நால் வகைச் சாதிக்கும் நிறம், இடம் போன்றவை வகுத்திருப்பதும் குறிப்பிடத் தக்கது. அச்செய்திகளைக் கீழ்க்கண்டவாறு பட்டியலாக அமைக்கலாம்.

| பாம்பின்சாதி: | அந்தணர் | அரசர் | வணிகர் | சூத்திரர் |
|---|---|---|---|---|
| பெயர் | அனந்தன், குளிகன் | வாசுகி, சங்குபாலன் | தக்கன், மகாபற்பன் | கார்க்கோடன் கனகபற்பன் |
| இடம் | கோவில் | மரம் | மனை | புற்று |
| உணவு | காற்று, பூமணம் | கிழங்கு | வண்டு, பூச்சி | மீன், தவளை |
| ஆடும்நிலை | அண்ணாந்த நிலை | நேர்பார்த்த நிலை | தெற்கும் வடக்கும் பார்த்த நிலை | பூமிபார்த்த நிலை |
| படம் | சங்குக்குறி | சக்கரக்குறி | வில் உருவம் | புள்ளடி |
| மணம் | புனுகு மணம் | தாழை மணம் | பாதிரிமலர் மணம் | இலுப்பைப் பூமணம் |

இவ்வாறு நால்வகைச் சாதியினை வகைப்படுத்தி அவற்றிற்குரிய இயல்புகளைச் சிந்தில் பாடியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

நால்வகைச் சாதிகளின் பிறப்புக்களை ஆசிரியர் கூறும்போது பழைய புராண வரலாற்றோடு தொடர்பு படுத்திக் கூறியுள்ளார். பிரமனின் மகன் காசிபன் முனிவர். அவரின் மனைவி கத்துரு வயிற்றில் உதித்தவைகளே மேற்கூறப்பெற்ற எட்டுப் பாம்புகளும் என்பது ஆசிரியர் கூறும்வரலாறு.

மருமலர்ப் பொருட்டுறைவோன் பயின்றருள்
மகவென வந்துதித்த மாதவதிதினோள்
காசிபன் மனைவியரில் மிக்காள் கத்துரு
வயிற்றுதித்த கட் செவிகளைப்
பேசிடில் பேர்அனந்தன் வாசுகி பிலத்துறை
தக்கன் கார்க்கோடன் பற்பன்
கோபற்பன் சங்குபாலன் குளிகன் இம்
மாநகர் எட்டுப்பேர் தான்ஆதியில் (16—20)

காசிபன் தன் மனைவியோடு சிங்கமாக—யானையாக—ஆடாக கூடினான் என்று கந்தபுராணம் கூறுவது போல-பாம்பாகவும் கூடியிருக்க—அக் கலவியால் பிறந்தவைகள் இப் பாம்புகள் என நாம் கொள்ளலாம்.

மேலும் பாம்பு முட்டையிடுவதை ஆசிரியர் குறிப்பிடும் போது பாம்புகள் ஆடி மாதம் கூடும் என்றும், கார்த்திகை மாதம் முட்டையிடும் என்றும் சொல்கிறார். மொத்தம் 248 முட்டைகள் இடுமாம். அதில் இட்ட ஏழு நாளுக்குள் 228 முட்டைகளை அதுவே தின்றிடுமாம். பின் எஞ்சிய 20 முட்டைகளில் 4 முட்டைகள் கெட்டுப்போக எஞ்சிய 16 முட்டைகள் இருபத்தேழாம் நாளில் பொரிக்கப் படுமாம் (45—50). இதைப் படிக்கும்போது நம் மனம் சிறிது ஆறுதல் அடைகிறது. இட்ட முட்டை 248 உம் பொரித்தால் உலகம் முழுமையும் பாம்புகள் தான் வாழும். நல்லவேளையாய் 228 முட்டைகளை இட்ட பாம்பே உண்ணுவதால் உலகில் மக்களினம் வாழமுடிகிறதே என்பதே அவ் ஆறுதல்.

பாம்புக்கு விஷம் எவ்வாறு உண்டாகிறது என்பதையும் நூலில் நாம் காண முடிகிறது. பாம்பு பிறந்து 28 ஆம் நாளில் சூரியனைப் பார்த்து ஆடிட்—நான்கு பல் முளைத்திடும். அப்பற்

களின் பெயர்கள் காளி, காளாத்திரி, யமன், யமதூதன் என்பன. அவற்றில் விஷம் வந்து தங்கும்—காளி எனும் பல் பட்டால்—புள்ளடி போலும் களாத்திரி பல் பட்டால்—முக்கோணமும், யமன் பல்பட்டால் அம்புவில் முனையும், யமதூதன் பல் பட்டால் வில் போன்றும் வடிவங்கள் காணப்படும். ஒரு பல்பட்டால் தோலில் விஷம் ஏறும், இரண்டு பல் பட்டால் சதையில் விஷம் ஏறும், மூன்று பல் பட்டால்—எலும்பில் விஷம் ஏறும். நான்கு பல் பட்டால் மூளையில் விஷம் ஏறும் என்று கூறப்பெற்றுள்ளது. இவ்விஷங்களின் கொடுமை தீரவும் வழி கூறப்பெற்றுள்ளது. ஒரு பல் கடியை—துணி—அல்லது கொடி கட்டி தியானித்துத் தீர்க்கலாம். இருபல் கடியை மந்திரத்தால் தீர்க்கலாம். நான்கு பல் பட்டால் மணி மந்திரம், தெய்வத்தின் அருளால் தீர்க்கலாம் எனவும் தெளிவாக விஷத்தின் செய்திகள் முழுமையும் வரிசைப் படுத்திக் கூறப்பெற்றுள்ளது.

பாம்பு, ஏன் கடிக்கிறது என்பது பற்றிக் கூறும்போது,

"பசியினில் பயத்தில் நொந்தால் கோபத்தால்
பல்லில் விடமிருந்தால் மெல்ல மிதித்தால்
இசையுறு தேவர் முனிவர் காலன்இவர்
ஏவலினால் வினைத் தாவலினால்
செய்த நன்றி குன்றினபேரைப் பூருவ
சென்மப் பகையினவரை வன்ம முள்ளோரை
பையரவம் வந்து கடிக்கும். (66—69)

என்று ஆசிரியர் பாடியுள்ளார். பாம்பு கடிப்பதற்கு அடிப்படைக் காரணம் இரண்டு என்பது இதிலிருந்து நன்கு தெரிகிறது. முதற் காரணம் பாம்பு. மற்றொரு காரணம் பாம்புகடிபட்டோனின் நிலை. பாம்புக்குப் பசி வந்தாலோ, பயம் வந்தாலோ, கோபம் ஏற்பட்டாலோ, விஷம் மிகுதியாகச் சேர்ந்தாலோ, அதனை நாம் மிதித்து விட்டாலோ நம்மைக் கடிக்கும். இல்லை என்றால் தேவர், முனிவர், காலன் இவர்களின் ஏவலாலோ—கடிபட்டவனின் வினை வயத்தாலோ—அல்லது அவன் செய் நன்றி மறந்த தன்மையாலோ—அவனின் வன்மத்தினாலோ பாம்பு கடிக்கும். இதில் செய்நன்றி மறந்தவனைப் பாம்பு கடிக்கும் என்பது சிந்திக்கத் தக்கதாக இருக்கிறது. ஆசிரியர் அத்தகைய ஒருவனால் துன்பப் பட்டிருப்பாரோ என்று எண்ணவும் தோன்றுகிறது.

பாம்பு கடிபட்டதும் தோன்றும் பொதுவான குறிகளையும் ஆசிரியர் குறிப்பிடுகிறார். கடித்த இடத்தில் தடிப்பு ஏற்படும், கடுக்கும், இரத்தம் வெளிவரும், விஷம் வழியும், நாவறண்டிடும், விழி சிவக்கும், நகம் கருக்கும், கைகால் விறைக்கும். இவை போன்ற செயல்களை நாம் அறிந்தால் அவை பாம்புக் கடியால் ஏற்பட்டவை என்பதை உணர்வதற்கு இப்பகுதி துணை புரியும் எனலாம். அதன்பின் சிறப்பான குறிகளையும் ஆசிரியர் வகைப் படுத்திக் கூறியுள்ளார் (100—130). இவ்வாறு பாம்பு விஷம் பற்றிய செய்திகளை ஆசிரியர் நன்கு விரிவாகப் பாடியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

பின் 145 முதல் 160 வரி வரை பாம்பு கடித்தவரின் உயிரைக் கொள்ள யமன் வரும் செய்தியை ஆசிரியர் கூறியுள்ளார். அதன் பின் யமன் வருவதை - அச்சத்தால் பாம்புக் கடிபட்டவர் கூறு வதைக் கொண்டு - ஆரூடம் சொல்லும் முறையை 161—180 வரி களில் ஆசிரியர் கூறியுள்ளமை ஆய்வுக்குரியதாக இருக்கிறது. யமனின் தோற்றத்தைப் பாம்புக் கடிபட்டவர் கூறுவது பொருத்தமுடையதாய் இல்லை. ஏனெனில் பாம்பு கடிபட்டவர் அடக்க நிலையில் இருப்பர் என்றுகூறி அவ் அடக்கத்தை ஆசிரியர் கூறியிருப்பதால் அடிபட்டவர் கூறுவர் என்பதை விட - மாந்தி ரீகம் செய்பவர் - அல்லது மந்திரத்தால் பாம்பு கடி போக்கும் நெறியாளர் ஆகியோர் தங்கள் மந்திர முறையைக் கொண்டு யமன் வரும் தோற்றம் கூறி - அதன்மூலம் ஆரூடம் கூறுவதாகக் கூறலாம்.

பாம்புக்கடிக்கு மருத்துவம் பல கோணங்களில் கூறப்பெற் றுள்ளது இயற்கை மருத்துவமாக அவை காணப்படுகின்றன. மூலிகைகள் கொண்டும், மந்திரம் கொண்டும், கருடதியானம் கொண்டும் பாம்புக் கடியைப் போக்கி உயிரைக் காப்பாற்ற வழி கூறப்பெற்றது. இருப்பினும் 4 பல்பட்ட பாம்புகடி - மனித முயற்சியால் மட்டுமன்றி இறையருளும் துணை செய்தால் தான் முடியும் என்று ஆசிரியர் கூறுகின்றார்.

> "பல் நாலும் பட்டால் மணிமந்திர
> அவுடதம் தெய்வச் செயலால் தீர்க்கவேணும்" 78

என்ற வரி அப்பொருள் தருவதாகும்.

மந்திரத்தால் தீர்க்கும் முறையில் கருடதியானம் கூறப்பெறு கிறது. இப்பகுதியில் (265—290) கருடனின் வரலாறு—வீரம்,

சிறப்பு, தியானத்தால் ஏற்படும் பலன் ஆகியவை கூறப்பெற்றுள்ளன. காசிபன் மனைவியர் இருவர். ஒருத்தி கத்துரு, மற்றொருத்தி வினதை. இவருள் வினதையின் மகனே கருடன். ஒருமுறை இரு தாயருக்கும் இந்திரன் குதிரையின் நிறம் பற்றி போட்டி ஏற்பட்டது. கத்துரு கருப்பு என்றாள், வினதை வெள்ளை என்றாள். ஆனால் கத்துரு தன் சூழ்ச்சியால் குதிரையின் வாலில் கருப்புப் புள்ளியை ஏற்படுத்தி -வினதையைத் தோற்கச் செய்தாள். தோல்வியைத் தீர்க்க இந்திர அமிழ்தம் கொண்டுவர வேண்டும் எனக்கூற - அதனால், தன் தாயின் துயர் தீர கருடன் அமிழ்தம் கொண்டு வந்தான் என்று புராணச் செய்தியை ஆசிரியர் விளக்கியுள்ளார்

அதுபோலப் பாற்கடல் கடைந்த போது கருடனின் பங்கு; கருடனின் உருவ அமைப்பு ஆகியவை நுண்ணிதின் உணர்ந்து ஆசிரியரால் கூறப்பெற்றுள்ளது.

இறுதியில் மருந்தால் ஏற்படும் பயன்களைக் கூறி—ஆசிரியர் சிந்தை நிறைவு செய்துள்ளார். பெயர் அறிய முடியாத இச்சிந்து மருத்துவத் துறையில் தமிழினம் எத்தகைய முன்னேற்றத்தைப் பெற்றிருந்தது என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டாகும். சித்த மருத்துவத் துறையினர்—மக்கள் நலவாழ்விற்கு இச்சிந்தைப் பயன் படுத்த முயலலாம். இலக்கியத்திற்கு இலக்கியமாகவும்; மருத்துவத்திற்கு மருத்துவமாகவும் பயன்பெறும் இச்சிந்து சித்தர் ஆரூட நூலைப் பின்பற்றி எழுதப்பட்டுள்ளது. அந்த மூலநூல் கிடைத்திடின் மிக்க பயன் விளையும்.

# சித்தராரூட நொண்டிச் சிந்து

அத்திமா முகவன் செய்ய வடியினைக் கமலம் போற்றிச்
சித்தரா ரூடம் தன்னில் செப்பிய பொருளா ராய்ந்து
சுத்தமா யெவர்க்கும் தோன்றச் சுருக்கமாய் நொண்டிச்
சிந்தாய்
வித்தகர் அருளினாலே தமிழினால் விளம்பல் உற்றேன்

குமார நாயகன் துணை

தெட்சிணாமூர்த்தி கடாட்சம் முன்னிற்க வேணும்
திருமருதூர் வளரும் நாகலிங்கர்
சீர்பாதக் கமலமென் சிந்தையுள் வைத்து
மருவுசித்த ராரூடப் பொருளிதனை
வகுத்துச் சொல்லுறேனிந்த மகிதலத்தில்
புண்டரீகத் திலுறை வோன்படைத்ததிற்
பொல்லாத விஷச்சந்து எல்லாமுமே
விண்டுரைக்கக் கேளுமினி; நல்ல பாம்பு
விரியன்வழலை கொம்பேறி மூக்கன்
சாணார மூர்க்கன் புடையன் மண்டலி
சவளக்காரை மண்ணுளி சாரை

---

சித்தராரூடம்—சித்தர் எழுதிய ஆரூடம் என்னும் நூல் (விஷவாகடம்)
அத்திமாமுகன்—யானைமுகனாம் விநாயகர்
வித்தகர்—ஞானமுடையோர்
கடாட்சம்—கடைக்கண் நோக்கு

1—5. திருமருதூர்—ஆசிரியரின் ஊராகலாம்
மகிதலம் — உலகம்
புண்டரீகம்—தாமரை
விண்டு—விளக்கமாக
விரியன், வழலை, கொம்பேறி மூர்க்கன், சாணார மூர்க்கன், புடையன், மண்டலி, மண்ணுளி, சாரை (—) பாம்பு வகைகள்

வாணாளை வாட்டும் செய்யான் இருதலை
மேலான சிலந்திப் புலிமுகப் பூச்சி
தேள்புள்ளி வண்டு பூரம் பச்சோந்தி
செவ்வட்டைபேய் நரிநாய் சோர்வெலி
வாள்பல்லுப் பூனை புலிபிங்கவங்கம்
வனத்துத்தவளை யட்டை வாசிமுதலை
அரணை நட்டுவக் காலி முதலியவை
அல்லாது சீவசெந்துவும் அனேகம் உண்டாம்
உரகத்தின் போர்நிறமும் சாதியும்
ஊரும் மணமும் மற்றுஉறைவிடமும்

படமெடுத்தாடும் குறியும், முட்டையிட்டுப்
பருவமறிந்து பொரித்தூரும் பரிசும் சில்
விடமுறு, தங்கக் குறியும் கடித்திடும்
விடமும்; கடித்தகடி மீளாததும்
கால்கடி; அடக்ககுறி; வேகக் குறி;
கருதிய தூதரின் கண் குறிப்பும்
சீலமுள்ள மணி மந்திரத்தால்; கருடதியானத்தால்
மருந்தினால் தீர்க்குஞ் செயலும்
குருமலரடி வணங்கி வகை யாய்க்
கூறுகிறேனிந்த குவலயத்தில்

---

6-10. புள்ளி — பல்லி
பூரம்—பூரான்
அரணை—பாம்பரணை எனப்படும்
நட்டுவக்காலி — ஒரு நச்சுயிர்—நண்டு வாய்க்காலி என்ப
சீவசெந்து — வாழும் விஷ உயிர்கள்
உரகம் — பாம்பு

11-15. பரிசு — விதம்
தந்தம் — பல்
குரு — நூலாசிரியரின் ஆசிரியராகிய சித்தர்
குவலயம் — உலகம்

மருமலர்ப் பொருட்டுறைறவோன் பயின்றருள்
மகவென வந்துதித்த மாதவத்தினோன்
காசிபன் மனைவிய ரில்மிக்கான கத்துரு
வயிற் றுதித்த கட்செவிகளைப்
பேசிடில் பேரனந்தன் வாசுகி பிலத்த
தக்கன் கார்கோடன் பற்பன்
மகாபற்பன் சங்கு பாலன், குளிகன் இம்
மாநாகம் எட்டுப் பேர்தானாதியிதில்

**பாம்பின் சாதி**

தேசுகட் செவி அனந்தன் குளிகனும்
செகத்தில் வேதியனென்று வகுத்தனரே

வாசுகி சங்குபாலன் இதுரெண்டு மன்னவனாகு
மென்று சொன்னார் முன்னோர்
தேசுறு தற்கன் மகாபற்பன்.........
தே.........வணிகனென்று மொழிந்தனரே
சூத்திரன் கார்க்கோடன் கனபற்பன் என்று
சொன்னார்களிவரில் முன்சொன்ன பாம்பு
மூத்திடும் ஆணாகும் பின்னாக மொழிந்த
பெண்பாம்பென்று மொழிந்தனரே

**பாம்பின் உணவு, இரை எடுக்கும் நாள்**

ஆதித்த வாரம் அனந்தன் வாசுகி
அடுத்த திங்கட்கிழமைக்கு இரை எடுக்கும்

---

16-20. மருமலர்ப் பொருட்டுறைறவோன் — பிரமன்
கத்துரு — காசிப முனிவரின் மனைவி. நாகங்களின் தாய். 104 பிள்ளைகளையும் ஒரு பெண்ணையும் பெற்றவள்.
கட்செவி — பாம்பு.
அனந்தன், வாசுகி, தக்ஷன், கார்க்கோடன், பத்மன், மகாபற்பன், சங்குபாலன், குளிகன்—கத்துரு பெற்ற எட்டுப் பாம்புகள்
நாகர்—பாம்புச் சாதியினர்
வேதியன் — அந்தணன்

21-25. ஆதித்தவாரம் — ஞாயிற்றுக்கிழமை
இரை — உணவு

போதித்த செவ்வாய் தக்கன் கார்கோடன்
புதன்கிழமை அன்றைக்கு இரைஎடுக்கும்
விடங்கொண்ட துளையெயிற்றுப் பற்பன்
வியாழக்கிழமை தனில் இரைஎடுக்கும்
படர்ந்துசென்று இரை எடுக்கும் தேடிமகா
பற்பராசன் வெள்ளிக் கிழமைதனில்
கூறுசனிக் கிழமை பகல் சங்குபாலன்
குளிகன் இராக்காலம் இரைஎடுக்கும்
பூநில மறிந்த பாப்பான் வாயுவும்
பூமண மிரண்டும் பொசித்திருக்கும்

அரசன்அருகங் கிழங்கு வண்டும் எடுத்தருந்த
வளைதனில் சென்றிருந் திடுமே
சூத்திரன் மீன்தவளை தண்ணீர்த்
துறைதனில் சென்றருந் தும்

## இருக்குமிடம் ஆடும் குறி

சாத்திரம் சொன்னபடியே நாலு வகைச்
சாதியிருக்கு மிடந்தனைக் கேளும்
வேதியன் கோவிலிலே மரத்தினில் வேந்தன்
மனையில் செட்டி சூத்திரன் புற்றில்
நீதியாய் வாழ்ந்திருக்கும் நால்வரும்
நின்றாடும் குறிதனை நிகழ்த்துகின்றேன்

அண்ணாந்து பார்த்தாடும் வேதியன் அரசன்
செவ்வே பார்த்தாடி நிற்கும்
கண்ணாலே தெற்கும் வடக்கும் திசை
காட்டிக்கொண்டு நின்றாடும் செட்டிப்பாம்பு

---

26-30. போதித்த — கூறப்பெற்ற
பொசித்திருக்கும் — உண்டிருக்கும்
31-35. அருகங்கிழங்கு— அருகம்புல்லின் கிழங்கு
சாத்திரம் — பாம்பு சாஸ்திரம்
நாலுவகைச்சாதி—அந்தணர், அரசர், வணிகர், சூத்திரர்
நின்றாடும் குறி — பாம்பு ஆடும் திறம்.
36-37. செவ்வே பார்த்தாடி — நேராகப் பார்த்தாடும்
கண்ணாலே ... செட்டிப்பாம்பு — வணிகப் பாம்பு தன் கண்களை தெற்கும்—வடக்கும் நோக்கியப்டி ஆடும்

வெள்ளாளன் பூமி தன்னையே பார்த்தாடும்
வேத முறைப்படி தப்பாதிதுவே

**படத்தின் குறி, நிறம், மணம்**

முள்ளாகும் பாம்பின்படம் தனில் வைத்த
முத்திரையைச் சொல்லுகின்றேன் சித்திரமாக
பார்ப்பான் படத்தில் சங்கு மன்னவன்
படத்தினில் சக்கரம் பதித்திருக்கும்

காப்பான வில்லு வணிகன் படத்தினில்
காரர்ளன் படத்திற்புள்ளடி யிருக்கும்
*(பூசுரன் ரெத்த நிறமாம் புரவலன்
பொன்னிறம் செட்டி மதியின் நிறமாம்
மாசில்லாச் சூத்திரநிறந் தீட்டிய
மைநிற மாமிது மெய்யாகுமே)
அந்தணன் னாவிமணம் யிறையவர்க்கு
ஆகில் மலர்தாழை மணமாகும்
வந்திடும் வைசியன் மணம் பாதிரி பூமணம்
சூத்திரன் மணமிலுப்பையின்பூச்

**முட்டையிட்டுப் பொரித்திடல்**

சாதியிந்த வகைநாலும் ஆணும் பெண்ணும்
தழுவிப் பிணைந்து கர்ப்பம் தரித்தபின்பு

---

வெள்ளாளன் — சூத்திரன்
சங்கு — சங்கு போன்ற குறி
41-45. வில்லு — வில் போன்ற குறி
காராளன் — வேளாளர்
புள்ளடி — பறவையின் அடிபோன்ற குறி
41-45 *இவை பாண்டிச்சேரி ஏட்டுப் பிரதியில் கண்டவை.
பூசுரன் — அந்தணன்
ரெத்த — இரத்தத்தின் சிகப்பு நிறம்
புரவலன் — அரசன்
செட்டி — வணிகன்
மைநிறம் — கருப்பு நிறம்
நாவி — புனுகு மணம்
வைசிகன் — வணிகன்
பிணைந்து — கூடி

நீதியாய் முட்டையிட்டுப் பொரித்திடும்
நெறியையும் சொல்லுகிறேன் அறியவுமே
காற்றுறு ஆடிமாதம் ஆணும் பெண்ணும்
கலந்து புணர்ந்துடலில் கர்ப்பமுற்று
தோற்றிய கார்த்திகையினில் கருமுற்றிச்
சூல்உளைந்து ஈனுமன்று தொட்டேழுநாள்
இருநூற்று நாற்பத் தெட்டுமுட்டை யிட்டும்
இருநூற்றிருபத்தெட்டு மேழு நாளில்
பருகிடும் நாலுமுட்டை சாமுட்டை
பதினாறு முட்டை நல்ல பக்குவத்திலே

ஒருமித்திருபத் தேழாம் நாளில்
உச்சிதமாகப் பொரிந்தூர்ந்து திரியும்

**விஷமேறும் குறி**

நாலாறு காலும் உண்டாய்த் தோன்றிய
நாளேழு நாளினில் நஞ்சு வேண்டி
மேலேறு மாதித்தனைப் பார்த்தாடும்
விளங்கு மேல்வாயின் பல்லு நான்கிலும்
கொடுவிடம் வந்துதிக்கும் பால் சுரக்கும்
கூறுபோல் ஊறுமென்று மாறாமலே
கடுவிடம் நாலெயிற்றுக்கும் பேர் காளி
காளாத்திரியி யமனி மதூதன்

---

46-50. காற்றுறும் — காற்று மிகுந்த
கார்த்திகை — கார்த்திகை மாதம்
உளைந்து — வருந்தி
தொட்டேழு நாள் — தொட்டு ஏழு நாள்
சாமுட்டை — கெட்டுப்போன முட்டை

51-55. உச்சிதமாய் — தகுதியாய்
ஆதித்தன் — சூரியன்
பால்சுரக்கும் கூறு — பால்சுரக்கும் மடிபோல்
காளி, காளாத்திரி, யமன், யமன்தூதன் — பற்களின் பெயர்கள்

மேல்வாய் அலகு தன்னில் அரவுக்கு
விளக்கமாய் நாலுபல்லு முளைத்திருக்கும்
நாலுபல்லுக்குந் துளையிருக்கும் கடி யுறில்
நச்சுப்பல் துளைவழியே நஞ்சுகழன்றுவந்து
கடிவாயினிறங்கித் தொண்ணூற் றெட்டு
மாத்திரை நின்றுடலின் மண்டியேறும்
அந்தமுள்ள படத்துரகம் தோன்றினால்
அறுபதில் தோலுரிக்கு மாறா மதியில்
குதித்திடும் விடமெயிற்றி லிதுரெண்டும்
கொண்டவா ளரவுக்குக் கண்டமென்பரால்

**கடிவாயின் குறி**

குதித்திடு மெயிற்றரவம் பல்லுத் தைக்கும்
கடிவாயின் குறியினைக் கழறுகின்றேன்
காளியென்னும் பல்லுத் தைத்தால் புள்ளடிபோல்
கடிவாயின் குறியினில் பனீர்போல் வடிவாகும்
மீளாத காளாத்ரி தைத்த வாயில்
விளங்கு முக்கோண மஞ்சள்நீர் பொசியும்
கோதாய் நமன்தோட்டிப் பல்லுத் தைத்தால்
கூர்முனையிற் செந்நீர் பாயும்
தூதனென்ற பல்லுத் தைத்தால் வில்போன்ற
சுவடில்கழு நீர்வந் துவட்டெடுக்கும்

பசியினில் பயத்தில் நொந்தால் கோபத்தால்
பல்லில் விடமிகுத்தால் மெல்ல மிதித்தால்
இசையுறு தேவர் முனிவர் காலனிவர்
ஏவலினால் வினைத் தாவலினால்

---

55-60. வாய்அலகு — மேல்வாய்
தொண்ணூற்றெட்டு மாத்திரை — 98 நொடி
படத்துரகம் — பாம்புப் படம்
61-65. வடிவாகும் — வடியும்
பொசியும் — வடியும்
தோட்டிப்பல் — கோடரி போன்ற பல்
வட்டெடுக்கும் — வடியும்
66-70. நொந்தால் — பாம்பு வருந்தினால்
மெல்ல மிதித்தால் — மனிதர் மிதித்தால்
வினை தாவலினால் — வினை வயத்தால்

செய்தநன்றி குன்றின பேரைப் பூருவ
சென்மப் பகையினவரை வன்மமுள்ளோரைப்
பையரவம் வந்து கடிக்கும் இதிலொரு
பல்பட்டால் விஷம்தோலைப் பற்றியேறும்
பல்லுரெண்டும் பட்டால் விசமாங் கிசத்தை
பற்றியேறும் மூன்றுபல் பட்டால் விஷம்
வல்யெலும்பைப் பற்றியேறும் நாலு பல்லால்
வகிர்ந்தால் மூளை புகுந்தேறும்
கால்கடி யொருபல்பட்டால் இரண்டு பல்லாய்க்
கடித்தால் கடியரைக் கடியாமே
மேல்பல்லு மூன்றும் பட்டால் கடிபட்ட
விடமுக்கால் கடியென்றிட லாமே
முளைத்தபல் நாலும்பட்டால் அந்தக்கடி
முழுக்கடியா மென்று வழுத்துவரே
துளைப்பல்லில் ஒருபல் பட்டால் அந்தக்கடி
துசங்கட்டி தியானிக்க விடந்தீரும்
இரண்டுபல்பட் டவிடத்தை மணிபதித் தேற்கு
மந்திரத்தாலும் தீர்க்க லாமே
முரண்டுமூன்று பல்பட்டால் அந்தக் கடிகை
மூலிகை கலிக்கம் நசியத்தால் தீரும்
அரவின்பல்நாலும் பட்டால் மணிமந்திர
அவுஷதம் தெய்வச் செயலால் தீர்க்கவேணும்
இரவினில் பாம்பு கடித்தால் அந்தக்கடி
மீளாத குறியிடம் விளம்புகிறேன்
உள்ளங்கால் உள்ளங்கை நெற்றி மார்பு
கழுத்து உதடுமுலை மூக்குபுருவம் கொப்புள்

---

பூர்வசென்மம் — முற்பிறப்பு
வன்மம் — வைராக்கியம்
பையரவம் — நச்சுப்பையினை உடைய பாம்பு
மாங்கிசம் — மாமிசம்; சதை

71-75. வகிர்ந்தால் — பல்லால் கீறினால்
துசங்கட்டி — துவசங்கட்டி; கொடிகட்டி. (உறுதியாக நின்று என்பதும் பொருள்.)

76-80. கைமூலிகை — மூலிகை மருந்து
கலிக்கம் — கண்ணுக்கிடு மருந்து
நசியம் — மூக்கில் இடும் மருந்து
அவுஷதம் — அவுடதம்; மருந்து வகை

தெள்ளுநாசிச் சந்தும் குதிக்கால் செவிபுறத்
 தோடி ஆலமரத் தூரடியில்
புன்னைபுளி மூங்கிலரசில் நாணலில்
 புற்றுக் கிணற்றில் புறமடையில்
பின்னமுள்ள பரன்கோவில் பாழ்
 வீட்டில் பிணமிடு நிலத்தில்
நந்தவனம் புத்துமடத்தில் ஏரிக்கரை
 நதிக்கரை சுனைக்கரை யாக சாலையில்
அந்திசந்தி முச்சந்தியில் உறக்கத்தில்
 ஐயன் பிடாரி துர்க்கை ஆலயத்தில்

மாயவரில் பாம்பு கடித்தால் தீராத
 மரணநாள் சொல்லுகிறேன் பரணிமகம்
ஆயிலியம் திருவோணம் மூலம் கார்த்திகை
 ஆதிரை சுளகு சித்திரை சோதி
சென்ம நாள்அனு சென்மநாள் திரிசென்ம
 சேர்ந்திடுநாள் வதமவை நாசியங்
கன்மமும் நவமி சஷ்டி குளிகனில்
 கடித்திடில் அந்தக் கடிநொடிக்குள் கொல்லும்
தானோடிக் கிடந்திடினும் அந்தக் கடி
 தப்பாமல் கொல்லுமென்று செப்பலாமே

கடித்தவாய் தடிக்கில் கொல்லும்—வீங்கியே
 கடுத்தெரிகினும் கொல்லும் கண்டம் சொரித்தும்
குடித்த மருந்தெடுக்கில் கொல்லும்—கடித்தவாய்
 குமுறினும் செங்குருதி பாயினும் கொல்லும்

---

81-85. நாசிச் சந்து — மூக்குத்துவாரம்
புன்னை, புளி, மூங்கில், அரசு—மரவகைகள்
பிணமிடு நிலம் — சுடுகாடு
புத்துமடம் — புற்றுள்ள இடம்
86-90. மாயவரில் — திருமால் கோட்டம்
பரணி, மகம், ஆயில்யம், திருவோணம், மூலம், கார்த்திகை, ஆதிரை, சுளகு, சித்திரை—நட்சத்திரங்கள்
சுளகு—விசாகநட்சத்திரம்
சோதி — நட்சத்திரம்
குளிகன் > குளிகை — நேரம்
91-95. தடிக்கில் — வீங்கினால்
கண்டம் — கழுத்து

விடங்குதித் தொழுகில் கொல்லும்—நாவரண்டு
விழிசிவக்கினும் கொல்லும் மெய் நடிக்கினும்
படம்கொண்ட பொறியரவம் நாவெயிறும்
பதியப்படினும் கொல்லும் பல்லும் உகிரும்

கறுத்திடில் கொல்லும் உரகம், சீறியே
கடித்தவுடன் மலநீர் விடுக்கிற் கொல்லும்
விறைத்திடில் கைகால்விரல் நிமர்ந்திரு
விழி சொருகினும் கொல்லுமென்னலாமே

### விஷத்தின் குணம்

நச்சரவில் ஆண் கடித்தால் மேல்நோக்கும்
நயனம்பெண் பாம்பெனில் கீழ்நோக்குமே
அச்சமில்லாமல் அடக்கில் வேர்வை மிகும்
அலிப்பாம்பெனில் விடம்கலிப் பாகும்
சூலாகி வயிறுளையும் முட்டையிட்ட
துட்டனெனில் நெட்டைவிழி முட்டை சிவக்கும்

மேலெயிற்றுக் காளி கடித்தால் வலதுகண்
வேதனை செய்யுமகில் பாம்புகடித்தால்
கடித்தவாய் வீக்கம் காணும்; வேகமாயிளங்
கன்னிக் கிடதுகண் வேதனை காணும்;
துடித்திடும் குட்டிப் பாம்பு கடித்திடில்
சோர்வு மயக்கமுடன் பாரில்வீழ்த்தும்
கருநாகம் கடித்ததென்றால் உடனிரு
காதும் செவிடாமென் றோதினாரே
ஒருநாகத் தடைவிதுவே பலவிடத்து
உரகங்கள்சரித்திர முறை செய்கிறேன்

---

குடித்த மருந்தெடுக்கில் — வாந்தி எடுத்தல்
குமுறினும் — வெந்தால்
மெய்நடிக்கினும் — மெய் நடுங்குதல்
எயிறு — பல்
உகிர் — நகம்

96-100. நயனம் — கண்
அலிப்பாம்பு — ஆண், பெண் இரண்டுமல்லாத பாம்பு
கலித்தல் — மிகுதல்

101-105. காளி — பல்லின் பெயர்

முரட்டுப் பல்பொறி விரியன்; சூல் கொண்டு
முதுகுதனில் வெடித்துக் குஞ்சு பொரித்தால்
கரட்டோணான் தேள்பூரம் — நட்டுவாக்
காலிசிலந்தி புலிமுகப் பூச்சி
செய்யானுடன் பொறிவண்டு முதற்பல
சீவசந்துகள் அதிலே பிறக்கும்
மெய்யான பெருவிரியன் கடித்திடில்
வீங்கிக் கடுத்தெரிவு மீறிக்குருதி
வடிந்திடும் கடிவாயில், கண்ணுறங்கும்
மயங்கி உடல்வெதும்பித் தியக்கிடுமே
கடித்திடுமே ரத்தவெறியன் பல்லுபடக்
கடித்திடில் வாயிடம் காணும்குருதி
கற்றளி விரியன் கடித்திடில் வயிற்றினில்
காய்ந்தும் வயிற்றை வலித்திருந்து கொல்லும்
மற்றுமுள்ள மூவிரியனும் கடித்திடில்
வலித்துக் கடுத்தெரிந்து வீங்கும் கடிவாய்
வழலைக்கு வாய் வெளுத்தும் — கடிவாயில்
வடியும் ரத்தம்;கரு வழலைக் கெனில்
அழலென மேனிவெதும்பி வேர்வை மிகுந்து
அகங்கையும் காலும் சிவந்தைந் திரண்டும்
மார்பினை அடைத்துக் கொல்லும்; செவ்விரத்த
மண்டலிக் கெனில்மயிர்க் கால் வழியே
தாரைவிட் டோடும் குருதி—சீதளம்
தானா மண்டலிக் குடல்குளிர்ந் தாட்டி
ஒழுகிடும் வேர்வைநீர் மூர்க்கனுக்குத் தான்
முதுகுகடி தடமும் நொந்து

---

106-110. பொறிவண்டு — புள்ளியுடைய வண்டு
கடுத்தெரிவு — கடுத்தலும், எரிச்சலும்
இயக்கிடும் — இயங்குதல்
111-115. காய்ந்தும் — வெந்தும்
வழலை — பாம்பு
அழல்என — தீயென
ஐந்திரண்டும் — பத்து விரல்களும்
116-120. இரத்தமண்டலி — பாம்பு
சீதளம் — குளிர்ச்சி
கடிதடம் — மறைவிடம்

பழகிய வாயும் கழுத்தும் திருகியே
பகரும் குரலும் நலிந்துடல் உதறும்
சுற்றுமயக் காராகில் இரு கண்ணும்
சுழன்றடிக் கடிமதி மயக்கிடுமே

பற்றுமுறுக் காராகில் உடல் முற்றும்
பதறிமுறுகித் திருகிடும் பூரம்
நின்றூதும் உகிர் கருக்கும் தேளுக்கு
நெறிகட்டிக் கடுத்தெரிக்கும் வேர்க்கும்
என்றார் நட்டுவாக் காலி கடிக்கில்
எரித்துக் கடுத்துக் குமுறிடும் வீங்கும்
செய்யானேல் பற்பட்ட கடிவாய் வீங்கியே
தேளின் சதமடங்கோர் நாளும் கடுக்கும்
பொய்யாஞ் சோர்அரவுக்குக் காயத்தில்
புள்ளிபோல் எங்கும் தடித்திடும் சிவப்பாய்

கறுத்திடும் சோர்வுக்குத் தேக முற்றும்
கறுத்துத் தடித்துப் படர்ந்திடு மதர்க்கும்
ஒறுத்திடும் சிலந்தியெனில் கடிவாயில்
ஒருபொழு திருபொழு தெரித்த முற்றும்
வண்டுகடிக்(கு) உடல்முழுதும் சில நாளில்
வட்டமிட்டுத் தடித்திட்டுப் படர்ந்தரிக்கும்
தண்டிய செவ் வட்டைகடித்தால் கடித்தவாய்
தடித்துச் சிவப்பேறி மதர்த் திருக்கும்
இன்னமொரு கோடியுண்டாம் அவையெல்லாம்
எடுத்துரைத் தோதுவதெவரால் முடியும்

---

115-120. மதி மயக்கிடும் — அறிவு மயங்கிடும்

121-125. பூரம் — பூரான்
உகிர் — நகம்
கடுத்தெரிக்கும் — கடுத்து எரியும்
குமுறிடும் — வெந்திடும்
சதம் — நூறு
பொய்யாஞ் சோர்அரவு — பொய்யான் என்னும் விஷப் பாம்பு

126-130. ஒறுத்திடும் — வதைக்கும்
மதர்த்திருக்கும் — உணர்வற்றிருக்கும்

### பாம்பின் வயது

பன்னகங்கள் வயதினையும் செயித்திடும்
பகையும் பிரிவினையும் பகருகிறேன்
பாப்பானுக் காயிரத்தெட்டுப் பாராளும்
பார்த்திபர்க்கு எண்ணூறு மாதம் வயது
வாய்ப்பான பதியார்க் கைந்நூறாம் என்று
வகுத்தனர்; சூத்திரர்க்கு முன்னூறாம் என்றார்
இருதலை மயிணன் செந்நாய் மயக்கோடி
எருத்தின் குளம்பு மின்னலடி கீரி
கருமயில் கரடிபன்றி செம்போத்துக்
கெருடன் முதலையன லாந்தை, கூகை

செயலுள்ள மான்குளம்பு வேழ முதல்
செப்பியசத் துருவுக்குத் தப்பிப் பிழைத்தால்
வயதுநூற் றிருபதுக்கும் சாகாமல்
மண்மிசை வாழ்ந்திருக்கும் உண்மை இதுவே
மண்மீது நூற்றிருபது பருவம் வாழ்ந்து
பிற(கு) உடல் தேய்ந்து குறுகி
ஒன்றான படம் சிறியதாய்ப் பறக்கும்போ
தந்தச் சிகையில் மணியொன்று தோற்றும்

---

131-135.
பன்னகம் — பாம்பு
பகருகிறேன் — கூறுகிறேன்
பதியார் — வணிகர்
இருதலை மணியன் — மணி பொருந்திய இரண்டு தலைகளை உடையதென்று சொல்லப்பெறும் பாம்பு
செம்போத்து — ஒரு வகைப் பறவை
கூகை — கோட்டான்

136-140. வேழம் — யானை
சத்துரு — பகை உயிர்கள்

135-140. நூற்றிருபது பருவம் — நூற்றிருபது ஆண்டு
சிகை — தலை உச்சி
மணி — நாகரெத்தினம்

தோற்றிய நாகமெட்டும் புவி விட்டுத்
தொடரும் வனத்தினும் விண்ணாடர் வெற்பினும்

போற்றிய பனிகோடிக் காவினுள்
புரவலர் போலிருந்தரசு செய்யும்
மானாகமென்னும் பேரரவங் கெருடற்கு
மாத்திரம் பயப்படும் நேத்திரமாக
தானாலு பல்லில் விடமும் இருகண்ணில்
கரித்திடும் பார்த்தவுடனெ ரித்திடுமே
பாம்பின் ராசாளி என்றும் புகலுவர்
பருவநூற் றிருபது சென்றதுபோக
தான்பெற்ற வயது குறையும் இருந்து பின்
சாலோக பதத்து மேலாகுமே

## தூதன் வரும் குறிப்பு

தூதன் வந்துநிற்கும் வடிவும் ஆரூடம்
சொல்லும்குறி தொடுகுறி பல்லின் குறியும்
நீதியுடன் சொல்லுகிறேன் ராகுவின்
நிலையில் பதறிவந்து நின்று சொல்லினும்
செய்யபூச் சூடிவரினும் கருந்துகில்
செய்யதுகில் புனைந்து பையவரினும்
கையில்தடி யூன்றிவரினும் கெடையா
கத்திகயிறு பிடித்துச் சுத்தி வரினும்
கண்ணில் நீர்வார்ந்து நிற்கினும் வாய்குழறி
கையை விரித்து நின்று மெய்பதறி

---

விண்ணாடர் வெற்பு — தேவருலகம்
141-145. பனிகோடிக்கா — பாம்பு வாழும் காடு
கெருடர்க்கு — கருடனுக்கு
சாலோகபதம் — இறைவன் உலகில் வாழும் பேறு
146-150. தூதன் — செய்தி கொணர்பவன்
ராகு — பாம்பு
செய்ய — செம்மை
கயிறு — பாசக்கயிறு

விண்ணோக்கிப் பார்த்து நிற்கினும்—தூணினும்
 விறகினும் சாய்ந்துநின்று மெய்புகலினும்
மண்ணினைக் கால்கொண்டு கீறினும் தரையில்கை
 வைத்துவரினும் உடைசுத்தி வரினும்
எண்ணெய் இட்டுவரினும் பாரில் விழுந்து
 எழுந்து புலம்பித் தொழுதேங்கி வரினும்
பாம்பின்பேர் முன்பு சொல்லினும் பாம்பின்பல்
 பட்டவன்பேர் பின்பு கண்டு நெட்டுயிர்ப்பினும்
சோம்புடன் கொட்டாவி விடினும் மார்புசந்தில்
 சொறியினும் தன்மயிரைத் தூற்றிநிற்கினும்

வந்தவன் உயர்ந்து நிற்கினும் நோயாளன்
 வரினும் மயிர்களைந்தோன் வந்து நிற்கினும்
அந்தகன் கைகால் தறிபட்டோன் மூக்குக்
 காதறுபட்டோன் ஒற்றை விழிமறைபட்டோன்
இங்கிவர்கள் வந்து சொல்லினும் பூனைக்கண்
 இயம்பினும் கால்கடி யென்று சொல்லலாமே
பாங்குடன் முன்வந்த தூதன் ஆருடம்
 பதினாறு திசைக்கும் யான் பகருகின்றேன்
அருக்கினில் நல்லபாம்பு தேள்வழலை
 ஆலைநீர்ப் பாம்புரக மெலிமண்டலி

இருக்குநற் சாரைப்பாம்பு மாநாகம்
 எறும்பு மயக்கார் வண்டரவமுடன்
பூரம்விரியன் சிலந்தி யிந்தப்படி
 பூர்வமுதல் ஈசன் பரிந்துரைக்கும்
ஆருடமிதுவாகும் தூதன் நிலை
 அறிந்தின்ன செந்துவென்று தெரிந்து கொள்ளே

---

151-155 விறகு — மரம்
எண்ணெய் இட்டு — எண்ணெய் தேய்த்து
தூற்றி — உதறி
156-160. மயிர்களைந்தோன் — நாவிதன்
அந்தகன் — குருடன்
தறிபட்டோன் — வெட்டுப்பட்டோன்
அருக்கு — அருகம்புல்
161-165. மாநாகம் — தலைநாகம்
செந்து — ஜெந்து; விஷ உயிர்

முன்னே வந்துநின்ற தூதன் மூக்கையும்
முகத்தையும் தொடில்நல்ல பாம்பென்னலாம்
பண்ணும் களம்தனைத் தொட்டிடில் வழலையாம்
பருத்தவிரியன் கரத்துரத்தைத் தொட்டால்

சந்தாகில் மண்டலியாம் இரண்டுமுழந் தாளில்
தொடில்புடையன் கீழில் சிலந்தி
வந்தோன் இந்திரன் முதலாய் நாலுதிக்கும்
வரிகினும் அரணை என்று நிகழ்த்தினரே
ஈசன்அங்கு நிருதி திசைதனில் சொல்லில்
ஏந்திழையர் என்று தேர்ந்துரைத்தார்
வாசியுள்ள காற்றுத் திசையியம் பிடில்
வனத்து மிருகங்கள் தன்னினத்தில் என்றார்
கீழ்த்திசை வரும் தூதன் அகரமுன்
கிளத்திலொரு பல்யமன் றிசைக்கு ரெண்டாம்

வாட்டமிலா மேற்றிசையில் மூன்றுபல்
வடதிசைநாற் பல்லென் றிட லாமே
தென்திசை வரும் தூதன் இகரமுன்
செய்யில்ஒரு பல்மேற்கு ரெண்டுபல்லாம்
குன்றான வடதிசையில் மூன்றுபல்
குணதிசை நாலுபல்லும் பணிப்பலென்பாம்
மேற்றிசை வரும்தூதன் உகரமுன்
விளம்பிலொருபல் வடதிசைக்கு ரெண்டாம்
தோற்றுமிந்திரன் மூன்று தென்திசையில்
சொல்லிற்பல் நாலென்று சொல்லலாமே

---

களம் — கழுத்து

166-170. உரத்தை — மார்பை
சந்து — மார்புப் பகுதி
அரணை — பாம்பரணை
நிருதி — தென்மேற்குத் திசை
ஏந்திழையர் — பெண்கள்
காற்றுத் திசை — வடமேல் திசை
யமன்திசை — தெற்கு

171-175. குணதிசை — கிழக்கு

சோமனிலே வருதூதன் எகரமுன்
சொல்லிலொரு பல்கிழக்கு ரெண்டுபல்லாம்
பூமியிலிய மன்றிசையில் மூன்றுபல்
போலும் வருணனுக்கு நாலுபல்லாம்
எண்டிசை வருதூதன் ஒகரமுன்
இயம்பிடில் ஒருபல்லும் இல்லை எனலாம்

பண்டை வெள்ளை யாடைபுனைந்து வந்தொருவன்
பதறாமல் நிற்கில்விடம் சிறிதென்னலாம்
தூதன்சொன்ன சொல்லதனை யெழுத் தெண்ணித்
துணிந்தொரு மூன்றினில் ஈந்தசேடம்
ஒதுமொன்று சாவுதிண்ணம் ரெண்டினுக்
குயர்ந்துவிடம் தலைக்கொண்டே மீளும்
சரிவாய் யீய்ந்ததென்றால் விஷமில்லை
சாவு லெட்சணத்தையும் உரை செய்கிறேன்
சொரிஒரு பூரணத்தில் வந்தொருவன்
சூனிய திசையினில் போனானென்றால்
பல்பட்டான் பட்டானென்பாம் சூனியத்தில்
பதறாமல் வந்துநின்ற பூரணத்தில்
முற்பட்டான் எனில்விடத்தில் மெய்மயங்கி
மூர்ச்சித்துக் கிடந்தாலும் தீர்க்காயுளாம்

இடக்காந்தும் காரத்தைக் கண்ணினால் எழுதிப்
பார்த்திடில் தந்தம் வெளுக்கில் ஒன்று
வடிபொன்னிற மாகில் ரெண்டுபல்
வண்ணம் சிவக்கில் மூன்றுபல் எனலாம்
கறுத்திடில் நாலுபல்லாம் முகர்ந்திடில்
கடிமலர்த் தாழை வாசனை காணின்
மதித்தது நல்ல பாம்பு; பாதிரிப்பூ
மணக்கில் வழலை; புளி மணம் விரியன்
மல்லிகைப்பூ மண்டலியர் மிளகு சுக்கு
மணக்கின் சிறுபாம்பின் குணமாம்

---

176-180. சோமன் — சந்திரன்
181-185. திண்ணம் — உறுதி
சொரி — சுழல்தல்
பூரணம் — முழுநிலவு
சூனியம் — ஆகாயம்
186-190. தந்தம் — பல்

சொல்லிய முற்பழைய கையை அரவொன்றும்
தொடவில்லை என்று சொல்லும் திடமாம்
முற்பக்கத் திருளாகில் ஆணினைச் சர்ப்பம்
தொடர்ந்து வலக்காலில் கடிக்கும்
பொற்புறு மடவியரை யரவிடப்
புறந்தாள் தனில் கடித்தூர்ந்திடுமே
நற்பகலில் ஆணையிடத்தில் கடித்திடும்
நாரியரை வலத்தில் நாடிக் கடிக்கும்
விற்பகத் திருளாணை இடத்தினில் பெண்ணினை
வலப்புறம் நண்ணு பகலில்
கடித்திடும் ஆணை வலத்தில் பெண்ணினைக்
கடிக்கும் இடப்புறத்தில் மடிப்பாகப்
பிடித்திடும் வேகக் குறிதனைச் சொல்வேன்
பிணித்தேறு வேகம் மூவகையாகும்
வாயுவின் வேகமெட்டுக் குளிர் தரும்
வருணன் தனக்குமூ வேகம் என்பார்
தேயுவின் வேகம் பத்து மாத்திரை தரும்
வருணனுக்கு மூவொன்பதாகும் சரசம்
காற்றினுக் கைம்பதாகும் தேயுவுக்குக்
கணித்திடு மாத்திரை நூற்றைம்பதாம்
சாற்றிய வாயு வேக முதல் வேகம்
தானவரில் மூர்ச்சித்து வேர்வை வரும்பின்
இரண்டுக்கு வெதுப்ப முண்டாம் மூன்றில்
க்ண்ணேறச் சொருகும் நாலில் சோத்தியம்
செய்யும்

---

191-195. மடவியர் — பெண்கள்
நாரியர் — பெண்கள்
விற்பக்கம் — ஒளிப்பக்கம்
நண்ணுதல் — பொருந்துதல்

196-200. மடிப்பாக — வேகமாக
வேகம் மூன்று — வாயு, தேயு, வருணன்
கணித்திடும் — கணக்கிடும்

201-205. தானவரில் — தான் + அவரில்
வெதுப்பம் — வெப்பம்
சோத்தியம் — புலன்கள் செயலற்ற நிலை

திரண்டஞ்சிலக் கோழை யடைக்கும் ஆறுக்குச்
சிந்தை அறவழிக்கு மேழில் விறைக்கும்
எட்டாகில் உயிர் போக்கும் வருணனில்
எழுந்தழுதல் வேகமயிர்க் கூச்சாய்
நெட்டுடல் முட்டச் சிவப்பாம் இரண்டு
மட்டுமுட்டல் கரிந்துபாயும் உலர்ந்து
வெதும்பிடு மூணுவேக முன் விளைக்கும்
விளங்க நல்வேக மெனல் உளங்கலங்கித்
ததும்பிடும் கபம் கக்கும் அஞ்சினில்
தலையை நடுக்கும் நெஞ்சில் அறிவழிக்கும்
ஆறாகில் கண்ணை விழித்து மேல் பார்க்கும்
மீறுமோரேழ் வேகமெய் விறைக்கும்
கூறான இருநான்கில் அடக்கமாய்க்
குறித்திடு சுக்கிலம் ஒன்பதில் என்பரால்
பத்தாகில் மரணமென்பாம் அழல் வேகம்
பகருமுதல் வேகம் கண்கள் சிவந்து
சத்தான முகம் கருகி ரெண்டினில்
கறுத்துச் சிறுநீரும் கடுத்திறங்கி
முகம்வேர்த்து உடல் முழுதும் ரோமங்கள்
முளைத்துக் கிளைத்ததெனத் திளைத்து நிற்கும்
செகமதில் மூவேகம் வாய் குளறிச்
சிந்தை கலங்கியுடல் நொந்து வீழ்த்தும்
நாலினில் குடலிறைந்து சோரஞ் செய்து
நாசியில் நீர்வடிந்து தேகமாறும்
மேலெழும் ஐந்தனுக்கும் உடல் முற்றும்
வெடுவெடுத் தாட்டிக் கொள்ளுமாறாகில்

---

கோழை — சளி
நெட்டுடல் — நெடிய உடல்

206-210. கபம் — சளி
விறைக்கும் — மரத்து விடும்
சுக்கிலம் — இந்திரியம்
அழல் வேகம் — தேயுவேகம்

211-215. ஜெகம் — உலகம்
குடலிறைந்து — குடல் கெட்டு
சோரம் — வஞ்சனை
நாசி — மூக்கு

பல்லொடுபல் கடிக்கும் விறைத்துடல்
பதைக்கும் இருமூக்கில் நீர்பாயும்
சொல்லுரை கெடுமேழில்; எட்டில்
சுவாசம்மேல் ஏறாமல் விழிமேல் நோக்கும்
ஒன்பதில் ஒடுங்குமுயிர் பத்தினில்
உடல்விட்டுப் பறந்திடும் உயிர்வானில்

**அடக்ககுறி**

என்புள்ள தாபரத்தில் அடக்கமாய்
இருக்குமுயிர்க் கலையை இயம்புகின்றேன்
அடக்க முற்றிடும் பொழுதில் இருவிழி
அதுமேல் நோக்கில் உயிரதுமேலாம்
மடக்கியவிழி கீழாய் விழித்திடில்
மானமான உயிர்கீழே நிற்கும்
பக்கத்தில் விழியொதுங்கில் சீவனும்
பக்கத்தில் இருக்குமென்றார் மிக்காகவே
சத்தெதிர் விழித்திருக்கில் சீவனும்
சடத்தில் நேர்நிலையெனத் திடத்துச்சொல்லே
ஒடுங்கு முன்னே பாதத்தைப் பிரம்புகொண்டு
ஓங்கி அடிக்கில்உடல் தடித்திடினும்
சடந்தணல் என வெதும்பில் மெய்சிவக்கில்
தண்ணீரில் போட்டிடில் தாழ்ந்திடிலும்
குடத்துநீர் மேல்சொரியில் உடல் முற்றும்
குளிர்ந்துமயிர் கூச்செறி வளைத்திருக்கில்
பிடித்துகை விரலில் நெட்டி பறித்திடில்
பிலத்தழுத்திட மயிர் வலுத்திருக்கில்

---

216-220. பல்லொடுபல் கடிக்கும் — பல் கிட்டித்தல்
அடக்ககுறி — உயிர் அடங்கியிருக்கும் நிலை
216-220. என்பு — எலும்பு
தாபரம் — தாவரம்; உடம்பு
221-225. சீவன் — உயிர்
சடம் — உயிரற்ற உடம்பு
பாதம் — கால்
226-230. பிலத்தழுத்திட — பாதாளத்தில் அழுத்துவது போல் அழுத்திட

ஊன்றிடும் குடோரியிடில் செவ்விரத்தம்
ஒழுகின் தாதுஒன்று நடக்கில்
தோன்றிடும் ஆவியுள்ளே அடக்கமாய்ச்
சூட்சமாய் இருக்குமது மாட்சியறியே

### விருத்தம்
### (அடக்கம் எழுப்பவகை)

அடக்கமென் றறிந்த போதே அவர்தலை உச்சி கீறிக்
குடத்துவா யோட முத்திக் கொடும்புரை யடைத்துப் பின்னர்
விடுத்திடும் வேளைச் சாத்தை விட்டுமேல் ஒட்டை வைத்துக்
கடுக்கினில் எரிக்க மீண்டு கடிவிஷம் கடிவாய் காணும்.

### சிந்து

சிரசில் குடோரியிட்டுப் பள்ளுஞ்
சேந்ததில் சூதம் களஞ்சியிட்டு
விரிவாயோர் ஒட்டை வைத்து — ஒட்டு
மேல் கொடுந்தணல் தானெரிக்கில்
அடங்கிக் கிடந்த உயிர் காய்த்த
போல்வரும் சபை மெய்ப்புவரும்
காலன்தனை எழுப்பத் தந்திரம்
கற்றுணர்ந்தோர் சொன்ன வேத்தியத்தை
மேலான தந்திரத்தை யானும்
விஸ்தார மாய்ச்சொல்லத் தத்தையரே
கேளாய்நீ ஆடவர்க்கு ஞாளம்
கேள்படி ஆறுவிரல் நீளம்

---

குடோரி — கீறி மருந்திடும் முறை
குடத்துவாய் — தலையின் ஓடு
வேளை — மருந்துச் செடி
கடுக்கினில் — விரைவில்
231-235. சூதம் — ரசம்
களஞ்சி — சூதபாடானாம்
வேத்தியம் — முறை
தத்தையர் — கிளியனையர்
ஞாளம் — தண்டு

தாளாத மங்கையர்க்கு ஞாளம்
தானெட்டுக் கைவிரல் நீளமுமாய்
செம்பில் தகட்டி லடித்துவளர்
சென்னெலின் தாளின் பருவமொன்றும்
நம்பும் சிறுவிரல்போல் ஒன்று
ஞாள மிரண்டும் திரட்டியதை
ஊமத்தம் பூப்போல மேலாய்
ஒருபுறமும் விரிவாய் இருக்கும்(படி)
நேமித்துத் தண்டினிலே செல்ல
நீளம் அறுவிரல் ஞாளமதைச்

செலுத்திக் குளத்தலையில் ஒரு
தீபத்தணல்வைத் ததின்மேல் சூதம்
நிலத்தில் அரைக் கழஞ்சி விட்டு
ஞாள வழிசென்று கீழிறங்கி
கால்கடி கடித்தே யுயிர்க்கை
கடந்தே உள்மெய் அடங்கி
மாலாய்க் கிடந்திடினும் சீவன்
வந்து புகுந்து கலந்திடுமே
பெண்ணாட்கும் இப்படியே செய்யப்
பிழைப்பள் உனக்கும் அளப்பிதுவே

பண்ணும் தைலமொன்று செய்து
பட்ட பிணத்தையும் தொட்டெழுப்பிச்
செய்யும் வகைகேளாய் வளர்
செங்குன்றித் தோடுமியும் கருதி
துய்ய பருப்பெடுத்துக் கொண்டு
சோதித் தொருபிடி யோரதிலே

---

236-240. சென்னெல் — செந்நெல்
நேமித்து — வட்டமாக
241—245. கழஞ்சு—பன்னிரண்டு பண எடை
மாலாய்—மயக்கமாய்
சீவன்—உயிர்
அளப்பிதுவே—கூறமுடியாது
246—250. செங்குன்றி—குண்டுமணி

எருக்கன் இலைச்சாறும் வீழி
இலைச்சாறும் இரண்டும் ஒன்றாக விட்டுப்
பருப்பை அதில்போட்டு வைத்துப்
பத்துநாள் ஊறியெடுத் தரைத்து
கடிதாய் இரண்டும்ஒன்றாய்க் கட்டிக்
கஞ்ச கலத்தினில் அப்பிவைத்து
வெயில்முகத் திருக்க வைத்து
வீழும் தைலத்தைத் தானெடுத்துப்
பைய நிறுத்திக்கொண்டே அதில்
பாதிதான் வால்உளு வைஅரிசி
பொடித்தே உடன்சேர்த்து சேர்த்த
போதில் தைலத்தில் நாற்கழஞ்சும்
துடித்தாடும் சூதமொன்று நாற்றம்
தோன்றிய கெந்திவிருகன் ஒன்றும்
கூட்டி உத்தாமணியின் பஞ்சில்
கொள்ளவே தோய்த்ததை மெள்ளவைத்து
நாட்டில் அடக்கமுற்ற பேர்க்கு
ஞாளத்தைத் தண்டினிலே செலுத்தி
இருப்புச் சிலாகையொன்று ஞாளம்
நின்றமட்டும் விட்டுக் கொண்டிருந்தால்
உடனே எழுந்திருந்து பேசும் உண்மை
என்றே சொன்னார் இன்னமொன்று
சுடர்நாறும் கந்தகமும் காயம்
சூதம் எருக்கம்பால் வார்த்து

அரைத்து வழித்தெடுத்து வெள்ளை
ஆடையில் பூசித் திரியாக்கி
திரித்தே அனல்கொளுத்தித் தண்டில்
சேர்ந்திடும் நாளம்புகவே புகைத்தால்
அடக்கம் எழுப்புமென்றும் சொல்லிப்
போதித்தார் ஆரூடம் சோதித்தவர்

---

வீழி — ஒரு வகை மருந்துச்செடி
251—255. கடிதாய்—வேகமாய்
கஞ்சக்கலம்—வெண்கலம்
வால் உளுவை—ஒரு மருந்து (பெருஞ்சீரகமாகவும் இருக்கலாம்)
255—260. கெந்திவிருகன்—கந்தகம்
260—263. ஆரூடம் சோதித்தவர்—முதல் நூல் ஆசிரியர்

## விருத்தம்

நச்சர வான தெல்லாம் நாட்டில்மா னிடரைத் தீண்டிக்
குச்சித விடங்கள் மிஞ்சிக் கொடுவிடம் தலைமேல் கொண்டால்
வெச்ச மந்திர தந்திரத்தால் மருந்தினால் தீரா விட்டால்
உச்சித மாகத் தீர்க்கும் கெருடனை உரைக்கல் உற்றேன்

## சிந்து

வேதியர் குலத்தின்கண் காசிபர்க்கு
வினதை பயந்தெடுத்த கனயோகன்
சாதியில் பட்சிராசன் அருணனுக்குத்
தம்பியென உதித்த கம்பீரன்

அட்டமா நாகங்களைப் பாதாளம்
மட்டும் துரத்திவென்று வாகை புணைந்தோன்
துட்டனெனும் இந்திர ஜித்து
தொட்ட நாகக் கட்டுவிடந் தட்டுக்கெடவிட்ட
பெரியோன்
பலத்தினில் சவுரியத்தில் ஒப்பில்லாப்
பலசாலி யானவெகு குணசாலி
குலத்தினில் பிரமகுலன் கீழ்க்கடல்
குடகடல் தென்கடல் வடகடலும்
நொடியினில் சுற்றிவருவோன் பாற்கடல்
நடுவினில் கண்வளரும் நாரணற்கு

---

நச்சரவு—நஞ்சினையுடைய பாம்பு
குச்சித—அசுத்தமான
உச்சிதம்—அருமை

261—265. வினதை—இவள் தட்சன் குமாரி; காசிபர் தேவி, கருடன், அருணன், சடாயு, சம்பாதி, சேநன் முதலியவர்களைப் பெற்றவள்.
கனயோகன்—கருடனின் பட்டப் பெயர்

266—270. துட்டனெனும்............ பெரியோன்— இந்திரஜித்தின் நாகபாசத்தால் கட்டுண்ட இலக்கு வனைக் காப்பாற்றி நாகபாசத்தைப் போக்கி இராமனின் அருளைப் பெற்ற கதை கூறப் பெறுகிறது.

சௌரியம்—வீரம்
நாரணர்—திருமால்

கொடிவாகன மானோன் திவில்ஒரு
கோடிநிசா சரரைத் தேடி நுகர்ந்தோன்
கதியினில் நிலத்தின் காணும் நிலவும்
கனலியம் துதிசெய்யு மதிவேகன்
தாவில்நெடு மூக்கினாலும் சிறகாலும்
தடக்கையினாலும் இரு தாளினாலும்
மலைத்தவர் வெருண்டோட வென்றுசெய்
வாகை புனைந்து மனம் ஓகையுடன்
தலத்தினில் சிறுதாயாம் கத்துருமுன்
தங்கக் குடத்தமு தங்கே வைத்துச்
சாபத்தை அறத்தீர்த்த சுத்த வீரன்
தானும் தனக்கிணை த்தானானவன்
சிவதவநியமம் பெற்றோன் கெருட தியானம்
சிறகுரெண்டும் பச்சை நிறமாய்
விளர்சிவப்பாக மேனி முற்றிலும் (கண்டம்)
வெள்ளை நிறமாக விண்மண் ஒன்றாய்
அளவிடல் போலும் நிமிர்ந்த உருவமுமாக
அமுதகுடம் கரத்தில் வைத்து

---

271—275. நிசாசரர்—இரவில் சஞ்சரிப்பவர், அரக்கர் (பாம்பும் எனலாம்);
கனலி—ஞாயிறு

275. கருடன் தன் சிறிய தாயான கத்துரு என்பாள் முன் அமிர்தத்தைக் கொண்டுவந்து வைத்து தன் தாயான வினதையின் இடுக்கண் தீர்த்த வரலாறு கூறப்பெறுகிறது.

வினதையின் இடுக்கண்: இந்திரன் குதிரைவால் வெள்ளையாயிருப்பது என்றும், அன்றாயின் நினக்கு அடிமையாவேன் என்றும் வினதை கத்துருவினோடு பந்தயம் வைக்க, அவள் அதனை வஞ்சனையால் கரிய தாக்க அஃதறியாது அவளுக்கு அடிமையாகி வருந்துதல். அதனைக் களைதல்: இந்திரன் அமராவதிக்கண் கொண்டுவைத்த அமிர்தம் தரின் அவள் அடிமைநிலை ஒழியுமென்று கத்துரு சொல்ல அவளுக்குக் கருடன் அதைக் கொண்டு வந்து கொடுத்துத்தாயை அடிமைத்தளையிலிருந்து மீட்டது. (பரிபாடல், உ. வே. சா. பதிப்பு. பக். 20.)

ஓகை>உவகை—மகிழ்ச்சி
நியமம்—நெறி

திதிதரும் அசுரர்களும் அதிதி தரும்
சிறுவரும் பாற்கடல் அதனில் அமிர்தம்

கடைந்திட மேருவரையை வேரொடும்
பிடுங்கி மத்தாக நட்ட பெருமையினான்
மடந்தைக் கத்துருவெனும் தாய்சொல் சபத
மாற்றிட வேணுமென்று மனம் துணிந்து
பறந்து விண்ணுலகில் சென்று தெய்வேந்திரன்
பதியில் கருவூரில் மதிள்கதவைத்
திறந்துகொண்டு உள்புகுந்து காத்திருந்த
தேவ கணங்களையும் ஓட விரட்டி
பொற்குடம் நிறைந்திருக்கும் அமிர்தத்தைப்
பொற்புடனே எடுத்து வெளியில் வந்து

மாற்கெதிர் பொருளை அயிராபதம்
முதல் முப்பத்து மூன்று கோடி
தேவர் கின்னர முனிவர் கந்திருவர்
சித்தியர்களா சுத்தி வளைந்தோரை
பேறாக மணிகோடி செபம் செய்த
பலபணி வண்ணமாலை தரித்தவராய்
பொன்னாடை ரெத்தினமகுடம் நுதலிலும்
சென்னியிலும் தரித்த திறத்தினராய்
மாலோனைப் புயத்தில் வைத்துக் கருணைநீர்
வழிந் தொழுகிய திருநயனமுமாய்

---

280. திதி—அசுரர்களின் தாய்
அதிதி—தேவர்களின் தாய்

281—285. தேவரும் அசுரரும் பாற்கடல் கடைந்தபொழுது மேரு மலையை மத்தாகக் கொண்டு வந்து நிறுத்தியவன். கருடன்; தாயின் துன்பத்தைத் தீர்த்தவன்.
தெய்வேந்திரன்—தேவேந்திரன்
மாற்கெதிர்—போர்செய்வதற்கு எதிர்ந்த
இன்னரர்—பதினெண் கணத்துள் ஒருவர்
சித்தியர்—தெய்வமங்கையர்

285-290. நுதல் — நெற்றி
சென்னி — தலை
மாலோன் — திருமால்

பேலான விண்ணிற்பறந்து திசையெட்டும்
விளங்கவே இருளெனும் களங்கமற
வருபவராக நினைந்து கருடனை
மனதினில் தியானம் செய்ய வல்விஷங்கள்
பருதியைக் கண்ட பனிபோல் தட்டுகெட்டுப்
பறந்திடுமே உயிர் சிறந்திடுமே 293

## மருந்துப் படலம்—(விருத்தம்)

துதித்திடும் பணிகள் நான்கின் தோற்றமும் ஒடுக்கம் தானும்
விதித்திடும் வெல்வே றான சாயின விதங்கள் தானும்
பயிற்றிடும் எயிற்றால் உற்ற குணங்களும் வகுத்தேன் இப்பால்
கதித்திடும் விஷத்துக் கெல்லாம் மருந்தினைக் கழற லுற்றேன்

### சிந்து

அத்தர்தென் மருதூர் காரண
சித்தர்புர மெரித்த தேவதேவர்
மத்தொடு கடுக்கை தும்பை கங்கைபிற
வைத்த சடிலர் யோகத்த ரானோர் 295
கடுவமர்காள கண்டர் மான்மழுக்
கரத்தர்புலிச் சரமுரித் துடுத்தோர்
நடுவனை உரத்து தைத்தோர் தேடிமுன்
நாரண நான்முக ரானவர் காணாதவர்

---

291-295. பருதி — சூரியன்
பணி — பாம்பு
எயிறு — பல்
கதித்தல் — மிகுதல்
புரம் — திரிபுரம்
மத்து — ஊமத்தை
கடுக்கை—பாம்பு
சடிலர்—சடையினை உடையவர்
கடுவமர்—நஞ்சினையுடைய
காளகண்டர் — கரிய கண்டத்தை உடையவர்
புலிச்சரம் — புலித்தோல்

297. நடுவன் — யமன்
மார்க்கண்டேயன் வரலாறு இவ்வரியில் கூறப்பெறுகிறது.

சேடனுக்காக வந்நாள் சுயம்புதிரு
வுருவாக வந்த செகதீசர்
வேடனுக் கருள் புரிந்தோர் நாகய்யன்
வேதனுக்கன்று ரசவாதம் புகன்றோர்
தரித்திரந் தீரமதி மால் தனக்குமுன்
தந்தோலையர் திகிரிதனை யளித்தோர்

கிரித்தளப் படையுடையோர் பணிமொழி
கிரியர சீன்றெடுத்த கிரிமகளும்
மலர்மகள் கலைமகளும் அருந்ததி
வனதுற்கை யகலிகை மாது
தவமுறு நெடுமாலும் கௌதமன்
சதுர்முகன் பருதி சந்திர முருகன்
பாணபத்திரன் கபில னெட்டு
மானாகர் அகஸ்தியர் திசைபாலர்
சேணிலத்த மரர்களும் முனிவரும்
தெரிசித்துப் பூசைசெய்யக் கதிகொடுத்தோர்

மெய்யென நம்பும் அடியார் தங்களுடை
வெய்யவினை யகற்றி விளங்கவைப்போர்
பொய்யெனச் சொல்வர்பால் ஒருநாளும்
புகுதாதவர் வினை கருதாதவர்
கலியுக வரதரென விளங்கிய
காரணத்தர் சதுரா ணத்தர்
மலைமகள் அழகிய நாயகிதனை
வலப்பாகம் வைத்துகந்த மகிமையாளர்
பத்தர்கள் பரிபாலர் நாகலிங்கர்
பாதமலர் எனது சிரத்தில் வைத்து

---

295-300. சேடன் — ஆதிசேடன்
வேடன் — கண்ணப்பன்
நாகய்யன் — திருமருதூர் இறைவன் பெயர்
திகிரி — சக்கரம்
கிரித்தளப்படை — முத்தலைவேல்

301-305. கிரியரசன் — இமயத்தரசன்
கௌதமன் — முனிவன்
சதுரமுகன் — நான்முகன்
பருதி — சூரியன்
பாணபத்திரன் — மதுரையிலிருந்த பாடகன்

306-310. மலைமகள் — மலையத்துவசன் மகள், பார்வதி
பரிபாலர் — காப்பாற்றுபவர்

சித்தர்கள் அதிசயிக்கும் நாகமுதல்
சிற்றெறும் பாதியாய்ச் சேர்ந்த விஷங்கள்
தீர்ந்திட நசியங்களும் ஒற்றிடச் செய்யும்
விஷமும் விடம் தீண்டினவுடன்
மாந்திடற்குள் மருந்து மாத்திரையும்
மையும் குழம்பும் கையிகிள்ளாக்கையும்
சோற்றினில் பாகில் கொடுக்கு மூலிகை
துவரும் முறுக்கும் கடிவாயில் பூச
மாற்றிடு...கா...ம் அஞ்சனமும்
வகைவகை யாகவேயான் பகருகின்றேன்
சோதனை பார்க்க வேளை வேர்தின்னத்
துவக்க கசக்க விஷமில்லை என்னலாம்
போதவே இனித்ததென்றால் நல்லபாம்பு
புளிக்கில் வழலை துவர்த்திடில் விரியன்
செருக்கிடில் மயக்கர் வரள் உப்பு
உறைக்கில் சிறிய புடையன் என்று அறிவாயே
நருக்குறு மிளகுரைக்கில் மண்டலியாம்
நாக்கில் கடுக்கில் மூர்க்கனாம்
இப்படி அறிந்திடுநீ சோதனை
எல்லா விடத்துக்கும் ஏக நசியம்

செப்பவும் கேளணங்கே வெற்றிலை
சிறியமிளகு கறியுப்பு நறுக்கிக்
கண்செவி மூக்கில் பிழியஉடல் விட்டுவிண்
புகுந்திட்ட உயிர் மீண்டு வருமே

---

310-315. நசியம் — மூக்கில் இடும் மருந்து
மாந்துதல் — குடித்தல்
பாகில் — தேனில்
கடிவாயில் — பாம்பு கடித்த இடத்தில்

316-320. வேளை — ஒரு வகை மருந்துச்செடி
செருக்கிடில் — இருமிடில்
வரள்உப்பு — படிகாரம்
மிளகு — உணவுக்குரிய மிளகு

321-325. அணங்கு — பெண்

பண்ணேர் மொழியினமே முருக்கிலை
படரும் எருக்கினில் தும்பை இலையும்
பிழிந்திடில் நாசிதனில் உடல்விட்டுக்
கழிந்த உயிரும் வந்து கலந்திடுமே
குளிர்ந்திடும் துளசியிலை தும்பையிலை
கொடிய மிளகும் கறியுப்பும் கசக்கி

நாசியில் பிழிந்திடவே உயிர்விட்டுப்
பேசாமல் கிடந்த பிரேத மெழுமே
வீசிய முதல்வேகம் கண்சிவக்கில்
வெள்ளுள்ளி பெருமரப்பட்டை வசம்பு
பீநாறிப்பட்டை சிறுநீர் மூக்கினில்
பிழிந்திட முதல் வேகம் ஒழிந்திடுமே
ஆனாவிரண்டு மூன்று வேகத்துக் காற்றும்
மிளகு சுக்கு கடுகு இந்துப்புச்
சாரணை வெற்றிலையின் சாற்றினில்
தட்டி நசியமிட விட்டோடுமே

காரணமாக வேகம் நாலைந்து
கடுகுமோர் ஆறேழுக்கு நசியம்
புகன்றிடும் இலுப்பைக் கட்டி நறுக்கியே
பொடித்துச் சிறுநீர்விட்டு மூக்கில் பிழிய
அகன்றிடும் அந்தவேகம் அப்பாலெட்
டதிவேகம் வந்தெழுந்து மதி மயக்கில்

---

பண்ணேர் மொழியினம் — இசையினை ஒத்த மொழியினை உடைய பெண் இனம்

எருக்கு — எருக்கஞ்செடி
கறியுப்பு — உணவுப்பு

326-330. பிரேதம் — உயிரற்ற உடல்
வெள்ளுள்ளி — வெள்ளைப்பூண்டு
பெருமரப்பட்டை — பெருங்கள்ளிப்பட்டை. (தலைச் சுருளிஎன்றும் கூறுவர்)
பீநாறிப்பட்டை — மருந்துப் பட்டை

331-335. இலுப்பைக்கட்டி — இலுப்பைப் புண்ணாக்கு
சாரணை — ஒரு வகைப் பூண்டு

கெந்தகமுள்ளி வசம்பு மிளகுடன்
கெடியான தும்பை துளசியிலை
தந்திடு முலைப்பாலும் நாசியில்
தறுகாமல் பிழிந்திட மறுமறுகிடுமே

சீலையில் எருக்கலாம்பால் தைவேளை
சிறந்திடும் சாறும் பெரும்பறட்டைச் சாற்றொடு
வேலை வைத்துத் தீயிடு சிறுநீர்தனில்
விட விடம் அறுமே
கொடிக்கள்ளிப் பால்கறந்து சீலையில்
கொள்ளவே தோய்த்துலர்த்திச் சுக்கும் வசம்பும்
அடித்திடும் பச்சைப் பாம்பு மிளகுகாயம்
அம்புவில் வமும் சமன் கூட்டித்
திரித்திடு துணியில்வைத்துத் திரிதனதை
தீயில் கொளுத்தி நெடுமூக்கில் புகைக்க
மரித்திடும் மரணமெனினும் சீக்கிரம்
கருத்துடனே எழுப்பும் காலனில்லையே

## ஒற்றடம் துவாலை

ஒற்றிடும் வேலிப்பருத்தி தைவேளை
ஊருடன் முதலியார் பூனை வணங்கி
மற்றுள்ள வேர்குருந்தும் பொன்னிறமாய்
வறுத்துடன் ஒற்றஉயிர் நிறுத்திடுமே

---

கெந்தகம் > கந்தகம்
உள்ளி — வெங்காயம்
மறுமறுகிடும் — விஷம் நீங்கிடும்
335-340. கொடிக்கள்ளி — காரமுள்ள கள்ளி
சீலை — மருத்துவத்திற்குப் பயன்படும் காரச்சீலை
அம்பு—திப்பிலி
சமன் — சமமாக
தைவேளை — தைவளைச் செடி
எருக்கலாம்பால்— எருக்கஞ்செடியின் பால்
341-345. மரித்திடும் — இறந்திடும்
வேலிப்பருத்தி, தைவேளை—மருந்துச் செடிகள்
பூனைவணங்கி — குப்பைமேனி

கீழ்வாய் நெல்லி துளசி முருக்கிலை
    கிளறுமொடு வடக்கியிவை நாலும்
தாழாமல் இடித்தெடுத்துப் பிழிந்திடும்
    சாற்றினைச் சடலமெங்கும் தேய்த்திடப்போம்

பேய்ச்சுரை பேய்க்குமட்டி ......ளிசிலை
    பேய்ப் பீர்க்கில் சிறுநீர் விட்டிடித் தெடுத்து
தேய்த்திடு சடமுழுது விடத்தினால்
    செத்த பிணமும் எழுந்திருந்திடுமே
முறுக்கி ஆனைவணங்கி சமூலம் கொடுவந்து
    துவைத்துப் பூசி முறுக்க
உள்ளுக்குத் தூள்மருந்து கொல்லன் கோவைக் கிழங்கு
    குப்பைக் கிழங்கு கையெடுத்தொழுது முழுது
தெள்ளிய சுலை சுருளி வேரிவை
    திருந்தவிடத்துத் தெள்ளி வெருகடித்தூள்

அள்ளியே எடுத்து வெந்நீர்தனில் கொள்ளக்
    கொள்ளை விடங்கள் எல்லாம் குடிபோமே
பேயருசும் சமனாகக் கொண்டு வந்து
    பெரியகுந் தாணியில் துவைத்தெடுத்து
காய்பிஞ்சுறு காராட்டின் நீர்விட்டு
    கலந்திரவு முழுதும் கலத்தூறில்
பகலினில் நிழலுலர்த்தித் தூள் பண்ணிப்
    பலபல விடத்துக்கும் வெருகடித்தூள்
சுகமுள்ள வெந்நீரில் கலக்கியே பயந்
    துடவிட மெல்லாம் சுருண்டிடுமே

---

வடக்கி — வதக்கி
சடலம் — உயிரற்ற உடம்பு
346-350. பேய்ச்சுரை, பேய்க்குமட்டி, பேய்ப்பீர்க்கு — மருந்துச் செடிகள்
346-350. ஆனைவணங்கி — தேள்கொடுக்குப் பூண்டு
சமூலம் — வேர்முதல்
உள்ளுக்கு — உடம்பினுள்
கொல்லன் கோவை — ஒரு செடி
351-355. கொள்ளைவிடங்கள் — மிகுதியான நஞ்சு
குடி—விலகி
குந்தாணி — பெரிய உரல்

# 5. எண்ணெய்ச் சிந்து

சிந்து இலக்கியத்திற்குப் பாடுபொருள் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம் என்பதற்கு இச்சிந்து ஓர் எடுத்துக் காட்டாகும் இரண்டு அடிக் கண்ணிகளாலாகிய இச்சிந்து முழுமையாகக் கிடைக்கவில்லை. எனவே ஆசிரியர் பெயரை நாம் தெரிந்து கொள்ள இயலவில்லை. இருப்பினும் இச்சிந்தைப் பாடிய ஆசிரியர் இயற்கையாகக் கவிபாடும் திறம் பெற்றவராகத் திகழ்வதை அறிய முடிகிறது.

## நூலமைப்பு

விநாயகர், முருகன், சிவன், உமையவள், பெற்றோர், ஞானாசிரியர் ஆகியோர்க்கு வணக்கம் கூறி இச்சிந்து தொடங்குகிறது. மணவாளன் என்று குறிப்பிடப்படுகின்ற தலைவனும் அவனுடைய தலைவியும் குழந்தைப்பேறு இன்றி வருந்தினர். பின்னர் இறைவனின் அருளால் குழந்தை பிறந்தது. அக்குழந்தையைப் பெற்றோர் கண்ணும் கருத்துமாக வளர்த்து 'அண்ணாவி' எனப்படும் ஆசிரியரிடம் குருகுலக் கல்வி கற்றிட அனுப்பினர். சிறுவன் ஆசிரியரிடம் கொன்றை வேந்தன், சிலம்பு முதலிய பல நூல்களையும் கற்று வந்தான். ஒருநாள் ஆசிரியர் எண்ணெய் வாங்கி வரும்படி மாணவனை அவன் வீட்டிற்கு அனுப்பினார். எண்ணெய் வாங்கச்சென்ற மாணவன் வீட்டில் தாயிடம், "எண்ணெயினை விரைவில் தருக" என்று வேண்டுவதோடு சிந்து நிற்கிறது.

இச்சிந்து இலக்கியத்தில் குழந்தைக்குச் செய்யும் அலங்காரமும், அக்கால அணிவகைகளும், பள்ளிக்கு அனுப்பும்போது செய்யும் சடங்குகளும், குருகுல ஆசானின் அறிவு நலமும், எண்ணெய் வகைகளும், குருகுலக் கல்வியில் சட்டாம்பிள்ளை என்று குறிப்பிடப்பெறுகின்ற மாணவத் தலைவனின் நிலையும் சிந்து ஆசிரியரின் தெய்வ உணர்வும் மிகச்சிறப்பாகச் சித்திரிக்கப் பெற்றுள்ளன.

ஆசிரியர் தெய்வ உணர்வு மிக்கவர் என்பதைச் சிந்தின் தொடக்கத்தில் அமைந்துள்ள கடவுள் வாழ்த்துப் பகுதிகளால் அறியலாம். நூலாசிரியரின் வழிபடு தெய்வம் தென்குடவை என்ற ஊரிலுள்ள 'ஆனந்தவல்லி' என்கிற பெண் தெய்வமாக இருக்கவேண்டும். ஆதலால்தான் எடுத்தவுடனேயே,

"சீர்பூத்த தென்குடவைத்தேவி ஆனந்தவல்லி
பார்பூத்த செங்கமலப் பாதம் தனைப்போற்றி"

என்று பாடியுள்ளார். சிவபெருமானைக் குறிப்பிடும்போது, "அடிமுடி இல்லான் பின்னும் யாவையும் படைத்தோன்" என்று கூறித் தத்துவத்தை எளிமைப் படுத்திக் காட்டியுள்ளார்.

"ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெரும் சோதி" என்ற மணிவாசகரின் கருத்துச் சாயலை மேற்கூறப்பட்ட வரியில் நாம் காணலாம். அதுபோல எல்லா உயிர்களையும் இறைவன்தான் படைக்கிறான் என்ற தத்துவத்தை,

"முட்டைக் கருவால் முடிந்து புவிதனிலே
விட்ட இறையோன்"

என்ற வரிகளில் காட்டியுள்ளார். இத்தகையவற்றால் ஆசிரியரின் தெய்வ உணர்வு தெற்றெனப் புலனாகிறது.

குழந்தைப் பேற்றிற்காகச் செய்யும் இறை நம்பிக்கையோடு கூடிய அறச் செயல்களை ஆசிரியர் குறிப்பிடும் பொழுது,

"புத்திரனே வேணுமென்று புண்ணியம் செய்யத்துணிந்து
சத்திரங்கள் அம்பலங்கள் சாலை மடங்கள் செய்து
ஆதித்த வாரம் வாசி ஆதரித்து
நீதியுடன் தானதவம் நேராக வேபுரிய"

என்று பட்டியல் போட்டுக் காட்டுவது குறிப்பிடத் தக்கதாகும்.

குழந்தையைப் பள்ளியில் வைக்கும் பொழுது ஆனை முகனைத் தொழுது படிப்புக்குரிய ஏடு எழுதப்பெற்றது என்று குறிப்பிடுவது சமுதாயப் பிரதிபலிப்பாகும்.

## குழந்தை நலன்

இச்சிந்து ஒரு குழந்தையை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது. ஆதலால் குழந்தைப் பிறப்பு, கல்வி போன்றவை விரிவாகப் பேசப் பெற்றுள்ளன.

"காலுக்குத் தண்டைக் கழுத்துக் காறையுடன்
கோலவர்ணச் சோமனையும் கொய்து மிகவுடுத்தி
வீரச்சதங்கை விரலுக்கு மோதிரமும்
ஆர மிகப்பூட்டி அன்பாய் அலங்கரித்து
திரிபுண்ட ரீகத் திருநீறும் தான்பூசி
வெறிமாலை சுற்றி விளங்கு திலகமிட்டு
காதில் கடுக்கனிட்டுக் கனத்த முருகும்தூக்கி

எனக் குழந்தைக்கு அணி செய்து பள்ளிக்கு அனுப்பும் சொல்லோவியத் தினைச் சான்றாகக் காட்டலாம்.

## பள்ளிக்கு அனுப்புதல்

முதன் முதல் பள்ளிக்கு அனுப்பும் சடங்கில் உறவினரனை வரும் கூடிச் சிறப்புச் செய்யும் வழக்கம் சுட்டிக்காட்டப் பெற் றுள்ளது. ஆசிரியருக்குக் கொடுக்கப் பெறும் காணிக்கைகள் பட்டியல் போட்டுக் காட்டப் பட்டுள்ளது.

கற்பித்த நூல்களை அரிவரி முதலாகத் தொகுத்துக் கூறியுள் ளார் ஆசிரியர். நூல் வரிசையில்'ராசரிஷி பாடல்' என்று வருவது இளங்கோவடிகளின் பாடலை என்று எண்ண வேண்டியுள்ளது.

## குருகுல வாழ்க்கை

ஆசிரியர் இல்லத்திலேயே தங்கி குருகுலவாசம் புரியும் சிறுவர்கள், உரிய காணிக்கைப் பொருள்களைப் பெற்றுச் செல் வர். சனிக்கிழமைக்கு எண்ணெய் வாங்க வந்த சிறுவன் எந்த எண்ணையானாலும் இப்போதே கொடுத்தனுப்பு என்று விரைவு படுத்துவதாகக் காட்டியுள்ளார். இங்கே இலக்கியப் பாங்கினுக் கேற்ப எண்ணெய் வகைகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

## அக்காலக் கல்வி முறை

காலந்தாழ்ந்தால் ஆசிரியரும் அவரது ஆணை பெற்ற சட்டாம்பிள்ளையும் கொடுக்கும் தண்டனைகள் செய்யுள் அழகோடு எடுத்துக் கூறப்பெறுகின்றன.

"குட்டிப் பிரம்பாலே எட்டி அடித்திடுவான்
சட்டம்பிள்ளை துட்டனவன் சற்றும் இரக்கமிலான்"

என்ற வரிகள் சுவையுடையன.

தூதுளை விளாறு, மாதுளையம் கொம்பு என அடிக்கும் கொம்பு வகைகளும் கூறப்படுகின்றன.

"பிள்ளை நாங்கள் புலம்பி அழுகையிலே
தள்ளைநீங்கள் கண்டால்தான் பொறுக்குமோ மனது"'

என்று கேட்குமிடத்தும்,

"சுறுதிதனில் அனுப்பும் சுகம்பெறுவீர் மாதாவே", என்று சொல்லுமிடத்தும் தள்ளை, சுறுதி போலும் திசைச்சொற்கள் இடம்பெறக் காண்கிறோம். வீட்டில் இல்லை என்றாலும் வேறிடத்திலேனும் வாங்கிஅளிக்கக்கூறுகிறான் சிறுவன். தண்டனையை நினைத்தால் உடம்பு திண்ணக்கம் (மனஉரம்)இல்லாமல் இயங்குகின்றது என்னும்போது, உடல் நடுங்குவதற்கு "ஆற்றில் நட்ட கோரையினை" உவமை கூறுவது புதுமையும் பொருத்தமும் உடையது.

இவ்வாறு சிறுவன் எண்ணெய் வேண்டி நிற்கும் காட்சியில் நூல் நிற்கிறது. நூல் முற்றுப் பெற்றதற்கான குறிப்புகள் இல்லை என்றாலும் செய்தி ஓரளவு நிறைவாகவே உள்ளது.

## இலக்கியச் செவ்வி

இலக்கியம் ஒரு காலக் கண்ணாடி என்பர். இந்தச் சிந்து இலக்கியமும் அக்காலத்துக் கல்வி முறைகளின் நிறைகுறைகள் நிழலாட விளங்குகின்றது. பேச்சு வழக்குகள் பெரிதும் விரவிவர, இலக்கியச் செவ்வியும் இழைந்தொளிர இது ஒரு மக்கள் இலக்கியமாகவே விளங்குகின்றது. சிந்து நூல்களுக்கு ஏற்ப - நான்கு சீர் கொண்ட ஓசை குன்றாத கண்ணிகளைக் கொண்ட இச்சிந்து முழுமையும் கிடைத்திருப்பின் மிகச் சிறப்புடையதாக இருக்கும்.

# எண்ணெய்ச் சிந்து

## காப்பு

சீர்பூத்த தென் குடவை காப்பு தேவி ஆனந்தவல்லி
பார்பூத்த செங்கமலப் பாதம் தனைப்போற்றி 1
செப்பரிய எண்ணெய்ச் சிந்து தனைப்பாட
கற்பகக் கன்றான கணபதி காப்பாமே 2
வெள்ளைக் கலையாளே வெண்டா மரையாளே
தெள்ளரிய ஞானத் திரவியமே வந்துதவாய் 3
வீறுதரு சூரர்களை வென்றுலகைத் தானாண்ட
ஆறுமுகனே அடியாற்கு வந்துத வாய் 4
தெள்ளரிய எண்ணெய்ச் சிந்து தனைப்பாட
வள்ளி தெய்வானை மலரடியே காப்பாமே 5

---

## கடவுள் வாழ்த்து

பனிமதிச் சடையாள் ஈசன் பரமனார் பாதம் போற்றி
கனியிதழ் உமையாள் சோதி காரணி தன்னை வாழ்த்தி 6

புனிதமாம் எண்ணெய்ச் சிந்தைப் புவிமிசை பாடு தற்குத்
தனியொரு கடவுளான தந்தியைச் சிந்தை செய்வோம் 7

அடிமுடி இல்லான் பின்னும் யாவையும் படைத்தோன் என்றும்
படிநமக் களக்கும் ஈசன் பரமனார் கிருபை யாலே 8

---

1. சீர்பூத்த — சிறப்பு மிகுந்த
பார்பூத்த ... பாதம்—அன்னையின் திருவடி உலகின் தோற்றத்திற்குக் காரணம் என்றபடி. "இருதாள் நிழற் கீழ் மூவகை உலகும் முகிழ்த்தன"—ஐங்குறு நூறு
2. கற்பகக் கன்று — அருள் வழங்கும் இளங்களிறு
6. காரணி — காரணமானவள்
7. கடவுளான தந்தி — ஆனை முகக் கடவுள்

மடிதனில் அமிர்த மூட்டி வளர்த்தாய் மனதி ரங்கி
சடுதியில் அனுப்பு மம்மா சரணம் சரணம் தாயே 9

## வேறு

மண்ணுலகும் விண்ணுலகும் மற்றும் புவிவாழ்க
எண்ணும் புவியில் இருநிதியம்தான் பெருக 10
கோதில்லா ஞானக் குருதே சிகனருளால்
தீதில்லா எண்ணெய்ச் சிந்துதனைப் பாடுகிறேன் 11
ஒன்றுமில்லாக் காலம் உலகம் யாவும் படைத்து
இன்றுநமை நடத்தும் ஏகன் திருவருளால் 12
முட்டைக் கருவால் முடிந்து புவிதனிலே
விட்ட இறையோன் இரக்கம் விள்ளமுடியாது 13
எட்டாது புத்திதன்னால் பாவிக்கக் கூடாது
சட்டமெனைப் படைத்த சுவாமி கிருபையதால் 14
திட்டமதாய்ச் சூழுகின்ற தீவினைக்கெல் லாம்பிழைத்து
சட்டமாய் இப்போ தமிழறியும் காலமதில் 15
துட்டத் தனம்போக சூதுவஞ் சனையகல
பட்டமரம் தனிலே பச்சைத்தளிர் ஆனாற்போல 16
ஆவ லுடனே அண்ணாவி தன்னிடத்தில்
பாவ புண்ணிய மறியப்பள்ளிக்கு வைத்ததுவும் 17

---

9. மடிதனில் — கருவறையில்
சடுதியில்—விரைவில்
10. இருநிதியம் — பெருஞ்செல்வம்
11. கோது - குற்றம்
12. ஒன்றுமில்லாக் காலம் - மகா சங்காரகாலம், கடையூழிக் காலம்
ஏகன் – ஒப்பற்ற ஒருவன் (ஏகன் அநேகன் - திருவாசகம்)
13. இறையோன் இரக்கம்—உலகினைப் படைத்த தனிப் பெருங்கருணை
14. பாவிக்கக் கூடாது - பாவனைக்கு எட்டாது, நினைப்பரிது
14. சட்டமெனப் படைத்த
15. சட்டமாய் } சட்டம் — செப்பம். சட்ட — செப்பம் உணர்த்த நின்றதோர் இடைச்சொல் அது சட்டம் என மருவியது. (சிவ ஞானமுனிவர்)
17 பள்ளிக்கு வைத்தல் — பள்ளிக்கு அனுப்பல்

அண்ணாவி தாமும் அறிவித்த ஞானமது
நண்ணாகச் சொல்லுகிறேன் நாட்டிலெந்தன்
மாதாவே 18
மண்ணும் புவியில் மணவாளனும் மாதும்
மினைதிகச் செல்வம் மிகவாழ்ந் திருக்கையிலே 19
புத்திரனே வேணுமென்று புண்ணியம்செய்
யத்துணிந்து
சத்திரங்கள் அம்பலங்கள் சாலை மடங்கள்செய்து 20
ஆதித்த வாரம் வாசி ஆதரித்து
நீதியுடன் தானதவம் நேராக வேபுரிய 21
கண்டு சிவனார் கருணை மிகவிரங்கி
தொண்டுமிகச் செய்த தோகையாள் தன்வயத்தில் 22
சற்புத் திரனாகத் தானருளிச் செய்தனராம்
விற்புருவ மாதுநல்லாள் மேன்மையுடன்
பெற்றெடுத்த 23
வல்ல பிறையும் வளரும் வகைபோல்
செல்லக் குமரனையும் சீக்கிர மாய்வளர்த்து 24
பண்ணு தமிழைப் படிப்பிக்க வேணு மென்று
மன்னவனும் தேவியுமாய் மனதில் மிகநினைந்து 25
காலுக்குத் தண்டை கழுத்துக்குக் காறையுடன்
கோலவர்ணச் சோமனையும் கொய்து மிகவுடுத்தி 26
வீர்ச்ச தங்கை விரலுக்கு மோதிரமும்
ஆரமிகப் பூட்டி அன்பாய் அலங்கரித்து 27

---

18. அண்ணாவி — கூத்து முதலியன பழக்குவோர் — இங்கு எழுத்தறிவிக்கும் ஆசிரியரைக் குறித்தது
19. மணவாளன் — தந்தையின் பெயர்
20. சத்திரம் — தங்கும் இலவசக் கூடம்
அம்பலம் — மன்றம், சாலை — உணவிடும் இடம்.
21. ஆதித்த வாரம் — ஞாயிறு
வாசி — மூச்சோட்டம்
22. வயத்தில் > வயிற்றில்
23. சற்புத்திரனாக — உயர்ந்த மகனாக
25. பள்ளு — ஓசை
26. காறை — கழுத்தணியுள் ஒன்று
சோமன் — வேட்டி
கொய்து > கொசுவி — மடித்து
27. ஆரம் — மாலை

திரிபுண்ட ரீகத் திருநீறும் தான்பூசி
வெறிமாலை சுற்றி விளங்கு திலகமிட்டு 28
காதில் கடுக்கனிட்டுக் கனத்த முருகும் தூக்கிச்
சீதநறும் வெள்ளி எழுத்தாணி தான்சேர்த்து 29
வாத்தியார் தன்னை வரவழைத்து அந்நேரம்
கோத்திரத்தில் உள்ளோரும் கூடி மிகஎழுந்து 30
பள்ளிக் கூடத்தில் பண்பாகச் சென்றுபுக்கு
விள்ளரிய ஞான விமலன் திருவருளால் 31
சாணியைக் கொண்டு தரையை மிகமெழுகி
பேணியே தூபமிட்டுப் பிள்ளையா ரைநிறுத்தி 32
வாசமலரும் மகிழருகும் தான் சார்த்தி
நேசமிகும் தாம்பூலம் நிறைநாழி தானும்வைத்து 33
கடலைஅவல் பயறு கனிவகைகள் சர்க்கரையும்
விடலையுயர் தரமிக்க வாழைப் பழமும் 34
மாம்பழம் பலாப்பழமும் வரிசையா கப்படைத்து
சாம்பிராணி கற்பூரம் தாலத் திருவிளக்கும் 35
தாம்பிரம் வெள்ளிபொன் குருதட்சணை தானும் வைத்து
ஆம்பொருளான மத யானைமுகனைத் தொழுது 36
சீராக வாத்தியார் செய்யபனை ஓலைதனை
நேராகச் செப்பமிட்டு நிறைந்தம குடம் பிடித்து 37

---

28. திரிபுண்டரீகம் — திரிபுண்டரம், மூன்றுவரியாய்ப் பூசும் திருநீறு.
வெறிமாலை — மணமிக்க மாலை
29. முருகு — காதணியில் ஒன்று
கனத்த — பருத்த
30. கோத்திரத்தில் உள்ளோர்—சுற்றத்தார்
31. விள்ளரிய — கூறமுடியாத
32. சாணி — பசுவின் சாணம்
33. மகிழருகு — அருகம்புல்
தாம்பூலம் — வெற்றிலை பாக்கு
33. நிறைநாழி — மங்கலக்குறியாக நெல் வைத்து நிரப்பிய நாழி
34. விடலை — திண்ணிய
37. மகுடம் — தொடக்கத்தில் முழங்கும் பொருள் நிறை வுடைய சொற்கள் அறிவோம் நன்றாக என்பது போல

அரிஎன்ற எழுத்தை அப்போதி லேஎழுதி
தெரியப் படுத்தி சித்தரியும் தானெழுதி 38
கற்பகக் கன்றைக் கைதொழுது ஆதரித்து
அற்புதமாய் மைந்தனையும் அருகிலே தானிருத்தி 39
கையைப் பிடித்து கதிபெறவே அண்ணாவி
மெய்யாக அண்ணாவி மெய்ஞ்ஞான மேவழங்க 40
அரிவரி கொன்றைவேந்தன் அன்னையும் பிதாவுடனே
விரிவான எண்சுவடி மிக்க உலகநீதி 41
பிள்ளையார் விருத்தம் பெரியஅவ்வை மூதுரையும்
வள்ளுவ மாலை வளம்குறள் நாலடியார் 42
நல்லபொருளை நவிலும் திவாகரமும்
சொல்லரிய நிகண்டும் சுப்பிரமண்யர் புகழும் 43
நல்பிள்ளைத் தமிழும் ராசரிசி பாடல்களும்
நல்ல புவியில் நலமுடனே எங்களுக்கு 44
படிப்பித்தார் வேறுபல சாஸ்திரம் தன்னையும்
படித்தோம் காண் மாதாவே பாருலகில்
அண்ணாவி 45
நெடியோன் திருவருளால் நிமிடமிது தட்சணமே
வடிவாக எண்ணெய்தனை வாங்கிவரச் சொன்னார்கள்
46

---

38. அரி — கல்வி தொடங்குமுன் அறிவோம் நன்றாக எனத் தொடங்குதலின் முன் எழுத்துக்கள் — அரி — திருமாலைக் குறிப்பதாகக் கொள்ளப்பட்டது
39. கற்பகக் கன்று—ஆனைமுகன்
40. கதி — பேறு
மெய்ஞ்ஞானம் — உண்மைஅறிவு
41. அரிவரி — அகரமுதலாகக் கோவை செய்யப்பட்ட வரி வடிவ எழுத்துக்கள்
43. திவாகரம் — நிகண்டு. சேந்தன் எனும் அரசன் காலத்தில் திவாகர முனிவரால் இயற்றப்பட்டது.
சுப்ரமண்யர் புகழ் — திருப்புகழ்
44. ராசரிசி — ராஜரிஷி — இளங்கோவடிகள்
45. சாஸ்திரம் — கலை நூல்
காண் — முன்னிலை அசை
அண்ணாவி நெடியோன் — அண்ணாவியாகிய பெரியோன்
46. தட்சணம் — உடன்

என்றறிந்து நாங்கள் இயம்பியசொல் தட்டாமல்
சிந்தை மகிழ்ந்து திருத்தாள் கரம்குவித்து 47
சனி எண்ணெய்க் கென்று வந்தோம் தாயே சலியாதே
இனிதான் நல்லெண்ணெய் இலுப்பெண்ணெய்
ஆனாலும் 48
நான்கெண்ணெய் ஆனாலும் நறுநெய் ஆனாலும்
மங்கெண்ணெய் முத்தெண்ணெய் பொதுவாய்ச்
சேர்த்தெண்ணெய் 49
எந்தநோ வானதுக்கும் எருக்கிடுமே வேப்பெண்ணெய்
முதல்
எந்தஎண்ணெய் ஆனாலும் இப்போதே விட்டனுப்பு
50
பேரம்மை சிற்றம்மை பெரியதாய் உடன்பிறந்தாள்
அத்தைமகள் மதனி அன்பான மச்சினமார் 51
இத்தனை பேரும் எமக்கிரங்கி எண்ணெய் தனைச்
சித்தம் மகிழ்ந்து சீக்கிரமாய்த் தந்தனுப்பும் 52
செல்லக் குமாரருங்கள் திண்ணையிலே வந்துநிற்க
அல்லற் படுத்தாதே எங்கள் அன்புடைய மாதாவே 53
முத்துக் குமாரருங்கள் முத்தத்தில் வந்துநிற்க
சித்தம் இரங்கிச் சீக்கிரத்தில் எண்ணெய்தனைத் 54
தந்தனுப்பும் எங்களுக்குத் தாயேநீ மாதாவே
செல்லக் குமாரர் உங்கள் திண்ணையிலே வந்துநிற்க
அல்லற் படுத்தாதே எங்கள் அன்புடைய மாதாவே
55
முத்துக் குமாரருங்கள் முத்தத்தில் வந்துநிற்க
சித்தம் இரங்கிச் சீக்கிரத்தில் எண்ணெய்தனைத் 56
தந்தனுப்பும் எங்களுக்குத் தாயேநீ மாதாவே
மைந்தன் தனக்கிரங்கி வார்த்துவிடு எண்ணெய்தனை
57

---

47. திருத்தாள் கரம் குவித்து — திருவடிகளைத் தொழுது
50. எருக்கிடும் — அழித்திடும்
51. பேரம்மை — பெரிய தாய்
சிற்றம்மை — சிறிய தாய்
மதனி — மைத்துனி
54. முத்தத்தில் — முற்றத்தில்
55. அல்லல் — துன்பம்
56. வார்த்தல் — கொடுத்தல்

பிள்ளை தனக்கிரங்கி பெற்றார் உதவிசெய்தால்
கொள்ளை தவம்பெறுவீர் கொற்றவன்போல்
வாழ்ந்திடுவீர் 58
அன்ன மணியே அருமையுள்ள மாதாவே
சின்னஞ்சிறு பாலகர்மேல் சித்தம் இரங்கியன்பாய்
59
மாதா மகிழ்ந்தெண்ணெய் வார்த்திடுவார் என்று
சொல்லி
ஆதலால் வந்தோம்காண் அன்னையரே நீர்கேளிர் 60
சோதிதிரு அண்ணாவி சொன்ன மொழிதவறி
நீதியுடனே நெடுநேர மான துண்டோ 61
எங்களையும் அண்ணாவி எண்ணாமலேஅடிப்பார்
பங்கய முகத்தழகு பவளவிதழ்த் தாய்மாரே 62
நன்னயமாய் எண்ணெய்தனை நலமாகத் தந்தனுப்பும்
இன்னமொரு சற்றுநேரஞ்சென்றால் எங்களையும்
அண்ணாவி 63
கோவித் திடுவார் கொடிப்பிரம் பாலடிப்பார்
நாவூற நகட்டுவார் எங்க ளைத்தான் 64
அல்லாமல் சட்டம்பிள்ளை அவன்கொடுமை
சொல்லரிது
செல்லப்பிள்ளை யானாலும் சினமே பொறுக்கறியான்
65
கோதண்ட ராமனிலே கூசாமல் போட்டிடுவான்
மாதண்ட மாக வடுப்படவே தண்டிப்பான் 66
முட்டுக்கண்ணி போட்டு முதுகில்கல் எடுத்திடுவான்
கட்டியடிப்பான் கசையால் உரித்திடுவான் 67

---

58. கொள்ளை — மிகுதி
60. காண் — முன்னிலை அசை
கொற்றவன் — அரசன்
62. பங்கயம் — தாமரை
64. நகட்டுவார் — நசுக்குவார்
65. சட்டம்பிள்ளை — மாணவத்தலைவன்
66. கோதண்டம் — பள்ளிச் சிறுவர் தண்டனையில் நின்று (பாடம்) கோதண்டந்தன்னிலே
வடுப்படவே — காயம்படவே
67. கசையால் — சவுக்கால்

தூதுளை விளாறுவெட்டித் துடிக்க அடித்திடுவான்
மாதுளையம் கொம்பாலே மலர அடித்திடுவான் 68

குட்டிப் பிரம்பாலே எட்டி அடித்திடுவான்
சட்டம்பிள்ளை துட்டனவன் சற்றும்
இரக்கமில்லான் 69

காணிகன் கையாலும் காசினியி லண்ணாவி
தாணிகன் கையாலும் தானடியே பட்டுழன்று 70

பிள்ளை நாங்கள் புலம்பி அழுகையிலே
தள்ளைநீங்கள் கண்டால்தான் பொறுக்குமோ
மனது 71

ஆதலினால் நாங்கள் அவசரமாய்ப் போவதற்கு
மாதாவே தாயே மனதிரங்கி யேயனுப்பும் 72

வந்தோம் வெகுநேரம் வருத்தமிகக் காணுதம்மா
தந்தை மனதிரங்கி தாய்மாரே நீங்களும்தான் 73

நிறுத்திவிட்டுப் பாராதே நீதியில்லாத் தாய்மாரே
சுறுதிதனில் அனுப்பும் சுகம்பெறுவீர் மாதாவே 74

உந்தனுட வீட்டிலெண்ணெய் உண்டில்லை யானாலும்
எந்த வீட்டிலானாலும் வாங்கிவிடு எண்ணெய்தனை
75

உண்டான் எண்ணெய் ஒருகரண்டி குறையாமல்
கொண்டாந்து விட்டிடுவீர் கூர்மையுள்ள மாதாவே
76

பழஞ்சோ றுண்ணாமல் வயிறு கொதிக்குதம்மா
குழைந்து விழுகுதம்மா கொவ்வையிதழ் மேனி
யெல்லாம் 77

---

68. தூதுளை விளாறு — தூதுவளை வளாறு
69. துட்டன் — கொடியன்
70. தாணிகன் — உரிமை உடையவன் (ஸ்தாணிகன்)
71. தள்ளை — தாய்
74. சுறுதி — சுறுசுறுப்பு — விரைவு
75. உந்தனுடை — உன்தன் உடைய என்பதன் பேச்சுத்திரிபு
76. கொண்டாந்து — கொண்டுவந்து என்பதன் பேச்சு வழக்கு
77. பழஞ்சோறு — நீரிட்டசோறு

வேர்த்து நடுங்குதப்பா மெய்சோர்ந்து காணுதிப்போ
ஆத்தில் நட்ட கோரைகள்போல் அலையுது சடல
மெல்லாம் 78

திண்ணக்க மில்லாமல் தியங்குதே என்னுடம்பு
அண்ணாவி தாமும் அடிப்பாரென் றென்மனது 79
உள்ளம் பதறுதம்மா ஒளிச்சுதான் போகவென்று
கள்ளமனம் போலே கலங்குதம்மா உள்ளமெல்லாம்
80

சட்டமெழுதித் தயவுடனே தான்கணக்கு
திட்டமதாய்ப் பார்க்கச் சிறுவர் தனக்கிரங்கி 81
ஆத்தாள் எனப்பயின்ற அன்னையே எண்ணெய்தனை
(முற்றுப்பெறவில்லை)

---

78. ஆற்றில் நட்ட கோரை — அலைதலுக்கு உவமை
79. திண்ணக்கம் — மனஉரம்
ஒளிச்சு — ஒளிஞ்சு

## பின் இணைப்பு-I

# கிடைத்த சிந்து நூல்களின் குறிப்பு

(இவை பெரும்பாலும் க்ட்டுரை ஆசிரியரிடமும் சில சென்னை மறைமலையடிகள் நூல் நிலையத்திலும் உள்ளன).

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் | யாப்பு | அளவு | பதிப்பித்த ஆண்டு | பதிப்பித்தவர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்து | சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் | — | 25 தலைப்புகள் | 1865, 1891 | கு. அழகிரிசாமி |
| 2 | திருப்போரூர் ஸ்ரீகந்தர் சிந்து | புரிசை அஷ்ட்டாவதானம் சபாபதி முதலியார் | இருவரிச் சந்தம் | 132 கண்ணிகள் | 1871 | கடம்பூர் வேதகிரி முதலியார் & அப்பாசாமி முதலியார் |
| 3 | திருப்போரூர் முருகர் சிந்து | — | மூன்றுவரிச் சந்தம் | 46 பாடல்கள் | 1887 | திருப்போரூர் கிருஷ்ணப்பச் செட்டியார் |
| 4 | பீபில்ஸ்பார்க் வழி நடைச்சிந்து | — | சந்தம் | — | 1887 | சகலகலா நிலைய அச்சகம், சென்னை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | ஆத்திச் சூடிச் சிந்து | சொக்கலிங்கம் (குறிப்பால்) | உயிர், மெய் வர்க்கங்கள் | — | 1887 | ,, |
| 6 | ஆண்பிள்ளை, வீண் பிள்ளைச் சிந்து | — | கண்ணிகள் | — | 1887 | கிருஷ்ணப்பச் செட்டியார், கண்ணலூர் |
| 7 | கண்ணாட்டிச் சிந்து | கங்காதரன் (குறிப்பால்) | ,, | 27 பாடல்கள் | 1888 | சின்னைய நாடார் பிரஸ், திருப்பற்றூர் |
| 8 | அரங்கநாதர் சிந்து | திரிசிரபுரம் உத்தமர் கோயில் துரை ராமானுஜ தாசர் | சிந்து மெட்டு | 50 பாடல்கள் | 1890 | கலைக்கியான முந்திரா அச்சுச் சாலை |
| 9 | ஈட்டிக்காரனிடத்தில் கடன் பட்டு ஓட்டம் பிடிக்கும் சிந்து | செஞ்சி ஏகாம்பர முதலியார் | தெம்மாங்கு மெட்டு | — | 1894 | தேவந்த வாக்கம், இராசகோபால முதலியார் அச்சகம் |
| 10 | காரமடை விபத்துச் சிந்து | — | கண்ணி பல்லவி அனுபல்லவி சரணம் | 33 கண்ணிகள் | 1894 | ஒன்னையக் கவுண்டர் பரப்பிரமமுத்திரா அச்சகம் |

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் | யாப்பு | அளவு | பதிப்பித்த ஆண்டு | பதிப்பித்தவர் |
|---|---|---|---|---|---|---|
| 11 | பிபில்ஸ்பார்க் ரவுண்டு பற்றிய சிந்து | ஆற்காடு முனுசாமி (குறிப்பால்) | பல்லவி அனுபல்லவி சரணம் | — | 1897 | சகலகலா நிலைய அச்சகம் |
| 12 | பெண்புத்தி மாலை என்னும் நீதிச் சிந்து | முனுசாமி (குறிப்பால்) | 4வரிச் சந்தம் | 13 பாடல்கள் | 1897 | திருப்பதி ரத்ன முதலியார் அச்சகம் |
| 13 | காலணாச் சீட்டின் விநோதச் சிந்து | திருப்பத்தூர் சரவண முதலியார் | பத்து வரிச் சிந்து | 6 பாடல்கள் | 1898 | சி. என் பிரஸ் திருப்பத்தூர் |
| 14 | குள்ளத்தாராச் சிந்து | — | கண்ணி | 54 பாடல்கள் | 1898 | வாணிவிலாச அச்சகம் |
| 15 | திருஞான சம்பந்த மூர்த்திகள் சரித்திர ஓரடிச் சிந்து | வீமநாயக்கன் பாளையம் கண்டித் தெரு பெண்கள் போஸ்ட் மாஸ்டர் தேவார தியாகராஜ பிள்ளை | ஓரடி மெட்டு | — | 1905 | சொந்தப் பதிப்பு கிச்சினர் அச்சகம் சென்னை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 16 | புரோம்பு நகரில் எழுந்தருளியுள்ள சிவசுப்பிரமணியக் கடவுள் காவடிச் சிந்து | மதுரை மாவட்டம் பெருநாழி பி.என்.எஸ் சிவஞானம் பிள்ளை | சிந்து மெட்டு, ஆனந்தக் களிப்பு | 101 பாடல்கள் | 1909 | நகரத்தார்; பர்மா எக்கோ பிரஸ் ரங்கூன் |
| 17 | திருக்களர் கோவில் கட்டிய சாமியார் இறப்பு பற்றிய வைபவச் சிந்து | மன்னார்க்குடி மணிக் கடை வியாபாரம் கோ. சுந்தர ராஜச் செட்டியார் | கண்ணிகள் | 26 பாடல்கள் | 1911 | இராமசாமிப் பிள்ளை, மேலூர் |
| 18 | தனவைசியர் சீர்திருத்த நொண்டிச் சிந்து | தேவகோட்டை அரு. பழ. லெ. சின்ன லெட்சுமணன் செட்டியார் | சந்தம் | — | 1914 | விவேகபானு அச்சகம்; மதுரை |
| 19 | தில்லை விளாக மான்மியச் சிந்து | வைத்தியநாத சர்மா | சிந்துமெட்டு | — | 1922 | ஸ்ரீகோமளாம்பா அச்சகம், மதுரை |
| 20 | தென்னிந்திய ரயில்வே எனும் கர்னாடகப் புகை வண்டியின் சிந்து | வீரபத்திரர் (குறிப்பால்) | இருவரிச் சந்தம் | 47 கண்ணிகள் | 1923 | சங்கநிதி விளக்க அச்சகம், சென்னை |

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் | யாப்பு | அளவு | பதிப்பித்த ஆண்டு | பதிப்பித்தவர் |
|---|---|---|---|---|---|---|
| 21 | கள்ளுக்கடைச் சிந்து எனும் குடியர் சிந்து | சிறுமனவூர் முனிசாமி முதலியார் | பல்லவி, அனுபல்லவி, சரணம் | — | 1923 | வித்தியாதர நகர அச்சகம், சென்னை |
| 22 | மதன சுந்தரி ஓரடிச் சிந்து | — | விருத்தம் சந்தம் | 19 பாடல்கள் | 1923 | சங்கநிதி விளக்க அச்சகம், சென்னை |
| 23 | டம்பாச்சாரியார் மீது மதனசுந்தரி பாடுகின்ற சிறப்புச் சிந்து | — | சந்தம் | — | 1923 | சங்கநிதி விளக்க அச்சகம். சென்னை |
| 24 | ஆத்திச்சூடிச் சிந்து—மற்றொரு பதிப்பு | ராசரத்தினம் (குறிப்பால்) | உயிர், மெய் வர்க் கங்கள் | — | 1923 | ,, |
| 25 | குள்ளத்தாராச் சிந்து—மற்றொரு பதிப்பு | — | கண்ணி | 54 பாடல்கள் | 1923 | நிரஞ்சன விலாச அச்சகம், சூளை சென்னை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 26 | எட்டிகுடி வடி வேலர் பேரில் ஞானத் தங்கச் சிந்து | மதுரகவி—மௌன குரு ருத்ர மூர்த்தி (குறிப்பால்) | ,, | 51 பாடல்கள் | 1923 | பெரிய நாயகி அம்மன் அச்சகம், சென்னை |
| 27 | கண்ணாட்டிச் சிந்து மற்றொரு பதிப்பு | கங்காதரன் (குறிப்பால்) | ,, | 27 பாடல்கள் | 1923 | சங்கநிதி விளக்க அச்சகம் சென்னை |
| 28 | இராமாயணத் திருப்புகழ்க் காவடிச் சிந்து | விஜயபுரம் வித்து வான் வெ. நா. சபாபதிப் பிள்ளை | சந்தம் | — | 1924 | மதுரை இ. இராம சாமிக் கோனார் |
| 29 | கண்டனூர் கார்த்திகை மாதக் கடைசிச் சோமவார வழி நடைச் சிந்து | கோவில் பட்டி தாலுகா பாண்டவர் மங்கலம் சங்கர நாராயணபாரதி | சந்தம் | — | 1924 | கிருஷ்ண விலாச அச்சகம் கும்பகோணம் |
| 30 | சாவித்திரி கும்மிச் சிந்து | மகாவித்துவான் கவி ராஜ கந்தசாமிப் பிள்ளை | கும்மி திருப்புகழ் தெம்மாங்கு மெட்டு | 80 பாடல்கள் | 1925 | சென்னை டி. எஸ். ராமானுஜ ஐயங்கார் |
| 31 | மயிஉம் ஸ்ரீ சிவ சுப்பிரமணியர் செந் தமிழ்ச்சிந்து—முதல் பாகம் | ச. சு சங்கரலிங்க நாடார் | பல்லவி அனு பல்லவி சரணம் | — | 1926 | திண்டிவனம் எம். ஏ. வடிவேலு முதலியார் |

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் | யாப்பு | அளவு | பதிப்பித்த ஆண்டு | பதிப்பித்தவர் |
|---|---|---|---|---|---|---|
| 32 | இரங்கோன்அதிசயக் காவடிச் சிந்து | ப. து. வி. திருமால் கோன் | சிந்து மெட்டு | — | 1926 | கு. இராதா கிருஷ்ணன் |
| 33 | எட்டயபுரம் மகா ராஜா தேக வியோகச் சிந்து | — | மூன்று வரிச் சங்கம் | 70 பாடல்கள் | 1927 | அ. ஆதிமூலப் பிள்ளை சூளை, சென்னை |
| 34 | கோவலன்சரித்திரத் திருப்புகழ்க் காவடிச் சிந்து | விரகாலூர் சுப்பையா பிள்ளை | சந்தம் | | 1929 | இ. இராமசாமிக் கோனார் மதுரை |
| 35 | வள்ளி சரித்திரச் சந்தச்சிந்து | அஷ்ட்டாவதானம் சி. ஆ. கனக சபை பிள்ளை | ,, | 25 பாடல்கள் | 1930 | அண. ராமசாமிச் செட்டியார் |
| 36 | வெங்கடேசப் பெருமாள் சாட்சிச் சிந்து | எஸ். டி. மாணிக்க நாயகர் | கும்மி மெட்டு | 40 பாடல்கள் | 1930 | மயில் வாகனன் பிரஸ், சூளை, சென்னை |
| 37 | செங்கோட்டை ரயில்வே பரிதாபச் சிந்து | கே.எஸ்.செயலட்சுமி அம்மாள் | பாரதி யார் பாடல் மெட்டு | — | 1938 | ஏ. எஸ். சுந்தர ராஜக் கோன்,மதுரை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 38 | கந்தன் காவடிச் சிந்து | நாவண்மை நல்லார் அடியார் பெ. சு. பாலராஜ பாஸ்கரர் | சந்தம் | 12 பாட்ல்கள் | 1947 | எஸ். வேதாசல முதலியார் |
| 39 | குருசாமிக் கவுண்டனின் கொலைச் சிந்து | விழுப்புரம் வட்டம் தென்னமாதேவி டி.. என். தங்கவேலு | தெம்மாங்கு கும்மி குறவஞ்சி | 60 பாடல்கள் | 1955 | கிருஷ்ண விலாசம் பிரஸ், திண்டிவனம் |
| 40 | கோவிந்தம்மாள் சதி மோசச் சிந்து | ,, | தெம்மாங்கு கும்மி நொண்டிச் சிந்து வசனம் | 5 பாடல்கள் | 1958 உக்குப் பின் | கலைமகள் பிரஸ் விழுப்புரம் |
| 41 | லாரி விபத்துப் பாட்டு | ,, | தெம்மாங்கு கும்மி லாவணி | — | 1965 | சொந்தப்பதிப்பு |
| 42 | வீடூர் அணை உடைந்த வெள்ளச் சிந்து | ,, | தெம்மாங்கு கும்மி, ஓரடி | — | 1966 | ,, |
| 43 | சுப்பிரமணியர் திருவிளையாடல் என்னும் வளையல் சிந்து | ,, | 4 வரிச் சந்தம் | 65 பாடல்கள் | 1968 | ஜி. தயானந்தன் கம்பெனி ஆர். ஜி. பதி |

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் | யாப்பு | அளவு | பதிப்பித்த ஆண்டு | பதிப்பித்தவர் |
|---|---|---|---|---|---|---|
| 44 | கோபால் நாயகர் கொலைச்சிந்து | கோபால் நாயகர் | சிந்து மெட்டு | 67 பாடல்கள் | 1972 | கம்பெனி |
| 45 | திருக்குறள் காவடிச் சிந்து | புலவர். பொ. முனியப்பன் | 8 வரிச் சிந்து | 108 பாடல்கள் | 1977 | சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை. |
| 46 | தோங்குவா நகரில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ சிவசுப்பிர மணியர் காவடிச் சிந்து | சிவகங்கை ந. மு. செல்லம் பிள்ளை | 4 வரிச் சந்தம் | 100 பாடல்கள் | விரோத கிருது தை | பாண்டியன் அச்சகம், இரங்கூன் |
| 47 | எட்டிகுடி சுவாமி பேரில் எழுதிய நொண்டிச் சிந்து என்னும் வேல் பாட்டு | தங்கவேலுப் பிள்ளை | நொண் டிச் சிந்து | — | — | ஸ்ரீ மகள் கம்பெனி சென்னை |
| 48 | குன்றக்குடி குமரன் கோவில் பேரில் நொண்டிச் சிந்து | — | — | — | — | — |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 49 | தேவடிச் சிந்து | — | சந்தம் | — | — | — |
| 50 | கலியுகச் சிந்து | சிறுமனவூர் முனுசாமி முதலியார் | ,, | — | — | ஸ்ரீமகள் கம்பெனி சென்னை |
| 51 | காவடிச் சிந்து | பாண்டித்துரைத் தேவர் | — | — | — | — |
| 52 | காந்தி மரணச் சிந்து | — | — | — | — | — |

## பின் இணைப்பு II

### பெயரளவில் மட்டும் தெரிந்த நூல்கள்

| எண் | நூல் | ஆசிரியர் |
| --- | --- | --- |
| 1. | இராமாயணச் சிந்து | வயித்தியலிங்கச் செட்டியார் |
| 2. | குறுக்குத்துறை முருகக் கடவுள் மீது சிந்து | வ. நா. காமாட்சிநாதன் செட்டியார் |
| 3. | திருச்சிற்றம்பல தேசிகக் கூத்து | தொட்டிக் கலை சுப்பிரமணிய முனிவர் |
| 4. | நடேசர் சிந்து | — |
| 5. | நெல்லைச்சிந்து | வ. நா. காமாட்சிநாதன் செட்டியார் |
| 6. | ஸ்ரீநெல்லையப்பர் பேரில் சிந்து | வ. நா. காமாட்சிநாதன் செட்டியார் |
| 7. | ஸ்ரீகிருஷ்ண பகவான் அலங்காரச் சிந்து | ஏகாம்பர முதலியார் |
| 8. | சங்கரநயினார் கோயில் அலங்காரச் சிந்து | முத்தையா முதலியார் |
| 9. | நந்தனார் ஓரடிச் சிந்து | த. வா. ம. அங்கமுத்துப் பிள்ளை |
| 10. | சு. வெ. அழகுச் செட்டியார் அவர்கள் பேரில் கப்பற் சிந்து | பாட்சாப் புலவர் |
| 11. | குன்றக்குடி முருகர் கோட்டையூர் காவடிச் சிந்து | சிதம்பரஞ் செட்டியார் |
| 12. | திருப்பரங்குன்றம் சிவசுப்பிரமணியக் கடவுள்மீது காவடிச் சிந்து | சங்கமுத்துப் பிள்ளை |
| 13. | திருவலஞ்சிக் குமரக் கடவுள் காவடிச் சிந்து | எஸ். சுப்பிரமணியப் பிள்ளை |
| 14. | பினாங்கு தண்ணீர் மலை வடிவேள் காவடிச் சிந்து | இராமநாதச் செட்டியார் |

| | | |
|---|---|---|
| 15. | கண்டவராயன் பட்டி ஸ்ரீ காடப்பிள்ளை ஐயனார் ஸ்ரீவல்லநாட்டுக் கருப்பையா காவடிச் சிந்து | முத்தழகு |
| 16. | ஆத்தங்குடி அந்தரனாட்சி அம்மாள் சரித்திரச் சிந்து | கரு. கருப்பையாசேர்வை |
| 17. | மயில்ராவணன் சரித்திரத் திருப்புகழ்ச் சிந்து | கே. வி. கதிர்வேல் பிள்ளை |
| 18. | கட்டுத் தங்கச் சிந்து | வீரக்கவிராசன் |
| 19. | சின்னத் தங்கச் சிந்து | வீரக்கவிராசன் |
| 20. | பெரியத் தங்கச் சிந்து | வீரக்கவிராசன் |
| 21. | பார்த்தசாரதிப் பெருமாள் நடபாய் சிந்து | — |
| 22. | இந்தியா, பர்மா, மலாய், டாப்பு நொண்டிச் சிந்து | நாநாகிருஷ்ணா |
| 23. | சித்தராரூட நொண்டிச்சிந்து | — |
| 24. | ரெங்கூன், பர்மா, டாப்பு நொண்டிச்சிந்து | சீ. இராமசாமிஐயங்கார் |
| 25. | கண்ணப்ப நாயனார் சரித்திர நொண்டிச் சிந்து | — |
| 26 | பிரம்மாண்ட புராணமென்னும் அறுபத்து மூவர் நாயன்மார் உண்ணும் மிட்டாய்ச் சிந்து | மு. எல்லப்பப்புலவர் |
| 27. | கட்டபொம்மன் சிந்து | — |

# சொல்லகராதி

(முதல் எண் சிந்தையும், இரண்டாவது எண் வரியையும் குறிக்கும்)


அகங்காரம் 2 - 17
அசலார் 2 - 17
அஞ்சுகம் 3 - 78
அஞ்சிறைத் தும்பி 3 - 226
அண்டர்கோன் 1 - 4
அத்திமுகன் 3 - 5
அதிநேரம் 2 - 17
அந்தரம் 3 - 73
அபிராமி 3 - 3
அய்வர் 3 - 27
அயில் 2 - 24
அளகம் 3 - 83
அன்னிதம் 3 - 89
அனாதி 2 - 9
அனுதினம் 3 . 4
ஆதித்தவாரம் 4 - 25
ஆரண்யம் 3 - 95
ஆராதகாலம் 3 - 16
ஆலோலம் 2 - 25
ஆனந்தக் களிப்பு 3 - 12
இங்கிதம் 3 - 205
இச்சணமே 2 - 18
இண்டம் செடி 2 - 26
இப்பம் 3 - 79
இரத்த மண்டலி 4 - 116
இருதலை மணியன் 4 - 113
இளையாமலே 2 - 15
இறைப்போது 3 - 141
ஈசன் 4 - 168
ஈட்டம் 3 - 230
உகிர் 4 - 95
உச்சிதம் 4 - 51
உத்தரம் 3 - 50
உத்தளம் 3 - 39
உந்தனை 2 - 24
உபாங்கம் 3 - 17
உரகம் 4 - 31
உளைச்சல் 2 - 17
உவணகிரி 3 - 175
ஏகன் 5 - 12
ஏகும் வழி 2 - 26
ஏசல் 2 - 26
ஏந்திழை 3 - 81
ஏர்பெருகு 3 - 4
ஏலவே 3 - 57
ஏறுமயில் 3 - 14
ஐங்கரன் 3 - 8
ஓங்காரம் 3 - 32
கங்காதரன் 2 - 1
கஞ்ஞாறு 3 - 192
கட்செவி 4 – 20
கடாட்சம் 4 – 1

கணேசன் 2 – 14
கதலி 3 – 45
கர்த்தன் 1 - 11
கரா 3 - 149
கல்கத்தா 2 - 12
கலிக்கம் 4 - 72
கலிப்பு 4 - 99
கலியுகவரதன் 3 - 114
கலைவாணி 2 - 32
கவிவாணர் 2 - 7
கவுமாரி 3 - 30
கன்னடியன் 2 - 5
கஸ்தூரி வாரணம் 3 - 166
காமன் 2 – 20
காரணன் 3 - 144
காலிகள் 2 - 4
கிரிவாசன் 1 – 4
கிள்ளைகள் 2 - 29
குஞ்சரிபங்கன் 1 - 5
குடோரி 4 - 228
குணவிதரணம் 2 - 31
குந்தாணி 4 - 352
கும்பகர்ணன் 3 - 147
குவலயம் 4 - 15
குல்லை 3 - 236
கூவரகு 2 - 17
கேலிகள் 2 - 29
கொங்குதேசம் 2 - 10
கொலு 2 - 28
கோரணி 3 - 104
சகாயன் 3 - 27
சந்தவரை 3 - 1
சந்திரவட்டம் 2 - 16
சம்மதி 3 - 121
சமர்த்தி 2 - 28
சரவணைகள் 3 - 47
சவுபாக்கியம் 3 – 6
சாகரம் 2 - 1
சாலோகபதம் 4 - 145
சித்தராரூடம் 4 - 2
சில்லார்க்கு 2 – 23
சிவகிரி 1 - 2
சிவனார்பரன் 2 - 23
சுகிர்தம் 3 - 61
சுளகு 4 - 87
சூராதிசூரன் 3 - 15
சூரிய வட்டம் 2 - 16
செஞ்சரண் 3 – 151
செந்தூர் 3 – 25
செருவி 2 - 27
செவ்வட்டை 4 – 129
சென்னி 3 - 52
சொக்கர் 3 - 107
சோமன் 5 - 26
சௌரியம் 4 - 268
ஞாளம் 4 - 235
ஞானதேசிகன் 1 - 6
தங்கப்பிரகாசம் 2 - 4
தண்டைக்கால் 3 - 30
தத்திமொழி 3 - 3
தத்தையர் 4 - 234
தந்திமுகன் 1 - 1
தவிட்டரிசி 2 - 17
தாசன் 2 - 32
தாண்டவராயன் 1 – 5
தாரா 3 - 278
திங்கள் 3 - 51
திண்டிறல் 3 - 157
திரவியம் 2 - 9
துக்காணி 2 - 12
துங்கமாமனம் [illegible]
துலக்கம் 3 - 132
தூம்பு 2 - 1
தெய்வானை 2 - 14
தேசு 4 - 214
தொலையாவழி 2 - 13
தோட்டிப்பல் 4 - 64
நகட்டுவார் 5 – 64
நச்சரவு 4 - 263
நசியம் 4 - 72

நடுவன் 4 - 297
நமச்சிவாயப்புலவர் 3 - 212
நயனம் 4 – 98
நாமம் 3 - 13
நாவலர் 2 - 32
நாளம் 4 - 262
நிசாசரர் 4 - 271
நிருதி 4 - 168
நிலவரம் 3 - 201
நிறைநாழி 5 - 33
நெட்டுடல் 4 - 205
நெட்டுயிர்ப்பு 4 - 154
நெட்டூரம் 2 - 30
நெத்தி 2 - 22
பட்டம் 2 - 22
பண்டாரம் 3 - 193
பத்திருகரம் 3 - 144
பதக்கம் 3 - 44
பரிகாசம் 2 - 24
பன்னகம் 3 – 244
பாண்டிக் குறவர் 3 - 23
பாளையப்பட்டு 2 - 16
பிரசம் 3 - 225
பிரசங்கம் 3 – 235
பீற்றல் 3 - 99
புங்கம் 3 - 239
புண்டரிகம் 4 - 3
புலிமுகப்பூச்சி 4–107
புள்ளடி 4 - 41
பூலோக நாயகன் 3 - 6
பொருவார் 2 - 21
போங்காணும் 2 - 21
மகுடம் 5 - 37
மட்டி 2 - 21
மண்டலீகன் 3 - 139
மணியம் 3 - 218
மத்தகம் 3 - 41
மத்து 4 - 295
மதனி 5 - 51
மய்யல் 2 – 27
மரகதம் 3 - 34
மருக்கொழுந்து 3 - 34
மழமாகவும் 2 - 9
மாங்கிசம் 4 - 70
மிஞ்சி 3 - 57
மித்திர பேதகம் 3 - 91
மின்னரசு 3 - 80
மெய்ப்பு 4 - 232
மோகம் 2 - 27
யாழ்ப்பாணம் 2 - 8
யோசனை 3 - 31
ராச ரிசி 5 - 44
ராகு 4 - 147
ருத்திரன் 3 - 148
லக்கு 3 - 61
வச்சிரம் 1 - 18
வசியம் 3 - 111
வம்பு 3 - 131
வன்மம் 4 - 68
வாரணம் 3 - 143
விகடம் 2 - 22
விசாகன் 3 - 48
வித்தாரம் 3 – 39
விபூதை 2 - 31
விற்பக்கம் 4 - 195
வெகுமானம் 3 – 257
வெகுமானி 1 - 9
வெதுப்பம் 4 - 202
வெள்ளாளன் 4 - 38
வெறிமாலை 5 – 28
வேங்கைமரம் 3 - 22
வேலாயுதம் 3 - 23
வேள்விமலை 2 - 30
வையாபுரி 3 - 83
ஸ்தம்பனம் 2 - 28
ஜெகமோகனம் 2 - 13
ஸ்ரீரங்கம் 2 - 10